

மங்கையர்
மலர்
ன் ஒரு படம்-ராதா
MANGAYAR MALAR
மே '81 ரூ.1-50



"எனது கூந்தல்
அடர்த்தியாகவும் பட்டுப்
போல் மிருதுவாகவும்
வளரக் காரணம்"
V.V.D
தேங்காய்
எண்ணெய்
உங்கள் தேவைக்கேற்றபடி
பலவித பாக்கிங்குகளில்
கிடைக்கின்றது.
V. V. தனுஷ்கோடி நாடார் & சன்ஸ்
தூத்துக்குடி-628 001
V.V.D
COCONUT OIL
EP-VVD-1005

மாங்கையர் மலர்

மே 1981

பக்கம்

(டேபிள் க்ளாத்)
எம்பிராய்டரி -நிர்மலா தேசிகன்



கைதிகள்
(முழுநாவல்) வி. மஞ்சுளா ரமேஷ்



சந்தா விவரம்
தனிப்பிரதி ரூ. 1-50
ஆண்டுச் சந்தா ரூ. 18/-
ஆறு மாத சந்தா ரூ. 9/-

Printed and Published by V. Murali on behalf of Messrs Bharathan Publications Private Limited, at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras-600 032 (Phone: 431543) Editor: K. Kasturi Rangan

என்  கதையால் எனக்கு வந்த பிரச்னை!

ஐநூறுக்கும் மேற்பட்ட சிறுகதைகளும் பத்துக்கும் மேற்பட்ட நாவல்களும் எழுதியுள்ள திருமதி கே. ஜெயலட்சுமி சொல்கிறார்:

''1959ல் என்னோட 'கௌரவம்'ங்கிற கதை 'கல்கி'யிலே வெளியாகியிருந்தது. பணக்கார வீட்டில் கல்யாணமாகிப் போன தங்கை, தன்னோட அண்ணனைத் தன் மகனோட பிறந்த நாளுக்குச் சீர்கொண்டு வரச் சொல்லிக் கடிதம் போடுவா. ஏழையான அண்ணன் 'அங்கே போனா நல்ல மரியாதை இருக்காது. நான் போக மாட்டேங்கறான். அவனோட சம்சாரம் தன்னோட ஒரு நகையைக் கழட்டிக் குடுத்து. இதை வித்து ஏதாவது வாங்கிட்டுப் போய்ட்டு வாங்க'ன்னு சொல்றா. அவனோட அம்மாவும் அனுப்பி வைக்கிறாள்.

அங்கே, தங்கச்சி மாப்பிள்ளை அவனை அலட்சியமா நடத்தறான். இவன் வீட்டுக்குத் திரும்பறான். வாசல்லே தங்கச்சி கையிலே தேங்காய்ப் பையைக் கொடுத்தனுப்பறா.

இவன் வீட்டுக்கு வந்ததும் அங்கே நடந்ததையெல்லாம் சொல்லி அம்மாகிட்டேயும் மனைவி கிட்டயும் கோபப்பட்டு கையில்இருந்த தேங்காய்ப் பையை எறியறான். பையிலிருந்து ரூபா நோட்டாய் சிதறி விழறது. அதோட தங்கச்சியின் கடிதமும் இருக்கு. இதுதான் கதை.

அப்பல்லாம் சினிமாக்காரங்க எழுத்தாளர்களோட கதையை நிறையத் திருடிப் பயன் படுத்திக்குவாங்க. யாரும் அதை எதிர்த்துக் கேட்கிறதில்லே.

என்னோட 'இந்தக் கதையை அப்படியே வரிக்கு வரி கே. எஸ். கோபாலகிருஷ்ணன் தன்னோட 'சாரதா'ங்கிற படத்திலே (1500 அடி) எடுத்திருந்தார்.

அகிலன் அந்தச் சமயத்திலே கே.எஸ்.ஜி. மேலே கேஸ் போட்டிருந்தார்னு தெரிஞ்சது. உடனே நானும் என் வக்கீல் மூலமா கே.எஸ். ஜி. மேலே கேஸ் போட்டேன்.

வழக்கு கிட்டத் தட்ட ஏழு வருஷம் நடந்தது. 'சாரதா' படத்தைக் குறைஞ்சது பத்துத் தடவையாவது போட்டுக் காண்பிச்சிருப்பாங்க.

அப்போது சென்னை ஹை கோர்ட் லோயர் பெஞ்சிலே பி. எஸ். கைலாசம் நீதிபதியாய் இருந்தார். தீர்ப்புல என் கதையைப் பயன் படுத்தினதுக்காக ரூ. 2500ம், லாபத்துலே பங்கும், கோர்ட் செலவுத் தொகையும் எனக்குத் தரணும்னும், அந்தச் சீன்களைக் கட் பண்ணி என்கிட்டக் குடுத்துடணும்னும் தீர்ப்பளித்தார்.

ஏ. எல். எஸ்.ஸும், கே. எஸ். ஜி.யும் மேல் பெஞ்சுக்கு அப்பீல் பண்ணினாங்க. அதுக்கிடையிலே என்கிட்ட வந்து சின்ன அண்ணாமலை, இன்னும் யாரெல்லாமோ

பிரச்னை-1

பணம் குடுத்து சமாதானமாப் போயிடுங்கன்னு சொன்னாங்க.

வழக்கு எல்லா மொழிப் பத்திரிகைகளிலும் வெளியாயிடுச்சு. எல்லாருமே இதோட முடிவைப் பத்தி ஆவலா யிருந்தாங்க.

நான் 'கோர்ட் தீர்ப்பு'தான் வேணுமே தவிர எனக்குப் பணம் வேண்டாம்னு வந்தவங்ககிட்டச் சொல்லிட்டேன்.

அதுக்குள்ள கைலாசம் மாறி திரு நாராயணசாமி முதலியாரும் திரு வீராசாமியும் நீதிபதிகளா வந்தாங்க.

ஜூன் 6ந் தேதி பதவி ஏற்று, 13ந் தேதி, கதையைத் திருடினதெல்லாம் உண்மைதான், அந்தக் காட்சிகளைப் படத்திலேருந்து நீக்கிடணும்னு தீர்ப்பாயிடுச்சு. எங்களோட வக்கீல் 'கிராஸ் அப்பீல்' பண்ணாததாலே எங்களுக்குக் கிடைக்க வேண்டிய பணம் எதுவுமே கிடைக்கல்லே.

தீர்ப்பன்னிக்கு கே. எஸ். கோபாலகிருஷ்ணனுக்கு நிறையக் கார்கள் வந்திருந்தன. ஆனால் எழுத்தாளர்கள் யாருமே வரலே.

கோர்ட் தீர்ப்புக்கு அப்புறமும் அந்தக் காட்சி படத்துலே இருந்ததை 4, 5 வருஷம் 'கழிச்சுப் பார்த்துட்டு என் பொண்ணு சொன்னாள்.

உடனே நோட்டீஸ் விட்டோம். சமீபத்துல டி.வி.யிலே அந்தப் படம் காட்டும் போது அந்தக் காட்சிகள் இல்லே.

'சாரதா'வைத் தெலுங்கிலே எடுத்தவங்க அந்தக் காட்சியைப் பயன்படுத்த ரூ. 3000 குடுத்துட்டுப் போனாங்க.

என்னோட கேஸுக்கப்புறம்தான் கதை, வசனம், டைரக்ஷன்கிறது மாறி, 'திரைக்கதை, வசனம் டைரக்ஷன்னு' போட ஆரம்பிச்சாங்க.

அதுக்கப்புறமா நிறையத் தெலுங்கு, தமிழ் மராட்டி எழுத்தாளர்கள் எல்லாம் என்கிட்ட தான் வந்து கேஸ் போடறது எப்படின்னு கேட்டுத் தெரிஞ்சுக்கிட்டுப் போனாங்க.



''ஒரு ஜாடியில் நெய்யை விட்டு, அதில் ஒரு வெல்லக் கட்டியைப் போட்டுமூடிவைத்து விட்டால், மூன்று மாதங்கள் ஆனாலும் நெய் கெடாமல் இருக்கும்!''

'நீதிக்குப் பின் பாசம்' படத்து மேலே கேஸ் போடணும்னு கே. ஏ. அப்பாஸ் வந்தார்.

அதுக்கப்புறம் 'சித்ராலயா'ங்கிற பத்திரிகைல கே. எஸ். ஜி. அந்தக் கதை உரிமையைக் கோர்ட்டில வாங்கிட்டதாக எழுதியிருந்தார். ஆனா உரிமை எனக்குத்தான்னு கோர்ட்டுல தீர்ப்பாயிடுச்சு.

'வரதட்சிணைக் கொடுமையைப் பத்தியெல்லாம் கதை எழுதினவ'ன்னு என் பொண்ணுக்குச் சீர் செய்வேனா மாட்டேனான்னு பையன் வீட்டார் சந்தேகப்பட்டாங்க.

என் பையனுக்கு வேணும்னு நான் வாங்காம இருக்க முடியுமே தவிர மத்தவங்க விஷயத்துல நான் எப்படித் தலையிடறது?

இது மாதிரி இரட்டைப் பிள்ளை பிறந்ததை வச்சு ஒரு கதை எழுதியிருந்தேன். எங்க சொந்தக்காரர் ஒருத்தருக்கும் இரட்டைப் பிள்ளைகள் பிறந்திருந்தது. அவங்க தன்னைத் தான் எழுதினதாச் சொன்னாங்க.

இது மாதிரி எத்தனையோ பிரச்னைகள் ஏற்படத்தான் செய்யறது..

—துரை





நட்சத்திர வாழ்க்கை

நான் ஒரு பாடம்-ராதா

சில வாரங்களுக்கு முன்பு ராதா என்னும் நடிகை சேலத்தில் ஹோட்டலில் தற்கொலை செய்து கொண்டார்.

-இது செய்தி

பெண்கள்!

இவ்வார்த்தை ஓர் அற்புதமான பதச் சேர்க்கை! இவள் குழந்தையாகப் பிறந்து, பட்டுப் பாவாடை கட்டிச் சலங்கை கொஞ்சித் திரிவதும் ஓர் அழகு; பட்டுப் புடவை அணிந்து, இடுப்பில் குழந்தைக்கு சோறூட்ட நிற்பதும் ஓர் அழகு. பெண்ணே சௌந்தர்யம்தான். தாயின் அன்பை வியந்து போற்றுதவர்கள் யார்? அப்படிப்பட்ட குண நலன்கள் கொண்ட பெண் எங்கே இருந்தாலும், எப்படிப்பட்ட சூழ்நிலையில் இருந்தாலும் அவள் பெண்ணாகத்தான் இருக்கிறாள். ஆனால் அதைப் புரிந்து கொள்ளாமல் அவளை வீழ்த்துபவர்கள்தான் அதிகம்.

ராதாவும் ஒரு பெண்தான்!

அதைத் தன் வாழ்க்கை முழுவதும் நிரூபித்திருக்கிறாள். சாவிலும் நிலை நிறுத்திவிட்டுப் போய் விட்டாள்.

ராதாவின் தந்தை சதாசிவம் பெரும் செல்வந்தர். கலையுலக ஆசை அவரையும் தொற்றிக் கொண்டது. தன்னுடைய சொத்தை யெல்லாம் விற்று இரண்டு படங்களை எடுத்தார். 'ஓடாதே நில்!' 'பெண் பாவம் பொல்லாதது!' இரண்டிலும் பெருத்த நஷ்டம். கவலையை மறக்கக் குடிக்க ஆரம்பித்தார். அதுவே அவருடையவாழ்க்கைக்கு எமனாகி விட்டது. அருமை மனைவி பட்டம் மாளையும், ஆறு குழந்தைகளையும் நிராதரவாக விட்டு விட்டு இறந்து விட்டார்.

திக்கற்ற மனைவிக்கு யார் துணை?

காதல் திருமணம் வேறு. தாய் வீட்டிலும் ஆதரவில்லை. கணவர் வீட்டிலும் அண்ட விடவில்லை. தானே தன்னுடைய வாழ்க்கையைச் சவாலாக ஏற்றுக் கொண்டார் பட்டம்மாள். யாரிடமும் ஒரு வேளைச் சாப்பாடு கேட்கவில்லை.


வேறு வழி? அவருக்கும் கலை உலகம்தான் அடைக்கலம் தந்தது. தன்னுடைய குழந்தைகளை சிறு சிறு வேடங்களில் நடிக்க வைத்தார். வரும் மிகச் சொற்ப வருமானத்தில் குடும்பம் நடத்தி வந்தார்.

குழந்தைகள் சிறிதே வளர்ந்த பிறகு நாடகக் காவலர் மனோகரை அணுகினார். அவரும் இவருடைய நிதாரவான நிலையைப் புரிந்து கொண்டு நான்கு குழந்தைகளையும் தன்னுடைய நாடகத்தில் சேர்த்துக் கொண்டார்.

''அதெல்லாம் மிகவும் கொடுமையான காலங்கள். அவருடைய நாடகம் முடிந்து என்னுடைய இரண்டு வயது வந்த பெண்களும், இரண்டு சிறு பையன்களும் வந்து சேருவதற்கு இரவு பன்னிரண்டு மணியாகும். நெஞ்சில் நெருப்பைக் கட்டிக் கொண்டு காத்திருப்பேன்.

எப்படியோ என் குழந்தைகள் தன்மானத்துடன், ஒரு தவறும் செய்யாமல், என்னுடைய கஷ்டங்களை யெல்லாம் புரிந்து

மனோகர் நாடகத்தில் சீதையாக ராதா→



கொண்டு வறுமையில் மானத்தோடு வாழ்ந்தார்கள். அப்படிக் கௌரவமாக வாழ்வதற்குத் தெய்வமாக இருந்து துணை புரிந்தவர் மனோகர் சார்தான்.'' என்கிறார் இருமதி பட்டம்மாள்.


மூத்த பெண்ணுக்குத் திருமணம் செய்து விட்டார். நாடகத்தில் நடித்துக்கொண்டிருந்த பெரிய பெண்ணுக்கும் கல்யாணமாகி விட்டது. இந்த நிலையில் தன்னுடைய 18வது வயதில் குடும்பத்தின் பாரத்தை யெல்லாம் தாங்க வேண்டிய நிலைக்கு வந்தவள் ராதா தான்.

'எல்லோருடனும் கள்ளம் கபடம் இல்லாமல் குழந்தையைப் போல் பழகும் குணம். ஒரு சிறு பூச்சிக்குக் கூடத் தீங்கு செய்யாத மனம். அநாவசியமாக ஒரு பைசா செலவு செய்யாத சிக்கனம். குடும்பத்தின் பாரமெல்லாம் தன் தலையில்தான் என்ற பொறுப்பை உணர்ந்து கொண்ட பெரிய மனுஷத்தனம்.'

இத்தனையும் ஒருருவானவர் ராதா.

தன்னுடைய அக்காவுக்குத் திருமணம் ஆகும் முன்னர் வரை மனோகர் நாடகங்களில் நடிப்பதால் வரும் வருமானம் போதுமானதாக இருந்தது. அதனால் குடும்பத்தைச் சிக்கனத்துடன் தடை யில்லாமல் நடத்திச் சென்று விட்டார்கள். ஆனால் தமக்கையின் திருமணத்தால் கடன் ஏறியது. மாதா மாதம் கடனுக்கு வட்டி கட்ட வேண்டிய சூழ்நிலை. குடும்பத்தில் வருமானமும் குறைந்தது. என்ன செய்வதென்று தெரியாமல் திண்டாடினார் ராதா.

ராதா ஜெலூலாய்ட் பொம்மை போல அழகாக இருப்பார். கொழுமிய கன்னமும், நீண்ட கண்களும், எந்தப் பாத்திரத்துக்கும் பொருத்தமாக அமையும் குழந்தை முகமும் திரையுலகத்தவர்களைக் கவராமல்போகுமா? பல தயாரிப்பாளர்கள் முயற்சி செய்து பார்த்தார்கள். ராதா ஒப்புக்கொள்ளவில்லை.



''என் அம்மாவும் அப்பாவும் இந்தத் திரைப்பட உலகில் பட்ட கஷ்டங்கள் எனக்குத் தெரியும். இவளும் பெண் தான், இவளுக்கும் மனம் என்ற ஒன்று இருக்கிறது என்பதை யாருமே நினைத்துக்கூடப் பார்க்க மாட்டார்கள். அப்பப்பா, ஆழமான முதலைகள் நிறைந்த, ஆனால் வெளியே பார்ப்பதற்கு அழகான இந்த உலகம் எனக்கு வேண்டாம்!'' என்று மறுத்து விட்டார். பல படங்களில் கதாநாயகியாகப் போட முயற்சி செய்தவர்கள் வெறுங் கையுடன்தான் திரும்ப வேண்டியதாயிற்று.

ஆனால் நிலைமைகள் இப்படியே இருக்க விடவில்லை. வேறு வழியில்லை. தானாக சினிமா சந்தர்ப்பங்களைத் தேட ஆரம்பித்தார். ஆனால் கலைக் குடும்பத்தைச் சேர்ந்தவர் என்பதால், எவ்வளவு முன் ஜாக்கிரதையாக இருக்க முடியுமோ, அவ்வளவு முன் ஜாக்கிரதையாக இருந்தார்.

தானாகத் தேடி வரும் வைரத்தைக் கூடயாரும் சந்தேகக் கண்ணோடு தான் பார்ப்பார்கள். ராதா எம்மாத்திரம்?

''நீ முன்னாடி கூப்பிட்டபோது நடிக்க மறுத்தவள் தானே?''

என்ற அலட்சியம் வேறு. சில படங்களில் சிறுசிறு வேடங்களில், சில படங்களில் இரண்டாம் கதாநாயகியாக நடிக்க ஆரம்பித்தார்.

'நீலக் கடல் ஓரத்திலே', 'கன்னிக்-கோயில்', 'சுதந்திரப் பறவை', 'ஞானக் குழந்தை' போன்ற பல படங்களில் பல்வேறு பாத்திரங்கள். 'ஆத்மா சிரிக்கிறது' நடித்துக் கொண்டிருந்து முடிக்காமல் இறந்து விட்ட குறிப்பிடத்தக்க படம்.

இன்னும் கொஞ்ச நாட்கள் இருந்திருந்தால் சிறந்த சினிமா நட்சத்திரம் திரைவானில் மின்னியிருக்கும். பாத்திரமாகவே ஒன்றிவிடும் சிறப்பு வாய்ந்த நடிகை பாதியிலேயே முடிந்து விட்டார்.

அதற்குக் காரணம்? நானும் ஒரு பெண்தானே; எனக்கென்று மனம், எனக்கென்று உணர்வுகள் இல்லையா' என்று சாதாரணமான ஒரு பெண்ணின் மன ஏக்கங்கள்தான்! எண்ணங்கள்தான்!

ஏன்?

திரையுலகில் இருக்கும் பெண்களும் பெண்கள்தானே? அலுவலகம் போவதற்கு பெண்கள் இன்று வெளியில் வருவதில்லையா? எத்தனை விதமான வேலைகளில் பெண்கள் ஈடுபட்டு, நல்ல ஊழியத்துடன் அமைதியான வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

ஏன் திரையுலகில் மட்டும் இந்த விபத்துக்கள்? காவியமாக வாழஆசைப்பட்டுதங்கள் வாழ்க்கையை இரங்கத்தக்க விதத்தில் ஏன் இவர்கள் சிறுகதையாக ஆக்கிக் கொள்கிறார்கள்?

மார்லின் மன்றோ
கல்பனா
ஷோபா
லட்சுமிஸ்ரீ

கடைசியாக ராதா! ஒவ்வொருவர் வாழ்க்கையும் ஒவ்வொரு காவியம்தான். வெவ்வேறு வகையான காவியங்கள். அவற்றிலே ஒன்று ராதாவின் வாழ்க்கை. தன்னுடைய குடும்பத்துக்காகத் தன்னையே மெழுகாகக் கரைத்துக் கொண்ட சிறு பறவை இது!

சினிமாவுலகில் இறங்கிய ராதாவுக்கு அங்கு மனம்ஒட்டவில்லை. குடும்பத்துக்காக வேஷம் போட்டுக் காமிரா முன் நடித்தவளின் கண்களில் அன்பின் தாகத்தைப் புரிந்து கொண்டார் சுப்பிரமணியம் என்ற பிரமுகர். அவரும் திரையுலகத் தொடர்புடையவர்.

ராதாவை முழுமையாகப் புரிந்து கொண்டு அவளை ஏற்றுக் கொண்டார். 'நான் உங்கள் பெண்ணை எந்தவிதக் கஷ்டமும் இல்லாமல் கவனித்துக் கொள்கிறேன்' என்று ராதாவின் தாயாரிடம் உறுதி கொடுத்து ராதாவை ஏற்றுக் கொண்டார்.

ராதாவுக்கு அவர் தன்னை மனைவியாக ஏற்றுக்கொண்டு, ஊரில் நாலு பேர் கௌரவமாகப் பேச வேண்டும் என்று ஆசை. சுப்பிரமணியம் மறுக்கவில்லை. 'காலம் இன்னும் எனக்குச் சாதகமாக அமையவில்லை. கண்டிப்பாக நான் உன்னை ஒரு நாள் மனைவியாக ஏற்றுக் கொள்கிறேன்' என்றுதான் சொல்லிக் கொண்டிருந்தார்.

இருவருக்கும் ஒருவர் மேல் ஒருவருக்கு ஆழம் காண முடியாத அன்பு. எனவேதான் தன் வாழ்க்கை எல்லோரையும் போல அமைய வேண்டும் என்று அவசரப்பட்டாள். தன் மனதுக்குகந்தவர் சொன்ன பொறுமையைக் கடைப்பிடிக்கவில்லை. அவர் தட்டிக் கழித்து விடுவாரோ, தன்னுடைய காதல்



முறிந்து விடுமோ என்ற பயம் அவருக்கு இருந்திருக்கும் போலும்!

ராதாவுக்குக் குழந்தை என்றால் கொள்ளை ஆசை. தனக்குத் திருமணம் ஆகிப் பிறக்கப் போகும் குழந்தைக்கு ஸ்வெட்டர் கூட வாங்கி வைத்திருந்தார்.

''இதை நான் யாருக்குமே கொடுக்க மாட்டேன். என் குழந்தைக்காகக்கும்!''

என்று அடிக்கடி சொல்லுவாள் என்று கண்ணீர் வழியச் சொன்னார் பட்டம்மாள்.

''அம்மா, அம்மா, என்னதான் இருந்தாலும் ஒரு பெண்ணுக்குக் கல்யாணம் ஆனாத்தான் பெருமை. இல்லையாம்மா? அக்கால்லாம் பாரேன், கல்யாணம் ஆகிக் குழந்தைகளோட இருக்காங்க. அதனால தான் அவங்களுக்கும் பிரச்னையே இல்லே. நானும் அவங்களை மாதிரி வாழணும் அம்மா!''

என்று சொல்லிக் கொண்டே இருப்பாராம். அந்தச் சின்னஞ்சிறு பெண் வாழ்வதற்கு ஆசைப்பட்டாள்.

இதற்கிடையில் தன்னுடைய கடமையைத் தொடர்ந்து கொண்டுதான் இருந்தார். குடும்பச் சுமையைத் தாங்கிக்கொண்டு தான் இருந்தார். தன்னுடைய வாழ்க்கையைப் பார்த்துக் கொண்டு போய்விட்டால்,நிராதரவான தாயையும், தம்பிகளையும் யார் பார்த்துக் கொள்வது! அவர்களுக்காக வாழ்ந்து கொண்டிருந்தார். தன்னுடைய மனத்துக்குப் பிடித்தவர் தன்னை மனைவியாக ஆக்கிக் கொள்ளும்வரை, தன் குடும்பத்துக்காக வாழ்வோம் என்று இயந்திரமாக உழைத்தார்.

''அவளுடைய கடைசி நாட்கள் ரொம்ப மோசமாக இருந்தது. எப்பொழுது பார்த்தாலும் சிந்தனை செய்து கொண்டே இருப்பாள். என்னை ஒரு காரியம் செய்ய விட மாட்டாள். 'அம்மா, உனக்கு வயசாயிடுச்சு, நீ பேசாம உட்காரம்மா'ன்னு சுவிசேரில் இழுத்துக் கொண்டு போய்ப் போடுவாள். தானே எல்லாக் காரியங்களையும் செய்து விட்டு, எனக்கும் சாப்பாடு போட்டு, அவளும் சாப்பிடுவாள். மற்றபடி ஒன்றும் பேச மாட்டாள்.

ஏதோ சிந்தித்துக் கொண்டே இருப்பாள். இப்படி ஒரு முடிவைப் பற்றித்தான் சிந்தித்துக்கொண்டு இருப்பாள் என்று நான் கனவில் கூட நினைக்கவில்லை. குழந்தை வாழ ஆசைப்பட்டாள். அவள் நினைத்த மாதிரியே வாழ்க்கையும் அமைந்திருக்கும். ஆனால் அவசரப் பட்டு விட்டாள்....'' என்கிறார் தாயார்.

''ராதாவின் சாவைப் பொறுத்தவரை யாரையுமே குறை சொல்ல முடியாது. அவளுடைய அவசர குணம்தான் அதற்குக் காரணம். ஆனால் ராதாவைப் போல் மற்றொரு பெண் உலகம் பூராத் தேடினாலும் கிடைக்க மாட்டாள். அப்படி ஒரு அன்பு மயமான பெண். நினைத்தவுடனே ஒரு காரியம் அவளுக்கு முடிந்து விடவேண்டும். அதுதான் அவளிடம் இருந்த கெட்ட குணம். அதுவே அவளுடைய வாழ்க்கைக்கு எமனாக முடிந்து விட்டது'' என்றார் அவருடைய உறவினர் ஒருவர்.

ராதாவைப் போல் திரையுலகில் மின்னி மறைந்துவிட்ட நட்சத்திரங்கள் நிறையப் பேர். மனதைப் புரிந்து கொள்ளாமல் அவர்களைத் தூற்றியவர்களும் பலபேர். இவர்கள் இறந்துதான் தங்களை நிரூபிக்க வேண்டியவர்கள் ஆகிறார்கள். இந்தப் பொல்லாத மனிதர்களிடையே அவர்களுக்கு வேறு வழி தோன்றுவதில்லை. ஆனால் இந்தக் காவுத் தீயில் குளித்துத் தங்களைப் பரிசுத்தப்படுத்திக் கொள்ளும் இந்தப் புஷ்பங்களின் பட்டியல்கள் நீண்டு கொண்டுதான் போகிறது. இவர்களின் வாழ்க்கையை ஒரு பாடமாக மற்றவர்கள் எடுத்துக் கொண்டால்தான் இதற்கு ஒரு முடிவு ஏற்படும். —ஸ்ரீ.மஞ்சுளா ரமேஷ்

இம்மாத இல்லத்தரசி போட்டி

பொருள் : அவல்

முடிவு தேதி : 15-5-'81

சமையல் கூபன்

இத்துடன் . . . . என்ற தலைப்பில் சமையல் குறிப்புக்களை அனுப்பியுள்ளேன். இச்சமையல் குறிப்பு இதுவரை எந்தப் பத்திரிகையிலும், எந்தப் புத்தகத்திலும் வெளியான தல்ல என்ற உறுதி கூறுகிறேன்.

கையொப்பம்

ஹோமியோபதி வைத்திய முறை



மருத்துவப் பகுதி



சாமுவேல் ஹானிமான்

ஹோமியோபதி என்றுகேட்டதும் அது பற்றி ஓரளவு தெரிந்த எவருக்கும் மனக்கண் முன் தோன்றுவது, வெள்ளையாக கடுகு கடுகாகக் காணப்படும் மாத்திரை உருண்டைகள்தான். 'கடுகு சிறுத்தாலும் காரம் குறையாது' என்பது ஹோமியோபதி வைத்தியத்துக்காகவே சொல்லப்பட்டதோ என்று தோன்றுகிறது.

ஹோமியோபதி நம் நாட்டு வைத்திய முறைகளில் ஒன்று எனறு பலர் தவருக நினைத்துக் கொண்டிருக்கின்றனர். (எனவே உள்நாட்டு விஷயம் என்ருலே மட்டம் என்று நினைத்து ஒதுக்கும் அவர்கள் இது வெளி நாட்டு வைத்திய முறை என்று அறிந்ததும், 'ஆஹா, அதனல்தான் இவ்வளவு சிறப்பாக வேலை செய்கிறது என்று புகழத் தொடங்கி விடுவார்கள்!) இது ஜெர்மனியைச் சேர்ந்த சாமுவேல் ஹானிமான் என்ற எம். டி. படித்த டாக்டர் ஆருண்டுகள் இடைவிடாமல் தம் உடலை வருத்திக் கண்டுபிடித்த புதிய வைத்திய முறை. இந்த வைத்திய முறைக்கு இப்போது சரியாக வயது என்ன தெரியுமா? நூற்று எண்பத்து ஐந்து ஆண்டுகள்! இதற்குள் இந்த வைத்திய முறை உலகின் மூலை முடுக்கெல்லாம் பரவி யிருக்கிறது.

உலகம் தோன்றிய காலம் தொட்டு மலேரியா சுரம் இருந்து வருகிறது. மலேரியா என்றதும் அனைவருக்கும் நினைவில் தோன்றுவது 'கொய்னு' மாத்திரைகள். இந்த மாத்திரைகள், கொய்னு மரப் பட்டையிலிருந்து சாறு இறக்கித் தயாரிக்கப்படுவது. எம்.டி. படித்த டாக்டரான ஹானிமன், மலேரியா சுரத்தைக் கொய்னு குறைக்கிறது என்று படித்திருந்ததை ஏன், எப்படி? என்ற கேள்வியோடு ஆராயத்தொடங்கினர். அப்படி சுரத்தைப் போக்குவதற்குக் காரணம் என்ன? என்று அவர் தன்னையே கேட்டுக் கொண்டார். வைத்தியப் புத்தகங்கள் கொடுத்திருந்த விளக்கங்கள் அவருக்குத் திருப்தி அளிக்கவில்லை. இரத்தத்தைப் பரிசோதித்துப் பார்த்தால் என்ன என்று நினைத்தார்.

சுரம் வந்தவனுக்கு இந்த மருந்தைக் கொடுப்பதற்குப் பதிலாக சுரம் இல்லாத, திடசாத்திரமான ஒருவனுக்கு இந்த மருந்தைக் கொடுத்தால் என்ன விளைவு தோன்றும் என்று பார்க்க அவர் விரும்பினர். இதற்கு வேறு யாரையும் பலியாடு ஆக்க விரும்பாமல், தன் உடலிலேயே இந்தப் பரிசோதனையை அவர் மேற்கொண்டார். கொய்னுச் சாற்றை அவர் உட்கொண்டார்.

சிறிது நேரத்தில் மலேரியா சுரத்துக்கான அறிகுறிகள் அனைத்தும் அவர் உடலில் தோன்றின. இந்த மலேரியா குறையும்வரை காத்திருந்தார். மீண்டும் சிறிது கொய்னு சாறு குடித்தார். என்ன ஆச்சரியம்? அவருக்கு மலேரியா சுரம்

எம்.வி.எஸ்.நரசிம்மன்

வந்ததற்கான எல்லா அறிகுறிகளும் தோன்றின.

இதிலிருந்து அவர் கண்டு பிடித்தது தான் ஹோமியோபதியின் அடிப்படை கொள்கையான 'திடமான உடலில் எந்த நோய் அறிகுறிகளை ஒரு மருந்து உண்டாக்குமோ, அதே நோய் அறிகுறிகளை நோயாளியிடம் அந்த மருந்தே குணப்படுத்தும்' என்பதுதான்.

கொய்னாவுக்கு மட்டும்தான் இவ்வாறு குணம் உண்டா அல்லது எல்லா மருந்துகளுக்கும் இந்தக் குணம் உண்டா என்ற கேள்வி டாக்டர் ஹானிமான் மனத்தில் எழுந்தது. இதைத் தொடர்ந்து வெவ்வேறு மருந்துகளை தமது திடகாத்திரமான உடலில் செலுத்தி, அதனால் ஏற்படும் நோய் அறிகுறிகளைக் கவனித்து, இடைவிடாமல் ஆராய்ச்சியில் அவர் ஈடுபட்டார்.

இந்தப்பணியில் அவருக்கு வேறு பல டாக்டர்களும் துணை நின்றார்கள். ஆறு ஆண்டுகள் இடைவிடாத ஆராய்ச்சியின் பயனாக இந்த ஹோமியோபதி தத்துவத்தை நிரூபித்து, உலகுக்கு வழங்கினார் வைத்திய மேதை ஹானிமான். அவர் முதன் முதலில் உலகுக்கு வழங்கிய 64 ஹோமியோபதி மருந்துகள், தொடர்ந்து ஆராய்ச்சியின் பலனாக ஆயிரக் கணக்கில் வளர்ந்து மற்ற வைத்திய முறைகளால் தீர்த்து-வைக்க முடியாத நோய்களைக் கூட ஹோமியோபதியால் தீர்த்து வைக்க முடியும் என்ற நிலையை உருவாக்கியுள்ளது.


ஆங்கில (அலோபதி) வைத்திய முறையிலிருந்தோ, மற்ற இந்திய வைத்திய முறைகளிலிருந்தோ ஹோமியோபதி அடிப்படையிலேயே வேறுபடுகிறது. உதாரணத்துக்குச் சொன்னால், அலோபதி வைத்திய முறையில் நோயாளி வந்தவுடன் அவருக்கு என்ன வியாதி வந்திருக்கிறது என்று வியாதிக்கு 'நாமகரணம்' செய்ய முதலில் முயற்சிக்கப்படுகிறது. 'நாமகரணம்' முடிந்த பிறகு, அந்த வியாதிக்கு என்னென்ன மருந்துகள் குறித்து வைக்கப்பட்டுள்ளனவோ அந்த மருந்துகள் அந்த நோயாளிக்குக் கொடுக்கப்படுகின்றன. ஆனால் ஹோமியோபதியில், நோயாளிக்கு வந்துள்ள நோயின் பெயர் என்ன என்பது பற்றிக் கவலைப்படுவதில்லை. அவரது உடலில் தோன்றியுள்ள நோய்ச் சின்னங்கள் அல்லது அறிகுறிகள் (symptams) என்ன என்பதே முக்கியமாகக் கவனிக்கப்படுகின்றது. அந்த அறிகுறிகள் அடிப்படையில்தான் எந்த மருந்து கொடுக்கப்பட வேண்டும் என்பது தீர்மானிக்கப்படுகிறது. ஹோமியோபதியில், ஒவ்வொரு மருந்தும், சாதாரண திடகாத்திரமான மனிதருக்கு அது கொடுக்கப்பட்டால் என்னென்ன அறிகுறிகளை அவரிடம் அந்த மருந்து உண்டாக்கும் என்பது பரீட்சிக்கப்பட்டுக் குறிக்கப்பட்டுள்ளன. ஆகவே, நோயாளியிடம் உள்ள அறிகுறிகளைப் போலவே அறிகுறிகளை உண்டாக்கக் கூடிய மருந்தை அந்த நோயாளிக்குக் கொடுத்தால் அந்நோயாளி குணமடைந்து விடுவான்.

இதில் இன்னொரு முக்கியமான விஷயம் என்னவென்றால், ஹோமியோபதி மருந்துகள் அணுவைப் போல சக்தி வடிவமானவை. ஓர் அவுன்ஸ், இரண்டு அவுன்ஸ் என்று எந்த மருந்தையும் உடலில் செலுத்துவதற்குப் பதிலாக அந்தந்த மருந்தின் வீரிய சக்தியை மருந்தாகத் தயாரித்து வைத்து அதை நோயாளிக்குக் கொடுப்பதால் குறைப்பட்டு நிற்கும் நோயாளியின் உடல் சக்தியை இந்த வீரிய சக்தி சமனப்படுத்திக் குணமாக்குகிறது.

ஹோமியோபதி மருந்து எவ்வாறு தீங்கற்றவை என்பதையும், side effects என்கிற புதுக் கோளாறுகளை அவை உண்டாக்காது என்பதையும் மற்றுமுள்ள சிறப்புக்களையும் அடுத்த இதழில் பார்ப்போம். அதோடு தலைவலி வந்தால் ஹோமியோபதி அதை எப்படி அடியோடு குணப்படுத்தும் என்பதையும் அடுத்த இதழில் காண்போம்.

முகத்தில், உடம்பில் கறுப்பாகத் தேமல் படர்ந்தால் (மருதாணி) மருதோன்றி இலையை அரைத்து வைத்துக் கொண்டு, ஒரு சிறு துண்டு சவுக்காரம் தேய்த்துச் சேர்த்துப் பிசைந்து கருந்தேமல் உள்ள இடத்தில் பூசினால் கருந்தேமலின் நிறம் மாறி விடும். —பிரேமா வீரப்பன்





மங்கல மதிமுகத்தில் மெருகூட்ட
ஐடெக்ஸ்
டீலக்ஸ் குங்குமம்
Matt Finish
சுமங்கலிகளும் நாகரீக யுவதிகளும்
கூடி அணிவது ஐடெக்ஸ் குங்குமம்.
மங்கையரின் மதிமுகத்தின் இன்னழகை
எடுத்துக் காட்டுவதற்கெனவே
14 கண்கவர் வண்ணங்களில் கிடைக்கிறது.
சாஸ்திரிய முறைப்படி தயாரிக்கப்படும்
ஐடெக்ஸ் குங்குமம் சருமத்திற்கு எவ்வித
தீங்கும் விளைவிக்காதது.
ஐடெக்ஸ்
38 ஆண்டுகளாக
உங்கள் நம்பிக்கையின்
மகத்தான சின்னம்
அரவிந்த் லாபரடரீஸ் சென்னை 600
Imageads-AL-1304 Tam

திருமண மலர்

பட்டப்படிப்பு படித்து, நல்ல அழகும் குணமும் உடைய, ஸ்மார்த்த கன்னட பிராமண வகுப்பைச் சேர்ந்த 30 வயது பெண்ணுக்கு, படித்த நல்ல உயர்ந்த வேலையில் இருக்கும் குணமுள்ள வரன் தேவை.

பெட்டி எண் 15

பி. ஏ. படித்து தேசிய வங்கியில் வேலையிலுள்ள ரூ. 800 மாத வருமானம் பெறும் 28 வயது அய்யங்கார் தென்கலை வாதூல கோத்திரம் இளைஞனுக்குப் பட்டதாரி பெண்களின் பெற்றோரிடமிருந்து ஜாதகம் வரவேற்கப்படுகிறது. பெட்டி எண் 16

பி. ஈ. எலக்ட்ரிக் பட்டம் பெற்று பதினைாயிரம் மாத வருமானம் பெறும் ஆற்காடு முதலியார் வகுப்பைச் சேர்ந்த ஐந்தரை அடி உயரம் உள்ள இளைஞனுக்கு அதே இனத்தில் அழகும், பண்பும் டிகிரியும் உள்ள பெண் தேவை. பெட்டி எண் 17

29 வயதான பி. எஸ்சி. பட்டதாரி சைவச் செட்டியார் பெண்ணுக்கு முதலியார்/பிள்ளை/செட்டியார் முதலிய வகுப்பைச் சேர்ந்த மணமகன் தேவை. பெட்டி எண் 18

தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் பணிபுரியும், விவாக ரத்து செய்யப்பட்ட வடமான் அய்யர், ஹரித கோத்திரம் பெண்ணிற்கு (வயது 27), தேசியமயமாக்கப்பட்ட வங்கியிலோ, அல்லது அரசாங்கத்திலோ பணிபுரியும் நல்ல நிலைமையில் உள்ள மணமகன் தேவை. விவாகரத்து செய்யப்பட்டவராக இருந்தாலும், மனைவியை இழந்தவராக இருந்தாலும் பரவாயில்லை. பெட்டி எண் 19

பார்வைக்கு அழகாக உள்ள, பிராமணன் ஹரிதகோத்திரம், வடமாள் வகுப்பைச் சேர்ந்த 26 வயது பட்டதாரியான, சொந்தமாக வியாபாரம் செய்யும் வாலிபருக்கு அழகான மணமகள் தேவை.

பெட்டி எண் 20

எஸ். எஸ். எல். சி. படித்து அரசுத் துறையில் மாதம் ரூ. 550 வாங்கும் செங்குந்தர் முதலியார் வகுப்பைச் சேர்ந்த 32 வயதுள்ள இளைஞருக்கு அதே வகுப்பில் வேலை பார்க்கும் மணமகள் தேவை.

பெட்டி எண் 21

வரதட்சிணைப் பேய்க்கு அடிமையாகாத மனிதாபிமானமுள்ள பட்டதாரி மணமகன் தேவை. பெண்: பட்டதாரி; 28 வயது; வேலை இல்லை; திருநெல்வேலி சைவப் பிள்ளை; 142 செ. மீ. உயரம்; வசதியுள்ள கண்ணியமான குடும்பம். பெட்டி எண்: 22

அய்யர் பெண். ரூ. 1050 சம்பாதிப்பவள், வெளுப்பும் அழகும் உடையவள் டபுள் எம்.ஏ 26 வயது, 5 அடி 5 அங்குலம், விவாகரத்து ஆனவள். மணவாழ்க்கை ஒரு நாள்தான். குழந்தை இல்லை. உயர்ந்த படிப்பும் நல்ல சம்பளமும் உடைய அய்யர் மணமகன் தேவை.

பெட்டி எண்: 23

மத்திய அரசு வங்கியில் மாதம் ரூ. 1300 சம்பளம் பெறும் 33 வயதுள்ள பட்டதாரி வன்னிய குல க்ஷத்திரிய வாலிபருக்கு அதே இனம் அல்லது அதைச் சார்ந்த இனத்தில் வசதியும் மதிப்பும் மிக்க குடும்பத்திலிருந்து பெண் தேவை. பெட்டி எண்: 24

லக்ஷணமான, சிவப்பு, தையல் வீட்டு வசதி வேலைகளில் தேர்ச்சி, டில்லி உத்தியோகம், போஸ்ட் கிராஜுவேட், சுவாதி / ஹஸ்தம் 30/27 வயது, 2 தமிழ் நாடு சகோதரிகள், 4, 7'' உயரம். சற்று கேது தோஷம். தகப்பனர் ரிடயர்ட் ஆபீஸர். கௌசிககோத்ர பிரஹசரணம். பம்பாய்–டில்லி பிரஹசரண, கௌசிகர் அல்லாத லெக்சரர், டாக்டர், இஞ்சினியர் 'நல்ல உத்தியோகம். 32–40 வயது பையன் சற்று குட்டை 5' வரை பரவாயில்லை. ஜாதகம் தேவை. விவரங்களுடன். சீக்கிரம் திருமணம். பெட்டி எண்: 25

திருமண மலர்

திருமணம் செய்து கொள்ள விரும்பும் ஆண்களும் பெண்களும் மங்கையர் மலரில் விளம்பரம் செய்யலாம். கட்டணம் ரூ. 10/– மட்டுமே. இது மங்கையர் மலர் என்ற பெயருக்கு போஸ்டல் ஆர்டராக மட்டுமே அனுப்பப்பட வேண்டும். விளம்பரத்திற்குப் பதில் அனுப்புபவர் பெட்டி எண்ணை மறக்காமல் குறிப்பிட வேண்டும்.

முகவரி : 'திருமண மலர்'ப் பகுதி மங்கையர் மலர், கிண்டி, சென்னை-32.

எப்போதும் பெண்

சுஜாதா

முன்கதைச் சுருக்கம்

அவள் எப்போது பெண் என்று நிர்ணயிக்கப்பட்டாள்?

ஒரு நாள் இரவு கரண்ட் நின்றுபோனதால் அப்பாவும் அம்மாவும் மொட்டைமாடிக்குப் போய்ப் படுத்துக் கொண்டிருந்தார்கள். குழந்தைகள் பாட்டியுடன் கீழே படுத்திருந்தன. அப்பாவும் அம்மாவும் இப்போதெல்லாம் சேர்ந்தே படுத்துக்கொள்வதில்லை. அப்பாவுக்கு நாற்பத்து ஐந்து வயது. அம்மாவுக்கு முப்பத்தி ஏழு. இருபது வருஷ மண வாழ்க்கைக்கு அப்புறம் அவர்கள் இயல்பாக ஒருவரை யொருவர் சரீரத் தேவையின்றி விலகிக்கொண்டார்கள். மூன்று குழந்தைகளும், பாட்டி கூட இருப்பதும், வீட்டின் குறுக்களவும் உபரிக்காரணங்கள். இதனால் அம்மா அப்பாவுக்கு அலுத்துவிட்டாள் என்றில்லை...

அம்மா அசதியில் இருந்தாள். தனக்கு நிகழ்ந்ததில் பாதிதான் அவளுக்குத் தெரிந்தது. கொஞ்ச நேரத்தில் தூங்கிப்போய் விட்டார்கள்.

அம்மாவின் உள்ளுக்குள் இந்த முற்றுப்புள்ளி அளவுக்கு ஒரு சின்ன சஞ்சல முட்டை காத்திருந்தது. அதன் அளவு சரியாகச் சொல்லப் போனால் 0.132 மில்லி மீட்டர். அந்தப் புள்ளியை நோக்கி அப்பா விடுவித்த லட்சக்கணக்கான குட்டியாத்திரிகர்கள் அந்தப் புராதான உள்ளிருட்டில் குருட்டுயாத்திரிகர்களாக நெளிந்து நெளிந்து சென்றனர்.

அதில் ஒரு யாத்திரிகனைக் கவனிப்போம். குட்டி என்றால் படு குட்டி, ஒரு மில்லி மீட்டரில் நாலின் கீழ் நூறுபாகம் அதன் நீளம். சின்ன தட்டையான முட்டைவடிவத் தலை. கயிறுபோல் வால். தலைக்குள் க்ரோமோஸோம்கள். அதற்கும் உயிர் இருக்கிறது. அதற்கு ஒரு குறிக்கோள், ஞாபகம் இருக்கிறது. அது தேடுவது, அதற்கு அந்த ஆச்சரிய நீச்சலை யார் சொல்லிக்கொடுத்தார்கள்? முட்டை சமர்த்தாக நகராமல் எதிர்காலக் கருவாகக் காத்திருக்க நம் யாத்திரிகன் அதை அடைய ஆசைப்பட்டு நெளிந்து நெளிந்து நீந்துகிறான். அவனுடன் அதை அடையப் போட்டியாக இன்னும் எத்தனை பேர்? ஒருத்தியை அடைய 200, 000, 000 காதலர்கள்! எல்லாம் நான் நீ என்று முண்டி அடித்துக் கொண்டு முன்னேற யார் அடையப் போகிறார்கள்? முட்டைக்குள் இருப்பது எக்ஸ் வகை க்ரோமோஸோம். தாக்கவரும் லட்சோப லட்சம் யாத்திரிகர்களில் பேர் பாதி எக்ஸ். மற்ற பாதி ஒய். எக்ஸ் உள்ளே சென்றால் பிறக்கப்போவது பெண். ஒய் நுழைந்தால் பிறக்கப்போவது ஆண்.

அம்மாவின் கர்ப்பம் அடுத்த வாரம் ஊர்ஜிதம் செய்யப்பட்டு ஆப்ரேஷனுக்கான தேதியும் நிர்ணயிக்கப்பட்டது. ''காலை வெறும் வயத்தோடே வந்துடுங்க. இந்தச்சின்னப் பிள்ளையைக் கொண்டு வராதீங்க, வீட்டில விட்டுருங்க. மூணும் பிள்ளைங்களா?''

''ஆமா டாக்டர்.''

''அப்போ ஒரு பெண்ணைப் பெத்துக்கலாமே''

''வாழ்ந்தது. இதுவும் பிள்ளையாப் பிறக்கும். ஏற்கனவே வீட்டில கிஷ்கிந்தை! எனக்குவேண்டாம். நான் மாட்டேன் டாக்டர். எதையாவது சொல்லி அவர் மனசை மாத்திடப் போறார்.''

அதைக் கொல்ல தேதி நிச்சயித்து விட்டார்கள்...

2

அம்மா தயாராக இருந்தாள். அதிகாலையிலேயே எழுந்து சாயங்காலத்துக்கும் சேர்த்து டிகாக்ஷன் போட்டுவிட்டு 'மது ரவி' இரண்டையும் பாட்டி எப்படியோ சமாளித்துவிடுவாள். இந்த ரகுதான் பாடாய்ப் படுத்தும். அம்மா தூங்கி எழுந்திருக்கிறபோது இல்லை என்று தெரிந்த மாத்திரம் கூரையைப் பிடித்துக்கொண்டு கத்துவான். சாப்பிட மாட்டான். படுத்துவான். இருக்கிற சாமான்களை எல்லாம் ராட்சத்தனமாக வீசி எறிவான். என்ன செய்வது? எப்படியாவது பாட்டி பார்த்துக்கொண்டுதான் ஆக வேண்டும். இன்னொரு ரகுவுக்கு ஒரு நாள் அவஸ்தை எம்மாத்திரம்!'

அப்பாவை எழுப்பிக் காப்பியைக் கொடுத்துவிட்டு, ''பாட்டி! சாயங்காலத்துக்கு டிபன் பெரிய அடுக்கில வெச்சிருக்கேன். ராத்திரிக்கும் சேத்து சாதம் பண்ணி வெச்சிருக்கேன். வடாம் காச்சி வச்சிருக்கேன்''

''எல்லாம் பார்த்துக்கறேன் போயிட்டு வாடீ. இந்த சின்ன ராட்சசனை மட்டும் ஆஸ்பத்திரிக்குக் கூட்டிண்டு போயிடேன்.''

''எட்டு மணிக்குத்தான் எழுந்திருப்பான் பாட்டி. மத்தியானம் மூணு மணிக்குள்ள வந்து சேர்ந்துருவோம். அதுவரைக்கும் பார்த்துண்டாப் போதும்.''

''என்னவோ நீ பண்றது எனக்குப் பிடிக்கவே இல்லை.''

''பாட்டி, இதைப் பத்தி நிறையப் பேசியாச்சு'' என்றாள் அம்மா அலுப்புடன்.

அவர்கள் கிளம்ப இருந்த சமயத்தில் பாட்டி அம்மாவுக்கு விபூதி கொடுத்தாள். நெற்றியில் தீற்றிக் கொண்டாள். தினம் எட்டு மணிக்குத்தான் எழுந்திருக்கும் ரகு சரியாக விழித்துக் கொண்டு ''அம்மா! அம்மா!'' என்று கூப்பிட ஆரம்பித்தான்.

''எங்கயோ இதுக்கு மூக்கிலே வேர்க்கறது. 'தூங்குடா!' என்று அப்பா அதட்டினார். ரகு கரத்தாக அழ ஆரம்பித்தான். அதனால் அப்பாவும் கோபம் மிகுந்து, குழந்தையைப் பளீர் என்று கன்னத்தில் அடித்துவிட, அது இன்னும் பெரிசாக அழ ஆரம்பிக்க அப்பா, ''இப்ப நிறுத்தப் போறியா இல்லையா'' என்று தெருக் கோடி வரை கேட்கும்படி அதட்ட, அதனால் ரகுவின் அலறல் உச்சகட்டம் பெற அம்மா அதை அணைத்துச் சமா

தானம் பண்ணி ஒரு வழியாக வாயில் சாக்லட்டைத் திணித்து முதுகில் ''ஒண்டாம் ஒண்டாம்'' என்று தட்டிப் படுக்க வைப்பதற்குள் பாத் ரூமுக்குப் போன பாட்டியைக் காணவில்லை.

''பாட்டி சீக்கிரம் வாயேன்.''

பாட்டி வரவில்லை. திடுக்கிட்டுப் போய்ப் பார்த்தால் பாத்ரூமில் ஏசகேடாக எங்கேயோ காலை வைத்து வழுக்கி விழுந்திருந்த—பாட்டி அப்படியே கிடந்தாள். ''பாட்டி, பாட்டி!'' என்று எழுப்பிப் பார்த்ததில் மூச்சு இருப்பதைப் பார்த்து குண்டுகட்டாகத் தூக்க முயற்சிக்க பாட்டி ரகுவுக்குப் போட்டியாக அலற ஆரம்பித்தாள்.

''சனியனே! பாத்ரூமில் பாசி தேய்னு அடிச்சண்டேன். என்ன ஆச்சு பாரு!''

''சுளுக்கிண்டுடுத்தா பாட்டி?''

''உன் தலை.என்னவோ பெரிசா ஆய்டுத்து. தொட்டாலே சுத்தறு. போய் நாராயண ராவ் டாக்டரை அழைச்சண்டு ஓடிவா.''

பாட்டி அப்படியே கிடந்தாள். கிட்ட வந்தாலே 'வலிக்கிறது தொடாதே' என்று அழுதாள்.

அப்பா பாட்டிக்கு நிச்சயம் ஃபர சர் என்று தீர்மானித்து விட்டார். ாக்

எலும்பு முறிவுதான். தொடை எலும்ப் ஃபீமரோ எதோ சொன்னார்கள். ஆம்புலன்ஸ் வந்து ஆஸ்பத்திரிக்குப் போய் ஆர்த்தோபீடிக் வார்டில் சேர்ப்பதற்குள் மத்தியானம் ஒரு மணி ஆகிவிட்டது. ஏகப்பட்ட பாண்டேஜைப் போட்டுக் கட்டி டிராக்ஷனில் வைத்து விட்டார்கள். பாட்டியைப் பார்ப்பதற்கு மது ரவி இரண்டு பேருக்கும் வேடிக்கையாகவும் பயமாகவும் இருந்தது. ''என்ன பாவத்தைப் பண்ணேனோ! என்ன பாவத்தைப் பண்ணேனோ!'' என்று அரற்றிக் கொண்டிருந்தாள்.

''டாக்டர், எத்தனை நாளாகும் சரியாப் போறதுக்கு?''

''நாளா? மாசக் கணக்கில ஆகும்.''

''கிழம் வேணும்னுட்டே விழுந்து வெச்சிருக்குன்னு, நம்ம பிளானைக் கலைக்கறதுக்குன்னே!''

''சே, எதையாவது உளறாதே!''

''அப்பா பாட்டிய ஏன் கொடிக் கொம்பில மாட்டியிருக்கா?''

''சும்மாருடா.''

''நான் எதுக்கு இருக்கணும்?''

''என்ன பண்றதாம்?''

''கொஞ்ச நாள் பொறுத்துப் பண்ணிண்டுடலாம். அக்காவை வரச் சொல்றேன்.''

''உங்க அக்கா வேண்டாம். ஊர் பூரா தண்டோரா போட்டுடுவா.''

''எப்படியும் இன்னிக்கு முடியாது. லேடி டாக்டருக்குப் போன் பண்ணிச் சொல்லிடறேன்.''

''மூணு நாலு மாசம் வரைக்கும் பண்ணிக்கிறளாமே?''

''பார்க்கலாம். முதல்ல பாட்டியைப் பார்க்கலாம். அப்புறம்தான் பேத்தி...''

பாட்டியை அவர்கள் கவனிக்க வேண்டியது அவசியமாக இருந்தது. பாட்டி அவர்களுக்கு நேர்வழி உறவு இல்லை. அப்பா பாட்டிக்கு சுவீகாரம் போனவர். அவளுக்கு ஊரில் நிலமும் ஒரு வீடும் இருக்கிறது. பாட்டிக்கு அப்புறம் அவர்களுக்குத்தான் நியாயமாக வர வேண்டும். அதற்காகத்தான் சிசுருஷைகள் எல்லாம்.

பாட்டிக்கு நேர்ந்த விபத்தில் அன்றைக்குக் கொல்லப்படாமல் தப்பித்த அந்தச் சின்ன உயிர் சந்தோஷப்பட்டதா என்று சரிவரச் சொல்ல முடியவில்லை.

அம்மாவின் வயிற்றுக்குள் அது என்ன செய்து கொண்டிருக்கிறது பார்க்கலாம்.

இன்றைய தினம் அது கால் அங்குல நீளத்துக்கு வளர்ந்து விட்டது. ஒரு மாதத்தில் அளவில் ஐம்பது மடங்கு, எடையில் பத்தாயிரம் மடங்கு முன்னேற்றம். ஆரம்பத்தில் சூலுற்ற ஒரே செல்லாக இருந்தது இரண்டாகி, இரண்டு நாலாகி, எட்டாகி பதினாறாகி, பேராசை பிடித்த பெருக்கம்! ஒரு மாதத்திலேயே எப்படிப்பட்ட வளர்ச்சி! அந்தக் கால் அங்குலத்திலேயே ஒரு சின்னத் தலை, உடம்பு, ஏன்! ஒரு வால் கூட, ஒரு இதயம், துடிக்கும் ரத்தம், கை கால்களின் ஆரம்பங்கள், கண், காது, மூளை.

அம்மா பாட்டிக்கு பிளாஸ்க்கு பிளாஸ்காகக் காப்பியும், டிபன் பாக்ஸில் சாப்பாடும் அனுப்பிக் கொண்டிருந்த அந்த முதல் மாதத்தில் நம் புள்ளி முட்டை ஒரு குட்டியூண்டு கால் அங்குல மனுஷியாகிவிட்டான்.

பாட்டிக்கு நல்ல வேளை முறிவு ஆரம்பத்தில் எதிர்பார்த்தபடி அவ்வளவு பெரிசில்லை. என்னவோ இரும்பில் வட்டங்களையெல்லாம் அமைத்து சித்திர வதை பண்ணி இழுத்துப் பிடித்துக் கொஞ்சம் கொஞ்சமாக பிசகியிருந்த பாகத்தை நீட்டி பழைய பொஸிஷனுக்குக் கொண்டு வந்து விட்டார்கள். பாட்டி ஆஸ்பத்திரியில்தான் இருந்தாலும் இரண்டு மாசத்தில் கொஞ்சம் நடமாட முடிந்





தது. அம்மா மறுபடி அந்தப் பிரச்னையைக் கிளப்பினாள்.

''இப்பவாவது போய் டாக்டரைப் பார்த்துட்டு வரலாம். லேட் ஆகலேன்னு! இன்னைக்கே கூடப் பண்ணிண்டு வர நான் தயார். எனக்காக நீங்க அங்க கூட வரவேண்டாம். நான் காமாட்சியை அழைச்சுண்டு போயிடறேன். நீங்க ஒரு நாள் பாட்டியையும் குழந்தைகளையும் பார்த்துண்டாப் போறும். சமையல் கூடப் பண்ண வேண்டாம். எட்டுருக்கு ஓட்டல் இருக்கு.''

''முதல்ல லேடி டாக்டரைப் போய்ப் பார்க்கலாம்.''

அவள் பரீட்சை பண்ணிப் பார்த்து விட்டு ''பெரிசா வளர்ந்துடுத்து. ரிஸ்க்'' என்றாள்.

''அப்ப என்னதான் பண்ணச் சொல்றேள் டாக்டர்?''

''பெத்துக்கம்மா!''

அம்மா விசித்து அழுதாள். ''என்ன பண்ணுவேன். வேற யாராவது பண்ணமாட்டாளா டாக்டர்?''

''பண்றுங்கம்மா. லேபோர் ரிஸ்க் எடுத்துண்டு பண்றுங்க. ஆனா நான் பண்ண மாட்டேன். ரொம்பப் பெரிசாயிடுத்து.''

''என்ன ரிஸ்க்?''

''வேண்டாங்க. ஸெப்டிஸ் அது இதுன்னு உயிருக்கே ஆபத்தா முடிஞ்சுடும்.''

அப்பா நகத்தைக் கடிக்க ஆரம்பித்தார்.

''சொல்றதைக் கேளுங்க. பேசாம இதைப் பெத்துக்கிட்டு ஆபரேஷன் பண்ணிண்டுடுங்க. எதுக்காகம்மா அழறீங்க? அந்தப் பிள்ளைதான் பிற்காலத்தில் பிரபலமா வருதோ என்னவோ?''

''புள்ளையா? வீட்டிலே மூணு குரங்கு இருக்கு டாக்டர்.''

அப்பா திரு திரு என்று ஒரு வார்த்தைக் பேசாமல் சைக்கிள் ரிக்ஷாவில் யோசித்துக் கொண்டே வந்தார்.

இப்போது 'அவளு'க்குக் கழுத்து, முகம் எல்லாம் ஒரு வடிவுக்கு வர ஆரம்பித்து விட்டது. வாய் கொஞ்சம் கொஞ்சமாக ஷேப்புக்கு வரத் துவங்கி விட்டது. கொஞ்சம் மூக்கு தோற்றமளிக்க ஆரம்பிக்க, பக்க வாட்டில் இருந்த கண்கள் கொஞ்சம் முன் பாகத்துக்கு வந்து விட்டன. இரண்டாவது மாதக் கடைசியில் கண்களுக்கு இரப்பைகள் அமைந்து மூடிப் பார்க்கலாமா என்று யோசிக்கத் துவங்கி விட்டன.

பெரிய நெற்றி, கை கால்கள் சற்றே சுதந்திரம் பெற்று உள்ளங்கை கால்களில் விரல்களின் ஆரம்பங்கள். அநாவசியத்துக்கு வளர்ந்திருக்கும் வாலைப் புறக்கணிக்க ஆயத்தங்கள் நடக்கின்றன. பார்ட்டிலேஜுகளின் மூலம் எலும்புக் கூட்டுக்கு ஒத்திகை நடந்தாகிறது. கருவில் பெண் அடையாளங்கள் தோன்றத் துவங்குகின்றன.

அம்மா மூன்றும் மாசத்தின் ஆரம்பத்தில் தன் விதிக்குப் பழகி விட்டாள் என்றே தோன்றியது. அவ்வப்போது ரவியைக்

கோப மேலிட்டால் நாலு சார்த்துச் சார்த்துவான். அப்பாவை மனசுக்குள் திட்டிப் பார்ப்பான். இந்த வயசில இந்தப் பிராமணனுக்குப் புத்தி போச்சு பாரு. பாட்டி நொண்டிக் கொண்டே வீட்டுக்கு வந்து விட்டாள்.

''இப்பவே பூசினுப் போல இருக்கு. நிச்சயம் பொண்ணுதாண்டி!'' என்றாள் சந்தோஷமாக.

''அய்யோ, பாட்டி! ஞாபகப்படுத்தாதிங்கோ.''

''உனக்கு என்ன கஷ்டம்? நான் பார்த்துக்கறேன் எல்லாத்தையும். தேச்சுத் தேச்சுண்டு நடந்தாவது உன் குழந்தைக்கு எண்ணெய் தேய்ச்சுக் குளிப்பாட்டி, எல்லாம் செய்யறேன்!''

''என்ன தரித்திரமோ.''

''சீ, தரித்திரம்னு எல்லாம் சொல்லாதடி. ஒவ்வொருத்தர் குழந்தை பொறக்கலையேன்னு எவ்வளவு தவம் கிடக்கிறா?''

மூன்றும் மாதத்தில் அதற்குப் பற்கள் தெரிய ஆரம்பித்தன. இருபது தற்காலிகப் பற்களின் மொட்டுக்கள். ஆறு மாசம் கழித்துக் கத்தப் போகிற கத்தலுக்கு இப்போதே தொண்டைச் சதைகள் வளர ஆரம்பித்தன. ஜீரண உறுப்புக்கள் செயல்படத் தொடங்கி விட்டன. சிறுநீரகங்கள் கூடச் சின்னதாக வேலை செய்யத் துவங்கி சொட்டு மூத்திரம் போய் அம்மாவின் திரவங்களுடன் கலக்க ஆரம்பித்து விட்டது.

மல்லிகைப் பூ மொட்டுக்களைச் சாயங்காலம் எடுத்து ஈரத் துணியில் வைத்தால் காலையில் மலரும்போது பழுப்பு நிறமாகி விடுகிறது.

அதைப் போக்க:

மொட்டுக்களைத் தொடுத்தவுடன் சிறிது நேரம் தண்ணீரில் அமிழ்த்துங்கள். பிறகு தண்ணீரிலிருந்து எடுத்து உதறி ஒரு வாய் அகன்ற பாத்திரத்தில் போட்டு மூடிவைத்து விடுங்கள். காலையில் மிக வெண்மையாக இருப்பதோடு சீக்கிரமாகவும் வாடாது.

—எஸ்.எஸ். மணியம்



இப்போது குழந்தை தனிப்பட்ட மனுஷப் பிரஜை என்பதில் சந்தேகமில்லை. பற்பல அங்கங்கள் ஸ்திர வடிவம் பெறுகின்றன. கை கால்கள், ஏன் விரல்கள் கூடத் தன்னிச்சையாக அசையத் துவங்குகின்றன.

''இந்தா! ஆரஞ்சுப் பழம் சாப்பிடு'' என்று அப்பா பரிவாக அம்மாவுக்கு வாங்கிக் கொண்டு வந்ததை மதுவும் ரவியும் பார்த்து ஒரே மூச்சில் காலி பண்ணி விட்டு ''நேக்கு'' என்று லேட்டாக வந்த ரகுவைத் தோவால் அடிக்கிறார்கள். அம்மாவுக்குத் தன்னைச் சுற்றியுள்ள குழந்தைகளைப் பார்த்ததும் ''இன்னொன்று!'' என்று பகீர் என்கிறது. சாயங்காலம் சுவாமிக்கு விளக்கு ஏற்றி வைக்கத் தாமதம். தாமத கர்ப்பத்தால் பயம். அடிக்கடி மூச்சு வாங்குகிறது. மார்னிங் ஸிக்னஸ் ஒரு வழியாக ஓய்ந்திருந்தாலும் எதைக் கண்டாலும் எரிச்சல். விவித பாரதியில் ஒன்பதேகால் மணி டிராமாக்களில் முன் போல் சிரிப்பு வரவில்லை. குழந்தைகளுக்குப் பண்ணிப் போடுவதிலோ குளிப்பாட்டுவதிலோ சுவாரஸ்யமே இல்லை. ''இந்தப் பிரசவத்தில நான் செத்துப் போயிட்டேன்னு நீங்க வேற கல்யாணம் செய்துப்பீங்களா?''

''சீ! என்ன பேச்சு இதெல்லாம்?''

''ரகுதான் ரொம்ப ஏங்கிப்போயிடும்.''

''சீ! அப்படியெல்லாம் சொல்லாதே, அசடு!''

''எனக்குஎன்னமோபயமாத்தான்இருக்கு''

''போன பிரசவத்தின்போது கூட அப்படித்தான் சொன்னே.''

''அது மூணு வருஷத்துக்கு முன்னாடி. அப்ப இருந்த தெம்புகூட இப்ப இல்லையே.''

''என்னைஎன்னதான்பண்ணச் சொல்றே?''

''நான் போயிட்டேன்னு என் குழந்தைகளைச் சரியாப் பார்த்துப்பீங்களா?''

''அய்யோ நான் போறேன். கேக்கவே நல்லால்லே.''

அம்மாவுக்குள் இப்போது அது ஆறு அங்குல நீளத்துக்கு வளர்ந்து விட்டது. பிறக்கும்போது இருக்கப் போகும் அளவில் பாதி வந்தாகி விட்டது. இப்போதும் அதைப் பார்த்தால் சரியான மனித வடிவம் என்று சொல்ல முடியவில்லை. தலை பெரிசு, உடம்பு ரொம்ப அகலம், கால்கள் சின்னது. இருந்தாலும் அதை அழகற்றது என்றும் சொல்ல முடியாது. தலை நிமிர்ந்து கொண்டு விட்டது. முதுகு நேராகி விட்டது. மூஞ்சி அகலமாக கண்கள் இங்கே 'ஒன்று அங்கே ஒன்று என்று தள்ளிப் போய், விரல்கள் கச்சிதமாக, விரல் ரேகைகள் கூட சின்னச் சின்னதாய் வைத்துக் கொண்டிருக்கிறது. தோல்தான் இப்படிச் செங்கல் சிவப்பாக சுருங்கிச் சுருங்கி இருக்கிறதே! இப்போது அது உள்ளுக்குள் விஷமம் பண்ண ஆரம்பித்து விட்டது. அம்மா ஒரு நாள் துணிகளுக்கு 'சர்ப்' போட்டுக் கொண்டிருந்தபோது, வயிற்றுக்குள் பறவை சிறகடிக்கிற மாதிரி உணர்ந்தாள். பாட்டியைக் கூப்பிட்டு

'உயிர் இருக்கு. உதைக்க ஆரம்பிச்சுடுத்து' என்றாள். ''பொண்ணுதான்டி. இல்லேன்னு இத்தனே சீக்கிரம் புரண்டுக்காது! நான் எச்சியைப் புள்ளேயான்டிருந்தப்போ ரெண்டாவது மாசத்திலேயே விலுக்கு விலுக்குனு உதைக்க ஆரம்பிச்சுட்டா!''

அம்மா ஒரு நாள் மூன்று ராட்சதர்களேயும் கூப்பிட்டு வைத்துக் கொண்டாள்.

மதுதான் முதலில் கேட்டான். ''அம்மா உனக்கு பாப்பா பொறக்கப் போறதா?''

''ஆமான்டா கண்ணு!''

''இப்ப எதுக்கு இன்னொரு பாப்பா? அதான் ரகு இருக்கே?''

''என்ன பண்றது, ஸ்வாமி இந்தா வெச்சுக்கோன்னு கொடுத்துட்டாரே!''

''சாமிகிட்டவே திருப்பிக் கொடுத்துடு. ரகுவே ஜாஸ்தி.''

அம்மா சிரித்தாள். ''மது! சமர்த்தா அம்மாவைப் படுத்தாம ஒத்தாசையா இருக்கியாடா.''

''இருக்கேம்மா.''

மதுவும் ரவியும் யார் அம்மா கிட்டத்தில் உட்கார்வது என்று சண்டை போட்டார்கள். ரகு புடவைத் தலைப்பை விடவில்லே. ''ம்ம்ம் எங்க அம்மா'' என்றான்.

மூன்றும் சண்டை போட்டு அம்மாவைச் சுற்றி வந்து அவள் மேல் ஏறிக் குதித்து அம்மா கொஞ்சம் சந்தோஷமாக இருக்கும் அரிதான கணத்தை முழுதும் பயன்படுத்திக் கொள்ளும் ஆர்வத்தில் அவள் முகத்தைத் திருப்பி முத்தம் கொடுத்தன. கழுத்தைப் பிடித்துத் தொங்கின.

''கடன்காரா! கடன்காரா! வயத்தில பட்டுது பாரு ஒதை ராஸ்கல்.''

''பாப்பா இருக்காம்மா?'' என்று ரவி அவள் வயிற்றின் மேல் காது வைத்துக் கேட்டான்.

''மது, உன்னேத்தான்டா கூப்பிடறது.''

''நானு நானு'' என்றான் ரகு.

அம்மா மூன்றையும் சேர்த்து அணைத்துக் கொண்டாள்.

வரப்போகிற பிரசவத்தில் அவள் இறந்து விடப்போவது அவளுக்குத் தெரிந்திருக்க வில்லே. (தொடரும்)



பதி, பத்னி அவுர் மீனு

-கற்பூக் இட்டி

இன்று கணவன் ரமேஷ் வந்ததும் கேட்டு விட வேண்டும்.

ப்ளஸ் டு படிக்கும் தங்கை மீனுவைத் தவிர ரமேஷுக்கு வேறு உறவுக்காரர்கள் இல்லை என்று தெரிந்துதான் திருமணம் செய்து கொண்டாள். அதற்காக?

அப்பா, அம்மா, தம்பி, தங்கைகள் என்று பெரிய குடும்பத்துடன் கலகலப்பாக வாழ்ந்தவள், 'திருமணத்துக்குப் பின் மீனுவும் நம் கூடத்தான் இருப்பாள்' என்று ரமேஷ் சொன்னதும் மறு பேச்சில்லாமல் ஒத்துக் கொண்டாள். பாவம், நம்மை விட்டால் மீனுவுக்கு யார் இருக்கிறார்கள் என்று நினைத்தாள். அதற்காக இப்படியா?

''இங்க பாருங்க. இனிமேல் நீங்க எந்தப் பொருள் வாங்கினாலும் இரண்டாகவே வாங்கி விடுங்கள். இரண்டு பெண்கள் இருக்கும் வீட்டில் முதலில் கவனிக்க வேண்டிய விஷயம் இதுதான்.'' என்று வந்தவுடனேயே. ரமேஷைக் கேட்டுக் கொண்டாள்.

ரமேஷும் இந்த மூன்று மாதங்களில் துணிமணியாகட்டும், அலங்காரப் பொருள்களாகட்டும் எதையுமே இரண்டு பேருக்கும் தான் வாங்கிக் கொண்டு வந்தான்.

இன்று மட்டும் ஏன் இப்படி?

மத்தியானச் சாப்பாட்டைக் கேரியரில் போட்டு ஆபீஸ் பையனிடம் கொடுத்தாள். ஆனால் அவன் புறப்படாமல் தயங்குவதைப் பார்த்ததும் ''என்னப்பா, என்ன விஷயம்?'' என்று கேட்டாள்.

சில சமயம் அவன் ஒரு ரூபாய் இரண்டு ரூபாய் வேண்டும் என்றால் இப்படித்தான் தயங்கித் தயங்கி நிற்பான். வற்புறுத்திக் கேட்ட பிறகுதான் ''ஒரு ரெண்டு ரூபா இருந்தாக் கொடுங்க, அம்மா'' என்பான். ''என்ன புதுப் படம் ஏதாவது ரிலீஸாகியிருக்கா?'.' என்று சிரித்தபடியே ரெண்டு ரூபாயைக் கொடுப்பாள். அவன் ஒரு சினிமாப் பைத்தியம் என்பது கீதாவுக்குத் தெரியும்.

இன்றைக்கும் பணம் விஷயமாகத்தான் தயங்குகிறானோ என்று நினைத்து, ''என்ன கந்தா காசு ஏதாவது வேணுமா?'' என்று கேட்டாள்.

அவன் உடனே பதில் சொல்லவில்லை. மாறாக அவளுக்குப் பின்னால் உடலை வளைத்து எட்டி, எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தான்.

கீதாவுக்குப் புதிராக இருந்தது.

''யாரைத் தேடுறே? என்ன விஷயம்னு என்கிட்டச் சொல்லக் கூடாதா?''

''இல்லேம்மா... அது வந்து...''


மீண்டும் ஒரு முறை கழுத்தைச் சாய்த்துப் பார்த்தான். பிறகு ஒரு முடிவுக்கு வந்தவன் போலப் பையிலிருந்து ஒரு பெட்டியை எடுத்தான்.

கந்தனின் செய்கைகள் ஒவ்வொன்றும் ஆச்சரியத்தைக் கொடுத்தன கீதாவுக்கு.

''என்ன பெட்டி? இப்படிக் கொடு பார்க்கலாம்'' என்றபடி கையை நீட்டினான்.

அந்தச் சிறிய பெட்டியைக் சீதாவிடம் கொடுத்தான்.

''ஐயா, இதை மீனம்மா கிட்டக் கொடுக்கச் சொன்னாங்க. நீங்களே அவங்க கிட்டக் குடுத்துடுங்கம்மா. நான் வரேன்.''



வாசல் கதவைத் தாளிடக்கூட மறந்து கையிலிருந்த பெட்டியைப் பிரித்தான். திகைத்தாள்.

வாசலில் ஸ்கூட்டர் சப்தம் கேட்டது.

தன்னிச்சையாக எழுந்த உடம்பைக் கட்டுப்படுத்தி, சுவரைப் பார்த்தபடி திரும்பி உட்கார்ந்து கொண்டாள் சீதா.

'படா'ரென்று கதவு திறந்தது.

''சீத்து....சீத்....'' என்றபடி ரமேஷ் உள்ளே நுழைந்தான். கையில் இரண்டு அட்டைப் பெட்டிகள்.

சீதா திரும்பாமல் கணவனுக்கு முதுகைக் காட்டினாள்.

''கோபமா?'' என்றான் ரமேஷ்.

''உம்'' என்றாள் சீதா திரும்பாமலேயே.

''யார் மேலே கோபம்? என் மேலேயா?''

அதற்கும் 'உம்'தான் பதிலாக வந்தது.

ஒரு அட்டைப் பெட்டியைத் தூக்கி அவள் மடியில் போட்டான் ரமேஷ்.

''பிரித்துப் பாரேன்.''

கோபத்தை ஆவல் வென்றது.

பிரித்துப் பார்த்தாள். கண்கள் மலர்ந்தன. நேற்று ரமேஷிடம் அவள் சொன்ன மோஸ்தர் புடவை. மேட்சிங் பிளவுஸ் துணி.

''ஃபால்ஸ்கூட அடியிலேயே இருக்கு. சீத்துவோட கோபத்தைத் தணிக்க இப்ப ஐயாவே இந்தப் புடவையைக் கட்டிவிட்டப் போறார்'' என்றவன் அவள் மேல் கையை வைத்தான்.

''ஜல்...ஜல்...ஜல்''

சீதா புடவையைச் சரிசெய்து கொண்டாள். ரமேஷ் சாது போல நிலைக்கண்ணாடி முன்பு போய் நின்று கொண்டான்.

உள்ளே வந்தாள் மீனு.

''என்ன அண்ணா, புடவையா?'' என்றாள்.

''ஆமாம், மீனு'' என்றான் ரமேஷ்.

''உனக்கும் ஒண்ணு எடுத்திருக்கேன். டிசைன் பிடிச்சிருக்கா பார்.''

கட்டிலில் கிடந்த மற்றொரு பெட்டியைப் பிரித்துப் பார்த்தாள்.

''நல்லா இருக்கு அண்ணா. இதை நான் எடுத்துக்கறேன்.''

புடவை அடங்கிய ஒரு பெட்டியை எடுத்துக்கொண்டு அறையை விட்டு வெளியேறினாள்.

'ஜல் ஜல்' ஒலி தேய்ந்து மறைந்தது.

தன்னை நெருங்கிய ரமேஷைத் திருப்பி அவன் முதுகில் கையை வைத்து வெளியே தள்ளினாள் சீதா.

''நீங்க சமர்த்தா வெளியே நில்லுங்க. நானே இந்தப் புடவையைக் கட்டிக்கிறேன்.'' என்றாள் மகிழ்ச்சியுடன்!

ரமேஷ் எதற்காக மீனுவுக்கு மட்டும் கொலுசு வாங்கிக் கொடுத்தான் என்பது நன்றாகப் புரிந்தது சீதாவுக்கு. பிறகென்ன கோபம்? பூனைக்கு மணி கட்டியாகிவிட்ட தென்றால் எலிகளுக்குக் கொண்டாட்டம் தானே!

யோசனை

கருத்தடை செய்து கொள்ளாத திருமணம் ஆன பெண்கள் கருத்தரிக்காமல் இருக்க வாரம் ஒருமுறை வாழைப்பூ குருத்தை பொரியல் செய்து சாப்பிட்டு வந்தால், பலன் கிடைக்கும்.



யோசனை



வெற்றிலை அல்லது கீரைவகைகளைக் கனமான வெண்கலப் பாத்திரத்தில் வைத்து அளவான மூடியால் மூடிவிட்டால் வாடாமல் இருக்கும்.

— ப்ரியாபாலு

விவாத மேடை

இது கோபத்தில் மட்டுமின்றி, ஆண்களின் அறியாமையைக் கண்டு எழுந்த அனுதாபத்தாலும் எழுதப்பட்ட கடிதம்.

பத்திரிகைத் துறை, பெண்களுக்கு ஏற்றதில்லை என்று சொல்லும் பத்திரிகைகளும், பத்திரிகையாளர்களும் முக்காடு அணிந்து முடங்கிக்கொள்ள மட்டுமே லாயக்கான நாகரிகமற்ற, நியாயம் தெரியாத பத்தாம் பசலிகள்.

இன்று உலகெங்கும் வெளியாகும் டைம் பத்திரிகையில் அதி உன்னதமான நிலையிலிருக்கும் ஒரே இந்தியர் யார் தெரியுமா? பெர்ரி ஷியா சேதி என்கிற பெண். போலந்து நாட்டின் தொழிற் சங்க லீடரைப் பேட்டியில் மடக்கிப் போட்ட இத்தாலிய நாட்டு ஓரியானு பெல்லாசியும், கார்டர் தன் மனைவியுடன் படுப்பது இரட்டைக் கட்டிலா, ஒற்றைக் கட்டிலா என்று கேட்டு, அமெரிக்காவையே திகைக்க வைத்த பார்பரா வால்டர்சும் பெண் ஜர்னலிஸ்ட்கள்தான். இன்று இந்தியாவில் மிகப் பிரபலமான ஆங்கிலப் பத்திரிகைகளில் பெண்கள் ஆசிரியர்களாக இருக்கிறார்கள். பெண்களை ஆசிரியர்களாகக் கொண்டு வெளிவந்த தமிழ்ப் பத்திரிகைகள் மனதைத் தொடாமல் போயிருக்கலாம். 'ஆங்கிலத்தில் யூத் டைம்ஸ், ஸொசைடி, பெமினு போன்ற பத்திரிகைகள் எதில் குறைந்து விட்டன? இந்தியா டுடேயில் அதி அற்புதமாக இன்வெஸ்டிகேட்டிவ் ரிப்போர்ட்டிங் செய்யும் மது ட்ரேஹான், சுமன் போன்றவர்களைப் பற்றி நண்பர் ராமகப்பன் கேள்விப்பட்டதே இல்லையா? சென்னையில் ஏர்போர்ட் பீட்டுக்கும், கார்ப்பரேஷன் பீட்டுக்கும் மட்டும் பெண்கள் அனுப்பப்படுவதன் காரணம் பெண்களின் திறமைக் குறைவாலல்ல. ஆண்களின் ஆதிக்க மனப்பான்மையால்தான்.

அதிகாலை நாலு மணிக்கு ஊருக்கு வெளியே இருக்கும் விமான தளத்தில் கஞ்சி முற முறப்பு முழு உடையில் பெண் பயணிகளைச் சோதனை போடத் தயாராக நிற்கும் பெண் காவல் படையினரைக் கண்டதுண்டா? உலகில் பெரும்பான்மையான குழந்தைகள் பிறப்பது இரவில்தான். நடு இரவில் பிரசவம் பார்க்கச் செல்வது ஒரு பெண் டாக்டருக்குச் சாத்தியம் என்றால், எந்த நேரத்திலும் விஷயம் சேகரிக்க வெளி வருவது பெண் ரிப்போர்ட்டருக்கு இயலாதது இல்லை. தேவை — nose for news மட்டுமல்ல, தன்னம்பிக்கையும் தைரியமும் கூட. தற்காலப் பெண்களுக்கு இது நிறையவே இருக்கிறது. அதை ஏற்கும் துணிவுதான் சக ஆண் ஜர்னலிஸ்டுகளிடம் இல்லை.

எந்தத் தொழிலாளனுக்கும் proffesionalism அவசியம். . இது முழுமையாக இருப்பவர்களுக்கு ஆணானாலும், பெண்ணானாலும் சரி, எந்தத் தொழில் என்பது பெரிய விஷயமல்ல. எந்தத் துறைக்கும் பொழுது போகவோ, வெறும் புகழோ, பணமோ பெற மட்டும் வருபவர்கள் முழுமையை அடைய முடியாது. தொழிலில் ஆர்வம் உள்ளவர்கள் மனம் dead lineல்தான் இருக்கும். . காஸ் இல்லாமல், குக்கர் இல்லாமல் புகையும் விறகில் காலை ஏழு மணிக்குள் முழு உணவையும் டிபனும் செய்து தரும் பெண்ணினத்தால் நேரத்துக்கு வேலையைப் பொறுப்புடன் முடிக்க முடியாது என்பது அபத்தமாகும்.

எழுத்துக்கு செக்ஸ் கிடையாது. 'பைலைனை' மறைத்துக் கொடுத்தால் எழுதியது ஆணா, பெண்ணா என்று கண்டு பிடிக்கவே முடியாது. உதாரணம்: சில எகனமிக் டைம்ஸ் ..கட்டுரைகள். எழுத்தில் இல்லாத 'ஸெக்ஸை' விஷமத்துக்காக வேணும் உண்டாக்குவது வேலையற்றவர்கள் பொழுது போக்கு.

ஆண் நிருபர்கள் பெரும்பான்மையான 'பீட்'டுகளைக் கூட்டமாகத்தான் செய்கிறார்கள். (இன்னும் சொல்லப் போனால் கூட்டுறவு முறையில் இயங்கி, ட்ரைவ்-இன்னில் பரிமாறப்படும் கலபச் சாப்பாடாக ரிப்போர்ட்டிங்கை மாற்றி விருப்பவர்கள் ஆண்கள்) எத்தனை நிருபர்களுக்கு குண்டர்களைத் தனியே சந்திக்கவோ, அவர்களை பற்றி எழுதவோ துணிவிருக்கு? பெண்ணை ஹிம்சிப்பவன், தனியாக வரும் ஆணைமட்டும் ஹிம்சிக்கத் தைரியமில்லாமல் இருப்பானா? ஆண் உடல் பலத்தால் சாதிக்க முடியாததைக் கூடப் பெண் தன் கவர்ச்சியால் சாதிக்கலாம். கவர்ச்சி என நான் குறிப்பது இனக் கவர்ச்சியல்ல, சாதுர்யம்.

உஷா சுப்பிரமணியன்



பெண்களால் முடியும்

ஜர்னலிஸம் படித்த பலரும் (நான் உள்பட) முழு நேர ஜர்னலிஸ்டாக வராததன் காரணம் அந்தத் தொழிலில் உழைப்புக்குத் தக்க ஊதியமில்லை என்பதுதான். எந்தச் செய்தித் தாளாவது கஷ்டப்பட்டு செய்தி திரட்டியவருக்கு ஒரு 'பைலைன்' அளிக்கிறதா? our special correspondent என்ற முகமற்ற கூட்டுச் சேர்க்கையில் என்ன பெருமிதமிருக்கும்? திறமை உள்ளவர்கள் பகுதி நேர ஜர்னலிஸ்டாகவே ஒரு முழு நேர ஜர்னலிஸ்டின் சம்பாத்தியத்தை விட அதிகம் வருவாய் பெற முடிகிறது. சொந்தக் கால்களில் நிற்கும் பெருமிதமும் பெற முடிகிறது.

பெண்களுக்கு எடிட்டிங் அறிவு இருப்பதில்லை என்பது தவறான வாதமாகும். என்னுடன் ஜர்னலிஸம் படித்த நாற்பது பேரில் எடிட்டிங்கிற்கான பரிசை மெயில் பத்திரிகை ஒரு பெண்ணான எனக்குத்தான் அளித்தது. சமீபத்தில் மிகப் பிரபலமான ஆங்கிலப் பத்திரிகையில் ஒரு எடிட்டிங் குறையை நான் சுட்டிக் காட்டி எழுதிய போது, அதன் எடிட்டர் தன் கைப்பட எனக்குப் பாராட்டுக் கடிதம் எழுதியிருந்ததுடன், யாருமே கவனிக்காதது என் கவனத்தைக் கவர்ந்தது பற்றி நன்றியும் கூறியிருந்தார்.

தகுதியுள்ள பெண்கள் தொழிலுக்கு வருவதில்லை. ஒப்புக் கொள்கிறேன். ஆனால் அது கட்டாயம் தரக் குறைவாலோ, அல்லது அவர்களுக்கு ஏற்றதாக இத்தொழில் இல்லாததாலோ அல்ல.

இந்தியாவில் பத்திரிகைத் தொழிலில் இன்னும் பல கற்களைக் கடந்தாக வேண்டும். அதற்குள் குறுகிய ஸெக்ஸிஸ்ட் மனப்பான்மையை வளர்த்துக் கொண்டால் நஷ்டப்படப் போவது பெண்கள் மட்டுமல்ல. இந்தத் தொழிலும்தான்.

- உஷா சுப்பிரமணியன்

பெண்கள் பத்திரிகைத் துறையில் வெற்றிகரமாகப் பணியாற்ற முடியாது என்ற கருத்து சென்ற இதழில் திரு ராமசுப்புவால் தெரிவிக்கப்பட்டிருந்தது. இதை ஒப்புக்கொள்ள முடியவில்லை.

உலகெங்கும் மட்டுமல்ல, நம் நாட்டிலும் பல பெண்கள் இத்துறையில் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறார்கள். பெண்களை ஆசிரியர்களாகக் கொண்ட பத்திரிகைகள் குறிப்பாக வட நாட்டில் வெற்றிகரமாகத்தான் நடந்து வருகின்றன.

செய்திகளைச் சேகரிக்க, நினைத்த நேரத்தில் பெண்களால் போக முடியாது என்று குறிப்பிடப்பட்டிருந்தது. இது ஓரளவுக்கு நமது சமுதாயச் சூழ்நிலையைப் பொறுத்த மட்டில் உண்மைதான். ஆனால் ஓரளவுக்குத்தான் உண்மை. ஒருவேளை தற்போதைய சூழ்நிலையில் அவர்களால் யுத்த களங்களுக்கோ, வெளி நாடுகளுக்கோ, பயங்கர விபத்துக்கள் நடந்த ஸ்தலங்களுக்கோ உடனே சென்று செய்திகள் சேகரிக்க முடியாமலிருக்கலாம்.

இதிலும் அவர்களது இயலாமை ஒரு பங்கென்றால் அவர்கள் போதிய அளவு ஊக்குவிக்கப் படுவதில்லை என்பது இரண்டு பங்கு. இந்தச் சூழ்நிலை கூடிய சீக்கிரம் மாறும் என்பதில் ஐயமில்லை. வெளி நாடுகளில் பெண் பத்திரிகையாளர்கள் ஆண்களுக்குச் சமமாகத்தான் செயல்படுகிறார்கள். இங்கும் கொஞ்ச காலத்தில் அந்த நிலை ஏற்படும் என்றே எதிர்பார்க்கலாம்.

முப்பது நாற்பது வருடங்களுக்கு முன்னர் பெண்கள் அலுவலகங்களில் வேலை பார்ப்பதும், டாக்டர்களாகவும், வழக்கறிஞர்களாகவும் பணியாற்றுவதும்கூட நம்ப முடியாமல்தான் இருந்தது. இப்போது அதுவே சகஜமாகி விடவில்லையா? மேலும், செய்தி என்பது அசாதாரணங்களைக் குறித்தது மட்டுமல்ல. சராசரி வாழ்க்கையின் நடப்புக்களும் செய்திகள்தான். இவற்றைச் சேகரிப்பதில் பெண் பத்திரிகையாளர்கள் எந்த விதத்தில் திறமையற்றவர்கள் என்பது புரியவில்லை.

ஒரு நல்ல பத்திரிகையாளருக்கு வேண்டியது இரண்டு தகுதிகள்: 'ந்யூஸ் ஸென்ஸ்' எனப்படும் செய்தியைச் சேகரிக்கும் ஆர்வம்; எழுத்துத் திறமை. இவை இரண்டும் ஆண்களுக்கே உரிய பிரத்யேகத் தகுதிகள் அல்ல.

பாத்திரத்தில் வெங்காய வாசனையைப்போக்கஉப்புத் தண்ணீரில் அலம்பலாம்.

— ஜனனி முரளி



அதேபோல், பெண் பத்திரிகையாளர்களுக்கு நேரத்தைக் குறித்த பொறுப்புணர்வு குறைவு என்று கூறுவதும் குழந்தைத்தனமான வாதமாகப் படுகிறது. கொடுத்த கெடுவுக்குள் கட்டுரைகளை, செய்திகளை சமர்ப்பிக்காத ஆண்களும் இருக்கிறார்கள். அதே கெடுவுக்குள் சிறப்பாக எழுதிக் கொடுக்கும் பெண்களும் இருக்கின்றனர். சோம்பேறித் தனத்துக்கு ஆணென்ன, பெண்ணென்ன?

-ஜானகி வெங்கடராமன்

'பெண்கள் பத்திரிகைத் துறைக்குத் தகுதியானவர்களில்லை' என்ற ராமசுப்புவின் கருத்துக்களைப் படித்தேன். ஆதாரமற்று அவர் வாதாடியிருக்க வேண்டாம்.

முதலில் திரு சுப்பு இந்தக் காலத்தில் தான் இருக்கிறாரா என்ற ஐயம் எழுகிறது. இன்றைக்கு அரை நூற்றாண்டுக்கு முன்பே வை. மு. கோதைநாயகி அம்மாள் வெற்றிகரமாக ஒரு மகளிர் பத்திரிகை (ஜகன்மோகினி) நடத்தியிருக்கிறார். அந்த அடிச்சுவட்டைப் பின்பற்றி இன்று ஏராளமான பெண்கள் இத்துறையில் நுழைந்து கொடி கட்டிப் பறக்கிறார்கள். இன்று பத்திரிகைக் குடும்பத்தில் தங்களுக்கெனத் தனி இடம் பிடித்திருக்கும் 'சூர்யா', 'பெமினா', 'ஈவ்ஸ் வீக்லி' ஆகியவற்றை நாளொரு மெருகும் பொழுதொரு பொலிவுமாக வெளிக் கொணர்வது பெண்கள்தாம் ஐயா! தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ள 'யூத் டைம்ஸ்'ஸின் கடைசி இதழை (மார்ச் 16, ஏப். 14) இவர் பார்த்தால் தெரியும் – அதன் ஆசிரியர் 'அனீஸ் ஜங்' (மறுபடியும் ஒரு பெண்தான்)கிற்கு எப்படிப் புகழாரம் சூட்டப்பட்டிருக்கிறதென்று!

ஏன், நம் மொழியையே எடுத்துக் கொள்ளுங்கள். 'சுஜாதா' இதழைப் பொறுப்பேற்று நடத்தும் 'லக்ஷ்மி', 'சிவசங்கரி' இவர்களெல்லாம் ஆண்களோ? அற்பாயுளில் மடிந்த 'அஸ்வினி' யின் ஆசிரியராக இருந்த இந்துமதியும் ஒரு பெண்மணிதான், திரு சுப்பு அவர்களே!

அடுத்து, 'பத்திரிகைக்காகப் பல இடங்களுக்குச் சென்று செய்தி சேகரிப்பதும், நேரம், காலம் பார்க்காமல் உழைப்பதும் பெண்களால் இயலாது' என்று இவர் அடுக்கடுக்காய் கூறியிருப்

பவை அனைத்தும் 'பெண்கள் வெற்றிகரமாய்ப் பத்திரிகை நடத்துகின்றனர்' என்ற பதிலிலேயே அடிபட்டுப் போய் விடுகின்றன.

சமுதாய மாறுதல்களுக்கும், அதையொட்டி மக்களுக்கு அதிகரித்திருக்கும் தேவைகளுக்கும் ஈடுகொடுத்து வளர்ந்து வரும் பத்திரிகைத் துறையில் ஆர்வத்துடன் வலிய நுழைவதால் பெண்கள் தங்களுக்கெனத் தனிச் சலுகைகள் எதிர்பார்ப்பதில்லை. இவ்வேலையில் இவ்வேலையின் சுவையான அம்சமே பல இடங்களுக்குச் சென்று பல்வேறு மனிதர்களைச் சந்தித்து, சுவையான செய்திகளைச் சேகரித்து கடைசி நிமிடக் காலக் கெடுவுக்குள் பரபரப்பாக எழுதி, பத்திரிகையில் சேர்ப்பதுதான். பத்திரிகை நடத்துவது இருக்கட்டும்; ஃப்ரீ லேன்ஸாக ஒரு பேட்டிக் கட்டுரை எழுதக் கூடத்தான் நிறைய அலைய வேண்டியிருக்கும்; நேரம் பார்க்காமல் உழைக்க வேண்டியிருக்கும்.

'பெண்கள் பத்திரிகைத் துறையைத் திறம்பட நிர்வகிக்க முடியாது' என்பது திரு சுப்புவின் வாதம். 'முடியும்' என்று கண்முன்னே அவர்கள் காட்டிக்கொண்டிருப்பது வாஸ்தவம். இருந்தும் ஒரு வாதத்துக்காக வாதாடினால் அது விவேகமன்று.

-குமாரி எஸ். கோதை

டேபிள் க்ளாத்

— நிர்மலா தேசிகன்



மதுரை கோட்ஸ் ஆங்கர் பருத்தி நூல்: 1 சிட்டம் ஒவ்வொரு வகையிலும்.
அமைப்பு முழுவதிலும் நூலை 3 ஆக உபயோகிக்கவும். 45.7 செ. மீட்டர் வெள்ளை எம்பிராய்டரி லினென். 91.4 செ. மீட்டர் அகலத்தில். எம்பிராய்டரி ஊசி எண் 7.


(55.8 செ.மீ. — 40.6 செ.மீ.) அளவில் துணியை வெட்டிக் கொள்ளவும். துணியை நீளவாக்கிலும், அகலவாக்கிலும் இரண்டாக மடித்து மடிப்புக்களை அழுத்தி மெல்லிய கோடு வருகிற மாதிரி மடிக்கவும். அமைப்பில் வரையும் முழு வரைபடமும் தரப்பட்டிருக்கிறது.

கீழே இடது கை பக்க ஓரத்தில் துணியின் ஒரு நீள பக்கம் பார்த்திருக்குமாறு படத்தை வரைந்து கொள்ளவும். துணியைத் திருப்பி இன்னொரு நீள பாகத்திலும் அதேபோல் வரைந்து கொள்ள வேண்டும். இங்குள்ள படத்தையும் எண் குறிப்பையும் பார்த்து எம்பிராய்டரி செய்ய வேண்டும். ஒரே எண் குறிக்கப்பட்டுள்ள பாகங்களிலெல்லாம் ஒரே வண்ண நூலையும் ஒரே தையலையும் பயன்படுத்த வேண்டும். எம்பிராய்டரியின் பின்பக்கத்தை லேசாக இஸ்திரி செய்து தையல்களைச் சமப்படுத்தலாம். துணியின் ஓரங்களை ஒழுங்காக வெட்டி 1.3 செ.மீ. அளவு மடித்து தைக்க hem வேண்டும்.

எண் குறிப்பு:

1. 07
2. 011
3. 022
4. 0264 ஸாட்டின் தையல்
5. 0265 Satin stitch
6. 0301
7. வெள்ளை White
8. 0264
9. 0265 காம்பு தையல்
10. 0348 Stem stitch
11. 0264 Seeding
12. 0265
13. 022
14. 0265 ஃபிரெஞ்சு நாட் Fench knot
15. 0301 கெட்டித் தையல் Bach stitch

முறுக்கப்பட்ட பருத்தி நூல்,



பரிசு பெற்ற மூன்று சமையல் குறிப்புகள்

1

மாங்காய் இட்டிலி

தேவையான பொருட்கள் :

பெரிய மாங்காய் 2
புழுங்கல் அரிசி ஒரு லிட்டர்
சிறிய தேங்காய் மூடி 1
ஊறவைத்த கடலைப் பருப்பு 500 கிராம்
சமையல் சோடா சிறிது
சீரகம் 2 டீஸ்பூன்
பச்சை மிளகாய் 6
மிளகுப் பொடி 2 டீஸ்பூன்
அவல் 2 பிடி
பச்சை கொத்துமல்லி 1 கட்டு
வெண்ணெய் 100 கிராம்
தேவையான உப்பு
பெருங்காயப் பொடி சிட்டிகை.

செய்முறை :

அரிசியை 2 மணி நேரம் தண்ணீரில் ஊற வைக்கவும். பிறகு அதைக் களைந்து வெயிலிலே நன்றாகக் காயவைத்து பிறகு ரவையாக உடைத்துக் கொள்ளவும். மாங்காய்களைக் கழுவி தோலைச் சீவி, கொப்பரைத் துருவலில் துருவிக் கொள்ளவும். தேங்காயையும் துருவிக்கொள்ளவும். கடலைப் பருப்பை அரை

2

மாங்காய் மீன் டெலிகேஸி

தேவையான பொருட்கள் :

சுத்தம் செய்யப்பட்ட கடல் மீன் துண்டுகள் (ஆற்று மீன் இல்லை) அரை கிலோ
புளிப்பு அதிகமில்லாத முற்றிய மாங்காய் கால் கிலோ
தக்காளி 100 கிராம்
பெரிய வெங்காயம் 1
கறிவேப்பிலை, கொத்தமல்லி சிறிதளவு
வெந்தயம் கால் டீஸ்பூன்
சோம்பு கால் டீஸ்பூன்
உப்பு ஒன்றரை டீஸ்பூன் (அவரவர் தேவைக்கேற்ப)
நல்ல சிவந்த மிளகாய்ப் பொடி 2 டீஸ்பூன்
நல்லெண்ணெய் 3 டீஸ்பூன்
(அல்லது இஷ்டமான எண்ணெய்)

செய்முறை :

மாங்காயைத் தோல் சீவி, துருவிக்கொண்டு அரை லிட்டர் தண்ணீர் சேர்த்து நன்கு மசிய

3

மாங்கோ கெட்சப்

தேவையான பொருட்கள் :

2 மாங்காய்
1 தக்காளி பெரிசு
1 வாழைப்பழம்
1 ஏலக்காய்,
4 பச்சை மிளகாய்,
1 இஞ்சித் துண்டு சிறியது.

மணி ஊறவைக்கவும். பிறகு பிழிந்து, அவல், தேங்காய்த் துருவல், மாங்காய், பச்சை மிளகாய் சேர்த்து விழுதுபோல் அரைக்கவும். அரிசி ரவையில் இந்த விழுதைப் போட்டுத் தேவையான உப்பு சேர்க்கவும். பிறகு சீரகம், மிளகுப் பொடி, பிழிந்த கடலைப் பருப்பு, துண்டாக்கிய கொத்தமல்லி, சிட்டிகைபெருங் காயப் பொடி இவற்றைச் சேர்த்து ஜலம் விட்டு அரிசி இட்லி மாவு பதத்தைவிடச் சிறிது கெட்டியாகக் கரைத்துக் கொள்ளவும். சிட்டிகை சமையல் சோடா சேர்த்து 3 மணி நேரம் ஊறவைக்கவும். பிறகு இட்லிகளாக வார்த்து ஆவியில் வைத்து எடுக்கவும்.

இதற்குத் தொட்டுக் கொள்ளச் சட்னி வேண்டாம். அதுவே உப்பும், உறைப்பும் புளிப்புமாக இருப்பதால் சிறிது வெண்ணெ யைத் தொட்டுக் கொண்டு சாப்பிடலாம்.

முதல் பரிசுபெற்ற சமையற் குறிப்பு

திருமதி குமுதா
8, பாலாஜி நகர் (முதல் தெரு)
விருகம்பாக்கம், சென்னை-92



வேகவைக்கவும். சூடு ஆறிய பிறகு நன்கு பிசைந்து வடிகட்டி ஜூஸ் எடுத்துவைக்கவும். ஒரு வாயகன்ற பாத்திரத்தை அடுப்பில் வைத்து 3 டேபிள் ஸ்பூன் எண்ணெய் ஊற்றி காய்ந்ததும் தீயைச் சிறிதாக்கி முதலில் வெந்தயத்தையும் பிறகு சோம்பையும் போட்டுத் தாளிக்கவும். பொரிந்து மணம் வந்ததும் வெங்காயத்தைப் பொடியாகநறுக்கி போட்டு இறக்கவும். இளம் சிவப்பு நிறத்தில் வதங்கிய பிறகு கருவேப்பிலை, கொத்த மல்லித் தழை, தக்காளி இவைகளையும் சேர்த்துச் சுருள வதக்கவும். பிறகு மிளகாய்ப் பொடி, அரைத்து வைத்துள்ள மசாலாவையும் போட்டுக் கிளறி மாங்காய் ஜூஸை ஊற்றவும். இட்டமாக உப்புச் சேர்த்து சிறு தீயில் கொதிக்க விடவும். சுமார் 4, 5 நிமிடங்கள் கழித்து அதில் மீன் துண்டுகளைத் தனித் தனியாக இடம் விட்டுப் போடவும். பிறகு மூடிவைத்து வேக விடவேண்டும். சுமார் பத்து நிமிடங்கள் கழித்து மசாலா நெடி அடங்கி குழம்பின் இனிய மணம் வந்த பிறகு அரைத்து வைத்துள்ள தேங்காயைச் சிறிது நீர் விட்டுக் கலக்கிச் சேர்த்து மீண்டும் கொதிக்க விடவும்.

தேவையான அளவு குழம்பு வற்றியதும் (சிலருக்கு அடர்த்தியாகவும் சிலருக்கு நீர்க்கவும் இருப்பது பிடிக்கும்) கீழே இறக்கி வைத்தால் ''மாங்காய் மீன் டெலிகேஸி'' ரெடியாகிவிட்டது.

பி.கு.: முழுச் சமையலும் (மிதமான தீயில்தான் செய்ய வேண்டும். அப்போது தான் அதன் சுவையும் வாசனையும் கூடுதலாக இருக்கும். கொழுப்புச் சத்து விரயமாகாது. மேலே சிவப்பு எண்ணெய் படர்ந்து பார்க்க அழகாக இருக்கும்.)

இரண்டாவது பரிசுபெற்ற சமையற் குறிப்பு

திருமதி பாத்திமுத்து சத்திக்.
ஹெச். டி. எ. நாரயணு.
புதுதில்லி-28

1 டீஸ்பூன் சீரகம்

(மேற்கண்ட நான்கு சாமான்களையும் நைஸாக அரைத்துக்கொள்ள வேண்டும்.)

பச்சை மிளகாய்க்குப் பதில் மிளகாய்ப்பொடி சேர்க்கலாம்

125 கிராம் வெல்லம்

அரை டீஸ்பூன் உப்பு

2 சிட்டிகை மஞ்சள் பொடி

1 டேபிள் ஸ்பூன் கார்ன்ப்ளவர் அல்லது மைதா.

செய்முறை :

மாங்காய், தக்காளி, வாழைப்பழம் இவற்றைத் தோல், கொட்டை நீக்கி சிறு துண்டுகளாக்கி இரண்டு டம்ளர் (அரை லிட்டர்) தண்ணீர்விட்டு உப்பு, மஞ்சள் பொடி போட்டு வேகவைத்த பிறகு பழத்துண்டுகளைக் கரண்டியால் நன்கு மசித்து வெல்லத்தைப் பொடி செய்து போட்டு அரைத்த மசாலாவைச் சேர்த்து, கொதி வந்த பின்னர் கார்ன்பிளவரை கரைத்து (ஒரு கரண்டி தண்ணீரில்) ஊற்றி மேலும் சில நிமிடங்கள் சிறிய தீயில் கொதிக்க வைத்து இறக்கவும்.

இந்த கெட்சப்பை சமோஸா, பஜ்ஜி, உருளைக் கிழங்கு வறுவல், பூரி, ரொட்டி, வடை, பேல்பூரி, பாணிபூரி, இவைகளுடன் மற்றும் பாட்டீஸ் உப்பு பிஸ்கட் டேஸ்ட் முதலியவைகளுடன் சாப்பிட நன்கு இருக்கும். பிரிஜ்ஜில் வைத்தால் நீண்ட நாட்கள் இருக்கும். கை படாமல் ஒரு பாட்டிலில் போட்டு வைத்தாலும் நான்கு நாட்கள்வரை கெடாது.

மூன்றாவது பரிசுபெற்ற சமையற் குறிப்பு

திருமதி கங்கா ஆனந்த்
14/2231 கன்னம்வார் நகர்-I
விக்ரோலி, பம்பாய்-82

மாங்காய் சேவை

தேவையான பொருட்கள்:

1. துருவிய மாங்காய் ஒரு கப்
2. தேங்காய் அரை மூடி
3. புழுங்கலரிசி 4 கப்
4. மிளகாய் வற்றல் 4
5. பச்சை மிளகாய் 4
6. பெருங்காயம் ஒரு சிறிய துண்டு
7. கடுகு ஒரு டீஸ்பூன்
8. கடலைப் பருப்பு 2 டீஸ்பூன்
9. உப்பு (ருசிக்கேற்ப)
10. எண்ணெய் அரை கப்
11. முந்திரிப் பருப்பு 50 கிராம்

செய்முறை:

அரிசியை நன்றாகக் களைந்து 2 மணி நேரம் ஊறவைத்து வெண்ணெய் போல் அரைத்து எடுக்கவும். ருசிக்கேற்ப உப்பு சேர்த்து தோசை மாவை விட நீர்க்கக் கரைத்து எண்ணெய் தடவிய இட்லி குக்கரில் ஊற்றி வெயிட் வைக்காமல் பிரஷர் குக்கரில்வைத்து வேகவிடவும். மாவு நன்றாக வெந்த பின் சேவை அச்சில் 2 இட்லிகளாகப் போட்டுப் பிழிந்து ஒரு தட்டில் போட்டு வைக்கவும்.

வாணலியில் எண்ணெயை ஊற்றி கடுகு போட்டு, அது வெடித்ததும் கடலைப் பருப்பு, நறுக்கிய பச்சை மிளகாய், கிள்ளிய மிளகாய் வற்றல், பெருங்காயம், துருவிய தேங்காய், துருவிய மாங்காய் எல்லாவற்றையும் போட்டு நன்கு கிளறி எடுக்கவும். சற்று ஆறியவுடன் சேவையில் போட்டு நன்றாகக் கிளறி நறுக்கிய முந்திரியைத் தூவி அலங்கரிக்கவும்.

—ஸ்ரீமதி கோமதி லட்சுமணன்

மாங்காய் பிட்டு

தேவையான பொருட்கள்:

மாங்காய் பெரியது 2
கடலைப் பருப்பு 200 கிராம்
உளுத்தம்பருப்பு 2 ஸ்பூன்
துவரம்பருப்பு 200 கிராம்
மிளகாய் வற்றல் 6
பெருங்காயம் சிறு துண்டு
வெங்காயம் 2
கடுகு 1 ஸ்பூன்
உப்பு தேவைக்கேற்ப
எண்ணெய் 4 ஸ்பூன்

செய்முறை:

கடலைப் பருப்பு, துவரம் பருப்பு இரண்டையும் சுமார் ஒரு மணி நேரம் ஊறவைக்க வேண்டும். பிறகு மிளகாய் வற்றல், உப்பு, பெருங்காயம் சேர்த்து உரலில் கெட்டியாகவும், பெரிய ரவை போல் இடித்துக்கொள்ள வேண்டும். மாங்காயைத் தோல் சீவி, சீவல் மணையில் தேங்காய்த் துருவல் போல் சீவிக் கொள்ள வேண்டும். வெங்காயத்தைப் பொடிப் பொடியாக நறுக்கிக் கொள்ளவும். அரைத்த மாவுடன் மாங்காய்த் துருவல், வெங்காயத்தைக் கலந்து கடுகு, உளுத்தம் பருப்பைத் தாளித்துக் கலவையில் கலந்து விடவும். குக்கரின் பாத்திரத்தில் எண்ணெய் தடவி அரைத்த கலவையைச் சமமாகப் பரப்பி வைத்துக் குக்கரை மூடி அடுப்பில் ஏற்றவும். வெயிட் போட வேண்டாம். சரியாக எட்டு அல்லது பத்து நிமிடங்கள் அடுப்பில் வைக்கவும். இறக்கிய பின் பாத்திரத்தை அப்படியே ஒரு தட்டில் கவிழ்த்து சிறிது நேரம் ஆனவுடன் துண்டு போட்டுப் பரிமாறவும். துண்டு போடாமல் உதிர்த்தும் சாப்பிடலாம்.

—ரமாமணி பார்த்தசாரதி

ஆம் டிலைட்

தேவையான பொருட்கள்:

பெங்களூரா மாங்காய் 4

மாங்காய்த் துருவலைப் போல் இரண்டரை மடங்கு சர்க்கரை

ஏலப் பொடி 2 டீஸ்பூன்

கிராம்பு 6

ஜாதிக்காய் மிகச் சிறிய துண்டு

செய்முறை:

முதலில் மாங்காய்களை நன்றாகக் கழுவித் துடைத்து வைக்கவும். பிறகு அவற்றின் மேல் தோலைச் சீவி, கொப்பறைத் துருவியில் துருவிக் கொள்ளவும். சர்க்கரையில் திட்டமாக ஜலம் சேர்த்து பாகு வைக்கவும். ஒரிழை கம்பிப் பாகு (அதாவது பாகை ஒரு டம்ளர் நீரில் விட்டு ஆள்காட்டி விரலுக்கும் கட்டை விரலுக்கும் நடுவில் வைத்து விரல்களை அகட்டினால் கம்பி போல வரும்) வந்ததும் துருவலைக் கொட்டி கைவிடாமல் கிளறவும். பாத்திரத்தில் ஒட்டாமல் வரும்போது ஏலப்பொடி, பொடி செய்த ஜாதிக்காய், கிராம்பு இவைகளைப் போட்டுக் கீழே இறக்கவும். நன்றாய் ஆறின பிறகு கண்ணாடி புட்டி அல்லது ஜாடியில் போட்டு வைக்கலாம். 2, 3 நாளைக்கொரு முறை ஜாடியை வெயிலில் சிறிது நேரம் வைத்து எடுத்தால் அதிக நாள் கெடாமல் இருக்கும். செய்வது எளிது. சுவையோ மிகுதி. சிறு குழந்தைகள் விரும்பிச் சாப்பிடுவார்கள்.

—குமுதா

மாமியாருக்குத் தெரியாமல்...

திருச்சி ஜில்லாவைச் சேர்ந்த காணியாளர் என்ற ஒரு வகுப்பாரின் கல்யாணம் நடக்கும் ஒருசில சடங்குகள் மற்ற திருமணங்களில் காண முடியாதவை. திருமணத்தன்று காலை பிள்ளை வீட்டார் வாழைப்பழம், தேங்காய் வெற்றிலை பூ, இவைகளை ஒரு கூடையில் வைத்துப் பெண்ணின் நாத்தனாருக்கு வாங்கிய புதுப் புடவையால் மூடி அதைப் பெண் வீட்டுக்கு எடுத்து வந்து, ''ஆராட்டுதல்'' என்ற சடங்கைச் செய்வார்கள்.

பெண்ணுக்கு அந்த ஒன்பது கஜப் புடவையை மடிசாரு கட்டுக் கட்டி, பட்டுப் பாயில் உட்கார வைத்து, சந்தனம், குங்குமம் தடவுவார்கள். நாலு மூலையில் நான்கு அடுக்குகளை வைத்து ஒவ்வொன்றுக்கும் அடியில் கீழ்க்கோடி, கிருஷ்ணன், பவழ மாலை, சங்கு என்று மாமியார் வைக்க, கல்யாணப் பெண் மற்றவர்களுக்குத் தெரியாமல் கிழக்கு முகமாக ஆரம்பித்து வடக்கு முகமாக எடுத்து மடியில் கட்டிக் கொள்ள வேண்டும்.

வைப்பதும் எடுப்பதும் யாருக்கும் தெரியக் கூடாது. தலைப்பில் அந்தச் சாமான்களை கட்டிக் கொண்ட பிறகு கையில் வெற்றிலை, பாக்கு, பழம் கொடுத்து பெண்ணின் மாமா செய்த பணம் வைத்த வெள்ளி மோதிரம், தங்க மோதிரம், காலுக்கு மெட்டி இவைகளை மாமியார் போட்ட பிறகு பித்தளைப் படியில் அட்சதை வைத்து அதன் மேல் சிறிய விளக்கு ஏற்றி ஒரு தட்டில் அரிசி மாவு, நெல், மஞ்சள், பொடி இவைகளை பெண்ணிடம் கொடுத்து அவைகளைத் தொடச் சொல்லி, விளக்கினால் மூன்று முறை ஐந்து சுமங்கலிகள் ஏற்றி இறக்குவார்கள்.

பிறகு பெண்ணின் மாமனாரைப் பக்கத்தில் உட்கார வைத்து (சிறிய பெண்ணாக இருந்தால் மடியிலேயே உட்கார வைத்து) அரிதிகாரை என்ற சிறிய தங்கக் கம்பியை சகல வாத்தியங்களுடன் பெண்ணின் கழுத்தில் மாமியார் கட்டுவார். பெண்ணுக்குக் கொடுக்கும் நகையையும் அப்பொழுது அணிவிப்பார்கள். பெண்ணின் கையில் வெற்றிலை, பாக்கு, தேங்காய் இவைகளை மாமியார் கொடுத்து அதைப் பெண்ணின் தாயார் தம் மடியில் வாங்கிப் பிரப்பங் கூடையில் வைத்து அதை ஸ்வாமி சந்நிதியில் வைப்பார்.

மாமியார் பெண்ணை வாசலுக்கு அழைத்துச் சென்று காலலம்பி, பால், பழம் கொடுத்து பட்டினால் இடுப்பில் சுற்றி கெட்டி மேளத்துடன் (சிறிய பெண்ணானால் இடுப்பில் உட்கார வைத்து) உள்ளே அழைத்து வந்து மணையில் உட்கார வைத்து ஆரத்தி எடுப்பார்கள்.

பிறகு மேள தாளத்துடன் மாப்பிள்ளை பரதேசிக் கோலத்துடன் வருவார். அந்தப் பெண் கட்டிய மடிசாரு புடவையுடனே மாலை மாற்ற வருவாள்.

இதன் பொருள் என்னவென்றால் கல்யாணம் செய்து அழைத்துச் செல்லும் பெண்ணைத் தன் மகளாகப் பாவித்து நகைகளாலும் சோடஷ உபசாரங்களாலும் மனம் குளிர வைத்து ஏற்றுக் கொள்வதாக ஐதீகம்.

—லட்சுமி ராஜரத்தினம்

திருமணங்கள் பலவிதம் – 1



வாசக நண்பர்

லக்ஷ்மி

என் கதைகளைப் படித்துவிட்டு அவ்வப்பொழுது தொலைபேசி மூலமோ, கடிதங்கள் மூலமோ, தங்கள் பாராட்டுதல்களைத் தெரிவித்து, குறைகளை எடுத்துக் காட்டி விமரிசனம் செய்து என்னை மேலும் மேலும் எழுதும்படி ஊக்குவிக்கும் அன்பான வாசக நண்பர்கள் பலர் எனக்கு இருக்கிறார்கள்.

என்னை நேரில் சந்திக்க முடியாது, கடித மூலமே முப்பத்தைந்து ஆண்டுகள் என்னுடன் தொடர்பு கொண்டிருந்தார் ஒரு வாசக நண்பர்.

முதன் முதலாக பவானி என்னும் என் நாவல் ஆனந்த விகடன் தொடர் கதையாகப் பிரசுரிக்கப்பட்டு, முடிவு பெற்றபோது ஆனந்த விகடன் அலுவலகத்தின் மூலமாக இந்த நண்பர் எனக்குத் தமது பாராட்டுதலைத் தெரிவித்துக் கடிதம் எழுதியிருந்தார். முதல் முதலாக ஒரு வாசகரிடமிருந்து வந்த பாராட்டுக் கடிதம் அது. சுமார் பத்துப் பக்கங்களுக்கு வரிந்து கட்டி எழுதியிருப்பதைப் படித்த நான் மிகவும் மகிழ்ந்து போனேன். கோவை மாவட்டத்தைச் சேர்ந்த வாசகர் அவர். மிகவும் ஆய்வு மனப்பான்மையுடன் என் கதையைப் படித்து விட்டு எழுதியிருந்த கடிதம் அது. முதல் கதை பிரசுரமானபோது எப்படி மகிழ்ச்சி ஏற்பட்டதோ அது போலவே என் வாசக நண்பரிடமிருந்து வந்த முதல் பாராட்டுக் கடிதம் அது என்று நான் மிகவும் மகிழ்ச்சி அடைந்து போனேன். பத்திரமாக ஃபைலில் எடுத்து வைத்துக்கொண்டேன். அதற்குப் பின் நான் எழுதிய ஒவ்வொரு தொடர் கதையும் பத்திரிகையில் முடிவு பெற்றதும் கோவை வாசகரிடமிருந்து தமது பாராட்டுதலைக் கடிதம் மூலம் தெரிவித்துக் கூடவே ஒரு பேனா அல்லது கட்டுக் காகிதம் டைரி என்று ஏதேனும் ஒரு பரிசையும் அனுப்பி வைத்துக் கொண்டிருந்தார். இவ்வாறு சுமார் பதினெட்டு ஆண்டுகள் தொடர்ந்து எனது கதைகளை விடாது பாராட்டித் தமது விமரிசனத்தைத் தெரிவித்த நண்பர் அவர்.

ஒரு சமயம் அவர் எனக்குத் தம்மைப் பற்றிச் சுருக்கமாகக் கடிதத்தில் எழுதியிருந்தார்.

அவர் ஒரு வசதியான விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர் என்றும் விரைவில் திருமணம் செய்து கொள்ளப் போவதாகவும் தெரிவித்திருந்தார்.

அதே சமயம் நான் தென் ஆப்பிரிக்காவுக்கு என் கணவருடன் கிளம்பத் திட்டம் செய்து கொண்டிருந்தேன். பத்திரிகையில் நான் வெளியிட்டிருந்த ஒரு பேட்டியைப் படித்துவிட்டு இந்த அன்பர் உடனடியாக எனக்கு வாழ்த்துக் கூறி ஒரு வெள்ளிக் குத்து விளக்கைப் பரிசாக அனுப்பி வைத்திருந்தார். நான் நன்றி பாராட்டிப் பதில் போட்டு விட்டுக் கிளம்பி விட்டேன்.

ஆப்பிரிக்காவில் எங்கள் வீட்டுப் பூஜை அறையில் அந்த வெள்ளிக் குத்துவிளக்கு ஏற்றி வைத்தேன்.

இருண்ட கண்டத்திலே வாழச் சென்றிருந்த என் வாழ்க்கை ஒளி மயமாக இருக்கட்டும் என்று அவர் கடிதத்தில் குறிப்பிட்டிருந்த வரிகளை அடிக்கடி நினைத்து அவரை மிக்க நன்றியோடு நினைத்துக்கொண்டிருந்தேன்.

தென் ஆப்பிரிக்காவில் டர்பன் நகரத்தில் பார்வையற்ற சிறுவர்களுக்கு ஒரு பள்ளியை அப்பொழுதுதான் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. என் கணவர் நேட்டால் இந்தியன் பிளைண்ட் சொஸைட்டி என்பதன் தலைவராக சமூக சேவையில் தீவிரமாக ஈடுபட்டிருந்தார். பார்வையற்ற சிறுவர்கள், பெரியவர்கள், காது கேட்காதவர்கள், பேச முடியாதவர்கள் கைகால்கள் விழுந்து, சிறு வயதிலையே ஊனமுற்றோர் என்ற பலருக்கும் பல லட்சம் பொருட் செலவில் பள்ளிக்கூடம், தங்கும் ஹாஸ்டல், வேலை செய்யும் தொழிற்சாலை இவை அனைத்தையும் ஒருங்கே கட்டி முடிக்க பொருள் திரட்ட அவரும் அந்தக் குழுவைச் சேர்ந்த உறுப்பினர்களும் மிகவும் பாடுபட்டுக் கொண்டிருந்தனர். நானும் அந்தப் பணியில் என் கணவருக்கு உதவும் பொருட்டு அடிக்கடி பார்வையற்ற இந்தியர் பள்ளிக்கும் ஹாஸ்டலுக்கும் அந்தக் குழந்தைகளைச் சந்திக்கச் செல்வதுண்டு.

என்னால் ஆன வேலைகளை அவ்வப்போது அங்கே செய்வதுண்டு.

இடையே தொடர்பு இல்லாமல் சில ஆண்டுகள் மௌனமாகி விட்ட கோவை நண்பரிடமிருந்து ஒரு கடிதம் திடீரென்று வந்தது. மிகவும் பருமனாக இருந்த கடிதத்தைப் பரபரப்புடன் பிரித்தபோது

உள்ளே இருந்து ஒரு திருமணப் போட்டோவும் கடிதமும் வெளியில் விழுந்தன.

அப்பொழுதுதான் நான் முதன் முதலாக ஓர் உண்மையைத் தெரிந்து கொண்டேன். கோவை வாசக நண்பர் பார்வையற்றவர். சிறு பிராயத்திலேயே பார்வையை இழந்த போதிலும் மனத் தெளிவையும் உற்சாகத்தையும் முயற்சியையும் இழக்காத ஓர் இளைஞர். என் கதைகள் அத்தனையையும் தமது நண்பர் படிக்கக் கேட்டு ரசித்த நண்பர் மூலமே எனக்குத் தொடர்ந்து அத்தனை ஆண்டுகள் பாராட்டுதலைத் தெரிவித்தமுயற்சி பெரிதும் உடைய ஒரு சிறந்த வாசகர்.

தமக்கு ஏற்பட்டிருக்கும் குறையை மறந்து பிறரைப் பாராட்ட வேண்டும் என்ற நிறைவு மனதில் உள்ள ஒரு சிறந்த வாசகர் என்று எண்ணி எண்ணி நன்றியால் நெகிழ்ந்து போனேன்.

ஆப்பிரிக்காவில் நான் தொடர்ந்து இருபத்திரண்டு ஆண்டுகள் தங்கிவிட்டுப் பின்னர் மூன்று ஆண்டுகளுக்கு முன்னர்தான் தாய் நாட்டுக்குத் திரும்பி வந்தேன். சில ஆண்டுகள் நான் எழுதுவதையே நிறுத்திவிட்டிருந்தேன். கோவை வாசக நண்பரிடமிருந்து வந்த கடிதங்களும், திடீரென்று நின்று போயின.

ஒருவேளை அவருக்கு உடம்புக்கு முடியாமல் போய்விட்டதோ?

முதலில் கவலைப்பட்டேன். கடிதம் எழுதி கேட்டேன். பதில் இல்லை. பின்னர் நாளடைவில் மறந்தே போனேன்.

சமீபத்தில் சில நாட்களுக்குப் பின்னர் வெய்யில் நெருப்பாக எரித்துக் கொண்டிருந்த ஒரு பகல் நேரம் தொலைபேசியில் ஒருவர் என்னை அழைத்தார்.

''உங்கள் வீட்டுக்கு அருகில் உள்ள கடையிலிருந்து பேசுகிறேன். இங்கே உங்களைப்பார்க்க ஒரு பார்வையற்ற பெரியவரும் கூட உதவ அவரது மகனும் வந்திருக்கிறார்கள். முகவரி சரியாகத் தெரியாது. அரை மணி நேரமாக இந்தப் பகுதியில் வெய்யலில் சுற்றித் தவிக்கிறார்கள். முகவரியைச் சரியாகச் சொல்ல முடியுமா?...

பளிச்சென்று ஞாபகத்தில் எழுந்தார், கோவை வாசக நண்பர். இத்தனை ஆண்டுகளுக்குப் பின்னர் நேரிலேயே சந்திக்கக் கிளம்பியிருக்கிறாரே...

எனக்கு மிக்க மகிழ்ச்சியாக இருந்தது. உடனே எங்கள் வீட்டுக்கு வரவேண்டிய வழியை விவரமாகச் சொன்னேன்.

சிறிது நேரத்தில் அழைப்பு மணி ஒலித்தது. நல்ல வெய்யிலில் வியர்க்க விருவிருக்க குடை கூட இல்லாது தன் மகனின் கையைப் பிடித்துக் கொண்டு எங்கள் வீட்டைத் தேடி என்னை நேரில் சந்தித்து என் குரலைக் கேட்க விரும்பி வந்த அந்த வாசக நண்பரின் அன்பு என் உள்ளத்தை மிகவும் தொட்டு விட்டது.

சுமார் முப்பத்தைந்து ஆண்டுகளுக்குப் பின்னர் ஊனமுற்றோர் ஆண்டான இந்த வருஷம் அதையே மையக் கருத்தாக வைத்துக் கதை எழுத நினைத்துக் கொண்டிருந்த சமயம் பார்வையற்ற வாசக நண்பர் என்னைத் தேடிக் கொண்டு படை பதைக்கும் வெய்யிலில் சமீபத்தில் நான் எழுதின 'தேடிக் கொண்டே இருப்பேன்' என்ற கதையை நேரிடையாகப் பாராட்ட வந்திருப்பதைக்-



கேட்டபோது நான் வியப்பில் மூழ்கிப் போனேன்.

'தங்கள் கணவர் மறைவுக்குப் பின்னர் தாங்கள் மறுபடியும் தாயகத்தில் வந்து குடியேறியிருப்பதை ஒரு கட்டுரை மூலம் தெரிந்து கொண்டேன். சமீபத்தில் தாங்கள் எழுதும் ஒவ்வொரு கதையையும் விடாது வாசிக்கக் கேட்டு மகிழ்கிறேன். நான் எப்பொழுதும் உங்கள் அபிமான வாசகர். முன்போல உங்களுக்கு வெள்ளிக் குத்து விளக்கோ பார்க்கர் பேனாவோ பரிசளித்துப் பாராட்ட இப்போது வசதியில்லை. ஆனால் மனம் நிறைய வாழ்த்துகிறேன் என்று கூறிக் கொண்டு ஒருசிறு பொட்டலத்தை நீட்டினார். வெய்யிலுக்குச் சாப்பிட உகந்த பச்சைத் திராட்சைப் பழம். அவரது இனிய உள்ளத்தைப் போல அது இருப்பதைக் கண்டு மனம் மிகக் கரைந்து போனேன்.

அட்சர லட்சம் கொடுத்துக் கவிகளைக் கௌரவிக்கும் மன்னர்களின் பாராட்டுதல்களைவிட ஒரு கவிஞனுக்கு அவனது கவிதையைக் கேட்டு ஓர் உண்மையான எளிய ரசிகன் கண்களிலிருந்து உதிரும் ஆனந்தக் கண்ணீரின் ஒரு சொட்டு எத்தனையோ கோடி செம்பொன்னுக்கு ஈடாகாது என்பார்கள். எத்தனை பெரிய உண்மை!

திருமணங்கள் பலவிதம் - 2

● திருமணத்தின்போது மாப்பிள்ளைக்குச் சிறிது நேரம் கண்ணைக் கட்டி விரதம் காக்கச் செய்கிறார்கள். பம்பாயைச் சேர்ந்த பிராமணர்களிடையே இந்த வழக்கம் இருந்து வருகிறது. ஏன் கண்களைக் கட்டுகிறார்கள்?

ஒருவன் பிரம்மச்சாரியாக இருக்கும்போது வேதங்கள் எல்லாம் படித்து அதற்குப் பிறகு நான்குவிதமானவிரதத்தையும் பூர்த்தி செய்ய வேண்டும். பிரஜாபத்ய, ஸௌம்ய, ஆக்னேய, வைகவருதவ ஆகிய நான்கு விரதங்களையும் முடித்து, பிரம்மச்சரிய விரதத்தையும் நிறைவேற்றிக் கொண்டு கிரஹாஸ்ரமத்தில் நுழைய வேண்டும்.

இவ்வகையில் திருமணத்தில் நான்கு விரதங்களையும் மாப்பிள்ளையை அனுஷ்டிக்க வைக்கிறார்கள். சாதாரணமாக விரதம் இருப்பவன் அன்று பட்டினியாகவும் இரவு தூங்காமலும் இருக்க வேண்டும். இவற்றையெல்லாம் ஒரே முகூர்த்த காலத்தில் எப்படி முடிப்பது?

அதற்காக மாப்பிள்ளையின் கண்ணைக் கட்டிவிட்டால் இருளடைந்து இரவு வந்ததாக, இரவில் அவன் தூங்காமல் இருந்ததாக எடுத்துக் கொள்ளலாம். அதற்காகத் தான் மாப்பிள்ளையின் கண்ணை ஒரு பட்டினால் கட்டி விடுகிறார்கள். --திருமதி சங்கர்




"ஸ்..ஸ்..பாரும்மா,
ரொம்ப அரிக்குது..எரியிதும்மா."
உபயோகியுங்கள்
நைஸில்.
உடனடி நிவாரணம்
அளிக்கும்
வியர்க்குரு பவுடர்.
2 தினுசு
டப்பாக்களில்
கிடைக்கிறது
'நீலம்' மற்றும்
'சந்தனம்'.
Glaxo
nycil
வாங்குவீர்
நைஸில்
விரட்டுவீர்
வியர்க்குருவை.
மருந்துப் பொருட்கள்
அடங்கிய—நைஸில்:
1. அதிக வியர்வையைத் தவிர்க்கிறது.
2. வியர்வையை உறிஞ்சுகிறது.
3. துர்நாற்றம் ஏற்படுத்தும் கிருமிகளை அழிக்கிறது.
4. சருமத்திற்கு இதமளிக்கிறது.
CASGL N-4-182 TAM

இதற்கு என்ன செய்வது?

சட்டப் பகுதி

கங்கா ஊத்துக்குளி

கேள்வி:

சென்ற இதழ் மங்கையர் மலரில் வீட்டுக்காரர்கள் தரும் தொல்லைகள் பற்றிக் கேள்வி கேட்டிருந்தார்கள். அதற்கு மாறாகக் குடித்தனக்காரர்களும் தொல்லை தருவதுண்டு. எங்கள் பக்கத்து வீட்டில் வயதான ஓர் அம்மாள் இருக்கிறார். அவருக்கு இருப்பது ஒரே வீடு. அதில் வரும் வாடகையில் தான் காலத்தைக் கழித்து வருகிறார். அவருடைய கணவர் இருந்த நாளிலிருந்து மாடியில் இருந்து கொண்டு கீழே வாடகைக்கு விட்டிருந்தார்.

இப்போது 65 வயதாகி விட்டது. யாரும் துணைக்கு இல்லை. எல்லா வேதனைகளோடு இருதய நோயாளி வேறு. அதனால் கீழே குடி வந்து விட வேண்டும்; மாடி ஏற முடியவில்லை என்று கீழ் போர்ஷன் காரரை காலி பண்ணச் சொல்கிறார். ஆனால் அவர்களோ கீழே இருந்து எல்லாச் சௌகரியங்களையும் அனுபவித்து விட்டதாலும், கிழவிக்கு யாரும் தான் இல்லையே நம்மை யார் கேட்பது என்ற நினைப்பிலும் மாடிக்குப் போகவோ, வேறு வீடு பார்க்கவோ மாட்டேன் என்கிறார்கள். சட்ட ரீதியாக அந்த அம்மாள் என்ன செய்வது?

பதில்:

வீட்டின் சொந்தக்காரருக்கு வீட்டின் எந்தப் பகுதியில் குடியிருக்கவும் உரிமையுண்டு.பின், பல வீடுகள் இருந்தாலும் தான் விருப்பப்பட்ட வீட்டில் வாழ்வதற்கும் உரிமை உண்டு. அதை யாரும் தடைசெய்ய முடியாது. ஒரு மனிதன் வீடு கட்டுவது, தான் தன் விருப்பப்படி வாழவேண்டும் என்பதற்குத் தானே?

இதற்கு ரெண்ட் கண்ட்ரோல் கோர்ட்டில் 'ஓனர்ஸ் ஆக்குபேஷன்' வேண்டி மனு போடவேண்டும். வாடகைதாரரின் மேல் வழக்குத் தொடரலாம். வயதான அம்மாள் தகுந்த காரணங்களைக் கூறி. கீழேயுள்ள குடித்தனக்காரரைக் காலி செய்யக் கோரலாம். அவர் இருதய நோயாளி என்பதற்கு ஒரு மருத்துவ சான்றிதழ் தருவது இன்னும் நலம். நீதிமன்றம் விசாரித்து உங்களின் பிரச்னைக்கு நியாயம் கூறுவார்கள்.

பழநியப்பன் செங்கல்பட்டு

கேள்வி :

பெண்கள் பெண்கள் என்று எங்கு பார்த்தாலும் பெண்களின் உரிமை முழக்கமாகவே இருக்கிறதே! இது எந்த விதத்தில் நியாயம் என்று புரியவில்லை. சட்டத்தின் முன் அனைவரும் சமம், ஆணுக்குப் பெண் தாழ்ந்தவளில்லை என்று சொல்லிக் கொள்கிறார்கள். ஆனால் சலுகைகளும் வேண்டுகிறார்கள். பெண்களுக்கென்றே பஸ்கள், பஸ்களில் இடங்கள், கல்லூரிகள், வேலைகள் எனப் பிரித்துக்கொள்கிறார்கள். சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்னும்போது, பெண் என்ற அடிப்படையில் சலுகைகள் காட்டுவது சட்டப்படி குற்றம் இல்லையா?

பதில் :

இந்திய அரசியல் நிர்ணயச் சட்டத்தின்படி, சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்பது உண்மை. ஒருவருக்கொருவர் குறைந்தவரோ, தாழ்ந்தவரோ இல்லை. அப்படிப் பாகுபடுத்திச் சலுகைகள் வழங்கக் கூடாது எனக் கூறுகிறது நிஜமே. மதம், இனம், ஜாதி, பால் பிறப்பிடம் ஆகிய அடிப்படைகளில் வேற்றுமை பாராட்டக் கூடாது என இந்திய அரசியல் சட்டத்தின் 14வது ஷரத்துக் கூறுகிறது.

ஆனால் பின்னர் பெண்களுக்கென்று சில தனி விதிமுறைகள் ஏற்படுத்தலாம் என்றும் கூறுகிறது. காரணம் நம்முடைய சமுதாயத்தில் பெண்கள் இன்னும் இரண்டாம் பட்சமாகவே கருதப்படுவதால் அவர்களுக்கென்று சில தனிச்

சலுகைகள் வழங்கலாம் என்பதே. இது சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு ஒன்றிலும் கூட ஊர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது. அந்த சுவையான கேஸை இங்கு விவரிக்க இடம் போதாது. வேண்டுமானல் ரெஃபரன்ஸ் தருகிறேன்.

ஏ. ஐ. ஆர். 1954 சுப்ரீம்
கோர்ட் 321
பூசுப் அப்துல் அசிஸ்
எதிர்
பம்பாய் மாநிலம்

‘இதற்கு என்ன செய்வது?’ பகுதிக்கு வரும் கேள்விகள் பெரும்பாலும் கணவன் மனைவிக்குள்ளே உள்ள தகராறுகவோ, மாமியார், மாமனுர், நாத்தனுர் கொடுமைக்கு என்ன பரிகாரம் என்று கேட்டோதான் வருகிறது. கணவன் மனைவி மன வேறுபாட்டைப் பொறுத்தவரை சில கேள்விக்குப் பதில் சொல்லியாகி விட்டது. நிகழ்ச்சிகள் வேறுனுலும் பிரச்னே ஒன்றுதான்; தீர்வு ஒன்றுதான். எனவே, இதே போன்று கேள்விகளே அனுப்பாமல் முன் இதழ்களைப் புரட்டிப் பாருங்கள்.

மாமியார், மாமனுர், நாத்தனுர் கொடுமைகள் போன்ற குடும்ப விவகாரங்களுக்கு வழக்கறிஞரால் என்ன ஆலோசனே சொல்ல முடியும்? தயவு செய்து சட்டப் பிரச்னேகளே மட்டும் எழுதிக் கேளுங்கள்.

சுசீலா நாகேஸ்வரன்
ஹைதராபாத்

கேள்வி:

என்னுடைய உறவினர்களில் ஒருத்தியின் வாழ்வு சிக்கலில் உள்ளது. அந்தப் பெண் அவளுடைய பெற்றோருக்கு ஒரே பெண். சீரும் சிறப்புமாக 18வது வயதில் திருமணம் செய்து கொடுத்தார்கள். அவள்முழுமையாக ஒரு மாதம் கூட வாழவில்லே. அவளின் திருமணத்துக்குப் பின்தான் புகுந்த வீட்டாரின் லட்சணம் தெரிந்தது. பையனுடைய பெற்றேர் மகனுக்கு விருப்பமில்லாமல், பணம் வருகிறது என்று கட்டாயப்படுத்தி திருமணம் செய்திருக்கிருர்கள். அவனே அந்தப் பெண் பிடிக்காமல் எங்கேயோ போய் விட்டான். எட்டு வருடங்கள் ஆகிவிட்டன. பெண்ணின் பெற்றேர்கள் அவளுக்கு ஏதேனும் ஒரு வழி செய்ய வேண்டும். தங்கள் காலத்துக்குப் பிறகு அவளுக்குப் பாது காப்பில்லேயே என்று விழிக்கிருர்கள். மறுமணம் செய்விக்கச் சட்டத்தில் இடமுண்டா? இந்தப் பிரச்னேக்கு என்ன செய்வது?

பதில்:

அந்தப் பெண் விரும்பப்பட்டால் அவளுக்கு மறுமணம் செய்விக்கலாம். ஆனல் அதற்கு முன்பு, முதல் திருமணத்தை ரத்து செய்வது அவசியம். விவாகரத்துக் கோருவதற்கும் பல காரணங்களில் ஒன்று, திருமணமான பிறகு தொடர்ந்து ஏழு வருடங்களுக்குக் கணவனே, மனைவியோ காணுமல் போயிருந்தால் பிரியலாம் என்பதே. எனவே உங்கள் உறவினரின் பெண் தன்னுடைய கணவர் காணுமல் போய் எட்டு வருடங்கள் ஆகிவிட்டது என விவாக ரத்துக் கோரி நீதிமன்றத்தில் வழக்குத் தொடரலாம்.

நீதி மன்றம், அந்தப் பெண்ணுக்குத் தெரிந்து கணவன் கடைசியாக வாழ்ந்த வீட்டில் பெண் தொடுத்துள்ள விவாக ரத்துடன் ஓர் அறிவிப்பை ஒட்டுவார்கள். ஒரு மாதம் அவகாசமும் தருவார்கள். அதன் பிறகும் கணவனிடமிருந்து எந்தத் தகவலும் வரவில்லே என்றுல் விவாக ரத்தை நீதிமன்றம் அளிக்கும்.

"உலகத்திலேயே தமிழகத்தில் தான் வாழைப்பழத்தின் விலே குறைவு. ஈரான் தலேநகரான டெஹ்ரானில் ஒரு பழத்தின் விலே மூன்று ரூபாய். அமெரிக்க ஐக்கிய நாட்டில் $1\frac{1}{2}$ ரூபாய். சீனுவில் இரண்டு ரூபாய்!

— எஸ். தேவாதிராஜன்



அன்னை சுமந்தது அக்கினி

ஜி.வேதா

நாளைக்கு விடிகாலை முகூர்த்தம்.

அட்சதைக் கிண்ணத்தைப் பார்த்தாள் காமாட்சி. கள்ளம் கபடமில்லாத குழந்தை சிரிப்பது போல் கண்விழித்துக் கொண்டிருந்த அந்த மஞ்சள் அரிசி நாளைய முகூர்த்தத்துக்கு தன்னைத் தயார்ப் படுத்திக் கொண்டிருந்தது —இவள் மகள் நிர்மலாவைப் போல.

''பகவானே .... நாளைக்கு விக்னமில்லாமல் குழந்தையின் கல்யாணம் நல்லபடியாய் நடந்து முடியணுமே...''

அட்சதையையும் சூழ்நிலையையும் பார்த்தவுடன் ஏழு வருடங்களுக்கு முன் ஏகதடபுடலாய் நடந்த கண்ணனின் கல்யாணம் நினைவுக்கு வந்தது.

இன்றைக்கு மாதிரி அன்று சோற்றுக்கு லாட்டரியடித்துக் கொண்டிருக்கவில்லை இவர்கள். நிறைவுக்குக் கொஞ்சம் அதிகம்! மாட்டுப் பெண்ணாய் வரப்போகிற பிரபாவுக்குப் புடவையும் நகைகளும் முன்கூட்டியே



அக்கறையாய் வாங்கி வைக்கும் அளவுக்குத் தாராள மனதை மட்டுமல்ல — அனுசரித்துப் போகும் கணவனையும் அவளுக்கு அளித்திருந்தான் ஆண்டவன்.

''இதோ பார்த்தீங்களா ... நம்ப பிரபாவுக்கு வாங்கினேன்'' ஆசையாய்க் கணவனிடம் சொல்வாள்.

'நம்ப' என்னுமளவுக்கு நெருங்கி வந்திருப்பது. அவள் இரண்டே தடவைகள் பார்த்திருக்கும் இனிமேல்தான் அந்த இல்லத்தில் வலதுகாலை வைத்து வரப்போகும் வருங்கால மாட்டுப்பெண்ணை!

''என்ன காமு... அதுக்குள்ள 'நம்ப' பிரபாவாயிட்டாளா! நடக்கட்டும்! கடைசி வரை இந்த நெருக்கம் நீடிச்சிருந்தா சந்தோஷம்தான். ரெண்டு பேரும் குடுமியைப்...''

''ஏன் இப்படி அச்சானியமாய்ப் பேசறீங்க? முன்கை நீண்டால், தன்னாலே முழங்கையும் நீளும். நாம்ப நல்லவளாய் நடந்துண்டால் அவள் ஏன் முறைக்கப் போறாள்?''

வைத்தியநாதன் எத்தனை பெரிய தீர்க்கதரிசி என்று இரண்டாவது வருடமே நிதர்சனமாகி விட்டது! உலகத்தில் நடக்காததையா சொல்லி விட்டார் அவர்!

''அம்மா .... இந்த ஷர்ட் நன்னாயிருக்கா? சொல்லு.... உனக்குப் பிடிச்சிருந்தால்தான் வாங்கப் போகிறேன். என்னடி நிம்மிக்குட்டி நீ என்ன சொல்றே?'' என்றெல்லாம் வார்த்தைக்கு வார்த்தை ஆசையுடன் கேட்டுக் கொண்டிருந்தவன் —

''அம்மா ... பிரபா சரியாய்க் காபி போடலே, அப்படி இப்படின்னு ஏதோ சொன்னியாமே! உன் பெண் மாதிரி இவளும் சின்னவதானே? இனிமேத்தானே அனுபவம் வரணும்...'' என்று எதிர்க்கும் அளவுக்கு மாறி விட்டான்—அல்லது மாற்றப்பட்டான்.

காமாட்சியின் மனத்துக்கு மிக நன்றாய்த் தெரியும், தான் எத்தனை அருமையாய் மருமகளைத் தங்கத் தாம்பாளத்தில் ஏந்துகிறாள் என்று! அவளைப் போய் இப்படிச் சொல்லி விட்டானே! அவனுக்கு அதுகூட வருத்தமில்லை 'உன் பெண்' என்றல்லவா சொல்லி விட்டான்! அவன் மட்டும் இவள் பெற்ற கன்றில்லையா? எங்கிருந்து வந்தது இப்படி ஒரு பிரிவினை?

''காமு... உனக்கு நான் எத்தனை தடவை சொல்லியிருக்கேன். உன்னால் முடிஞ்சால் முடிஞ்சதைச் செய். சர்மா இருக்கவே இருக்கான் சமையலுக்கு... அது இன்னொரு வீட்டுக் குழந்தை. அதை வேலை செய்ய விடாதே'' யோகி மாதிரிச் சொல்லி விட்டுப் போவார் வைத்தியநாதன்.

காமாட்சி மனசுக்குள் உடைந்து சிதறி அழுவாள். அழுகையில் கரைவாள். ஆனால் வாய் திறந்து வாதாட மாட்டாள். ஊமையாய் அவள் அழுவதும், அவள் பக்கம் நப்பே யில்லை என்பதும்



அந்த வீட்டில் இருக்கும் ஒவ்வொரு ஜீவனுக்கும் நன்றாய்த் தெரியும். ஆனால் யாரும் கண்டு கொள்ள மாட்டார்கள்.

அவள் கண்டபடி பேசக் கூடியவளில்லை என்று நன்கு தெரிந்தும் விஷயத்தைப் பெரிது படுத்தினால் விவாதம்தான் மிஞ்சும் என்று வைத்தியநாதன் வாயை மூடிக்கொண்டு போய் விடுவார். அப்பாவே ஏதும் பேசிக் கொள்ளாத போது நமக்கேன் வம்பு என்று நிர்மலா மரியாதையாய் ஒதுங்கிக் கொண்டு விடுவாள்.

கண்ணன் கேட்கவே வேண்டாம். பெண்டாட்டிக்கு ஜால்ரா. பெரிய வக்கீலின் பெண்ணைக் கல்யாணம் செய்து கொண்டு வந்திருந்தான். அவளுக்கு எதிராகப் பேசினால் மரியாதைக் குறைச்சலாய்ப் போய்விடாதோ!

வைத்தியநாதன் உயிரோடு இருந்தபோதே இத்தனை ஆட்டங்கள் போட்டவள் அவர் போன பிறகு எத்தனை துள்ளல்கள் துள்ளியிருப்பாள் என்று கேட்கவா வேண்டும்!

இருபத்தி நான்கு வயசுப் பெண்ணை நெருப்பாக அடைகாத்துக் கொண்டு வருவது மட்டும் அத்தனை சுலபமான விஷயமா என்ன! நிர்மலாவின் திருமண விஷயத்தைப் பற்றிக் கண்ணனும் வாயே திறக்கவில்லை. காமாட்சியாலும் அந்தப் பேச்சை எடுக்கும் அளவுக்குத் தைரியத்தைத் திரட்ட முடியவில்லை.

வீட்டு வேலைகள் செய்வதெல்லாம் கூட அத்தனை பெரிய கஷ்டமாய்த் தெரியவில்லை. மகள் கொட்டும் சோற்றை அவளது வசவுகளுடன் சேர்த்து விழுங்குவதைவிட! வைத்தியநாதன் கண்ணை மூடிய ஒரு மாதத்துக்கெல்லாம் சமையல்கார சர்மாவின் சீட்டு கிழிந்தது. அத்தனை நாள் சமையல்காரராய் மட்டுமில்லாமல் ஒரு ஆத்மார்த்தமான நண்பராய் இருந்த அந்த ஆத்மா அந்த வீட்டை விட்டுப் போனபோது, இழப்பை நினைத்து அழுது புலம்பக் காமாட்சிக்கு சக்தியில்லை. அத்தனை கண்ணீரும் வைத்தியநாதன் போனதுமே செலவழிந்து விட்டது.

அதுமட்டுமில்லை. அப்போது அவள் கவனித்துக் கவலைப்படுவதற்கு இதைவிடப் பெரிய பிரச்னை ஒன்று காத்துக் கிடந்தது. அத்தனை நாள் சர்மா, பத்தும் இருபதுமாக வைத்தியநாதனிடம் கொடுத்துச் சேர்த்து வைத்திருந்த தொகை கிட்டத்தட்ட இரண்டாயிரத்தை எட்டியிருந்தது.

அதை வைத்தியநாதன் எங்கே, எப்படி வைத்திருந்தார் என்று யாருக்கும் தெரியாது. அனேகமாக, பாங்கில் அவர் அக்கௌண்டில் போட்டிருக்கலாம். அதை இப்போது எடுக்க வேண்டுமானால் கண்ணனும் ஒரு கையெழுத்து போட்டாக வேண்டும். மாட்டான். இப்போது பணத்தைத் திருப்பிக் கொடுக்க வேண்டிய கடமை காமாட்சியை அல்லவா சேர்ந்து விட்டது! அவள் பணத்துக்கு எங்கே போவாள்!

பிரதம மந்திரி இந்திரா காந்திக்குத் தினசரி வரும் கடிதங்களின் எண்ணிக்கை சுமார் 6000. மனு கொடுப்பவர்கள், வேலைவாய்ப்புக் கேட்பவர்கள், தாக்குதலுக்கு உள்ளானவர்கள், வாழ்க்கைப் பிரச்னைகளுக்கு வழி கேட்பவர்கள் என்று பல தரப்பட்ட கடிதங்கள் வந்தாலும், பெரும்பாலான கடிதங்களில் உண்மை எது? தவறு எது? என்பதைக் கண்டறிந்து ஒவ்வொரு கடிதத்தின் விஷயங்களையும் பிரதமரின் செயலாளர்கள் குறிப்பு எடுத்து வாரமொரு முறை பிரதமருக்கு அனுப்பி அவரது நேரடிப் பார்வையில் கவனிக்கப்பட்டு 500 கடிதங்கள் செயலாளர்களால் கையெழுத்திடப்பட்டும் சுமார் 50 கடிதங்களுக்குத் தேவையான உதவியும், பதிலும் தினசரி தரப்படுகிறதாம். உதாரணமாக 'இந்தியாவில் பெண்களுக்கு சம உரிமை இல்லை. ஆண்களுக்குக் கேளிக்கைப் பொருளாகவும், அடிக்கப்பட்டுத் துன்புறுத்தப் படுவதாகவும் எங்கள் ஆசிரியர் கூறுகிறார். இது உண்மையா?' என்று கேட்டுவரும் அயல்நாட்டுக் கடிதங்களுக்குத் தேவையான பதிலைத் தம் கைப்படவே இந்திரா காந்தி எழுதுவதோடு தினசரி சுமார் நூறுகடிதங்களுக்குமேல் தம்முடைய கையெழுத்திட்டும் அனுப்புகிறாராம்.

— லட்சுமி குமார்.

(ஆதாரம்: ஆன்லுக்கர் மே 1980 இதழ்)



இத்தனைக்கும் சர்மா எதையும் கேட்கவில்லை. காமாட்சியே அவரை அழைத்துச் சொன்னாள்.

''சர்மா மாமா. என்னை ரொம்பவும் மன்னிக்கணும். இப்போதைக்கு என் கையில் தம்படி கிடையாது! ஆகையினாலே தயவு பண்ணி இதைப் பிடியுங்கோ...''

விரித்த அவளது உள்ளங்கையில் இருந்த பொருளைக் கண்டதும் சர்வாங்கமும் நடுங்கிச் சிலிர்த்து விட்டார் அந்த அப்பாவி. அத்தனை நாள் காமாட்சியின் கழுத்தில் வீற்றிருந்த தங்கத்தாலி!

''ஐயய்யோ ... மாமி... நான் பணத்தைப் பத்தி உங்ககிட்டே ஏதும் கேட்டேனா? ஏன் இப்படி வார்த்தையில் வதைச்சு வெந்த மனசிலே வேலைப் பாய்ச்சறேள்! என்னை உங்க வீட்டு மாமா சமையல்காரராய் நடத்தலை. பெத்த பிள்ளையாட்டம் வளர்த்தார். ஒரு பிள்ளை, பெத்தவாளுக்குச் செய்கிற கடமை எனக்கும் உண்டு. எனக்குப் பணம் ஏதும் வேண்டாம். ஆளை விடுங்கோ....''

''தப்பு சர்மா மாமா! பெத்தவாளுக்குச் செய்யணும்னு பிள்ளைக்கு எந்தக் கடமையும் கிடையாது. இன்னும் கேட்டால் மத்தவாளை விட வயத்துல பொறந்ததுகள் தான் விட்டுக் குடுத்து வேடிக்கை பார்க்குதுங்கள்'' என்று ஒரு கணத்தில் கொட்டி விடத் துடித்தாள் காமாட்சி. எத்தனை நாட்கள் வீட்டோடு பழகியவராய் இருந்தாலும் அவரிடம், பெற்ற பிள்ளையைப் பற்றி விட்டுக் கொடுத்துப் பேச அந்தத் தாய்மனம் தயாராயில்லை.. தன் அம்மா எதிரேயே, பெண்டாட்டியை விட்டுக் கொடுக்கத் தயாராயில்லாத கண்ணனிடம் கற்றுக் கொண்ட ஒரே விஷயம்!


''எடுத்துக்கோங்க.''

''முடியாது மாமி... நான் போயிட்டு வரேன்'' தீர்மானமான குரலில் சொன்னார் சர்மா.

அதற்கு மேலே அங்கே நின்றால் வற்புறுத்தல் தொடரும் எனப் பயந்து இரண்டெட்டு எடுத்து வைத்தவர், நிர்மலாவின் பக்கம் திரும்பினார்.

''அம்மா நிர்மலா... உங்கப்பா உனக்கு ஒரு வக்கீல், டாக்டர், இன்ஜினீயர் என்று உசத்தியாய் மாப்பிள்ளையைப் பார்த்துக் கல்யாணம் பண்ணி வைக்க ஆசைப்பட்டார். அந்தப் புனிதமான ஆத்மாவின் ஆசை கண்டிப்பாய் நிறைவேறும். என் ஆசிர்வாதமும் உனக்கு என்னிக்கும் உண்டு... வரேம்மா. வரேன் கண்ணா. பிரபா வரேன்'' தொண்டை அடைக்கக் கண்ணீருடன் கிளம்பி விருட்டென்று நடந்தார்.

அன்றைய நிகழ்ச்சிக்குப் பிறகு காமாட்சி அவரை இரண்டு வருடங்கள் கழித்துத்தான் பார்த்தாள். அதற்குள் பட வேண்டிய அத்தனையும் பட்டு விட்டாள். தன் மகள் படும் பாட்டையும் பார்த்து விட்டாள்!



யோசனை

சென்னையில் தற்போது ஆட்டோ ரிக்‌ஷாக்களின் பின்புறத்தில் விளம்பரம் செய்கிறார்கள். இது நமக்குப் புதுமையாக இருக்கிறது. இதைக்காட்டிலும் புதுமையாக பம்பாயில், பஸ் டிக்கட்களிலும் பின்புறம் விளம்பரங்களை அச்சடிக்கிறார்கள். நம் பல்லவனிலும் இது மாதிரிச் செய்தால் கொஞ்சம் வருமானம் வருமே! இதனால் பஸ் கட்டணத்தைக் குறைக்காவிடினும், உயர்த்தாமல் இருக்கலாமே!

—அ. வா. தேவன்

சிலே இருக்கும்வரைதான் பீடத்துக்கு மதிப்பு. அந்த மதிப்பெல்லாம் பறந்த பிறகு தனக்கென்று எதையும் விரும்பாத அவளுக்கு அடி மனத்தில் இருந்த அந்த ஒரே ஒரு நியாயமான ஆசையை அழித்துக் கொள்ள மனமில்லை. தான்பட்டுப் போய் நின்றாலும் தன் கீழ் வளரும் செடி 'பச்சென்று' தளிர்த்து வளர வேண்டும் என்று அந்த மரம் ஆசைப்பட்டதில் தப்பேதும் இல்லையே!

இந்த ஒரு விஷயத்துக்காக மகனிடம் அவள் எத்தனையோ வாதாடிப் பார்த்து விட்டாள்.

''வயசேறிண்டே போறதுடா நிர்மலாவுக்கு.''

''காலண்டரைச் சுருட்டி வச்சு ஏறுகிற வயசை நிறுத்தி வைக்கவா சொல்றே?''

''.....''

''கடமைன்னு சாப்பாடு போடறேன். சந்தோஷப்பட்டுக்கோ.''

''கையெறியச் சம்பாதிச்சுக்கொட்டறேன். நெல்லுக்குத் தண்ணி ஊத்த ஊத்த அது வழிஞ்சு புல்லுக்கே போற மாதிரி என் குடும்பத்தைக் கவனிக்க முடியாமே அழறேன். உன் பெண்ணுக்கே அழுதுண்டிருந்தா எப்படி?''

''அடப் பாவி! இன்னிக்கு வேலை செஞ்சு சம்பாதிக்கிறியே... இந்த வேலைக்குக் காரண

மாயிருந்த உன் படிப்பை உனக்கு ஊட்டினது யாருடா?''

''நீயில்லே.... எங்கப்பா.''

''அதே அப்பாதாண்டா நிர்மலாவுக்கும் அப்பா! அந்த அப்பாவின் பெண்டாட்டியான நான் சுமந்த அக்கினிதாண்டா நீ...''

''ஷட் அப்... இந்த ஒப்பாரியைக் கேக்கிறதுக்காக நான் தினமும் ஆபிசிலிருந்து வீட்டுக்கு வரலே.'' என்று கத்திவிட்டு ரூம் கதவை அறைந்து சாத்திக் கொண்டு விடுவான்.

இத்தனைக்கும் பிறகுதான் அப்படி ஒரு முடிவுக்கு வந்தாள் காமாட்சி. நிர்மலாவுக்கு வருகிற தையில் கல்யாணத்தை முடித்து விட வேண்டும். யார் கையையும் நம்பிப் பலனில்லே என்று உணர்ந்தாள். மாதக் கணக்கில் யோசித்த பிறகு அப்படி ஒரு முடிவுக்கு வந்தாள். ஒரு போஸ்ட் கார்டில் நாலு வரி கிறுக்கிப் போட்டு சர்மாவை வரவழைத்தாள்.

வந்தார். இரண்டு வருடங்களுக்கு முன் பச்சென்று பட்டும் வைரமுமாய் மின்னிய எஜமானி இன்னிக்குக் காய்ந்த மிளகாய் வற்றலாய் நின்ற நிலையைப் பார்த்து வாயில் துண்டை வைத்துக் கொண்டு குலுங்கிக்-குலுங்கி அழுதார்.

''சர்மா மாமா... இப்போ உங்க கிட்ட ஒரு பிச்சை கேட்பேன். மறுக்காமல் போடறீங்களா?''

பதில் சொல்ல முடியாமல் அழுதுகொண்டிருந்தார்.

''வந்து....வந்து... உங்க கிட்டே திருப்பித் தரவேண்டிய கடனைத்தான் தீர்றதுக்கு எனக்குத் துப்பில்லே. அதோடு இன்னொரு கடமையையும் உங்க தோளுலே சுமத்தப் போறேன்... தாங்குவேளா?''

''என்ன மாமி சொல்றேள்?''

''என்... என் பெண்ணை உங்க மாட்டுப் பொண்ணா ஏத்துப்பீங்களா?''

''மா...மி... உங்க பொண்ணு பி.எஸ்.ஸி. படிச்சிருக்கா. என் பிள்ளை எட்டாவது 'கோட்' அடிச்சுட்டு ஜல்லிக் கரண்டியும் ஸாரணியுமாய் சத்திரம் சத்திரமாய்க் கல்யாணங்களுக்கு அலைஞ்சிண்டிருக்கான்..''

''அதைப் பத்திக் கவலே யில்லே. அவன் திருடலே. பிச்சை எடுக்கலே. மானமாய்ப் பிழைக்கிறான். கஞ்சியோ, கூழோ ஊத்தி என் பெண்ணைக் காப்பாத்துவான். அதுதான் எனக்கு வேண்டியதெல்லாம். நான் யாசிக்கிறேன். உங்க தயவு எனக்கு வேணும்...''

''வெத்தி மாமா கட்டி வச்ச கோட்டை என்ன! அதை நீங்க தகர்க்கிற லட்சணமென்ன! மன்னிச்சுக்குங்க மாமி...''

''அன்னிக்கு உங்க பணத்துக்குப் பதில் ஒருபொருளைத் தரவந்தேனே நினைவிருக்கா?''

''ஊம்'' குழப்பத்துடன் தலையாட்டினார் சர்மா. ஏன் இதை இப்போது சொல்ல வருகிறாள்?

''அதை உபயோகிக்க வேண்டிய நேரம் இப்போ வந்துடுத்து மாமா! அதுக்கு நீங்க வாய்ப்புத் தரலேன்னா இந்த நரகத்திலே இருக்கிறதை விட மேலாய் என் பெண்ணைக் கிணத்துலே தள்ளிட்டு நானும் விழுவேன்.'' வெறும் பயமுறுத்தலாய்ச் சொல்லப்பட்ட அந்த வார்த்தை அங்குசமாய் சர்மாவைப் பணிய வைத்து விட்டது.

அன்றைக்கு அவள் விரித்த உள்ளங்கையில் மின்னிய தாலி—அத்தனை நாள் காமாட்சியின் கழுத்தை அலங்கரித்து விட்டுப் பிறகு அந்தத் தகுதியை இழந்து அந்த இடத்திலிருந்து இறங்கிய அந்தப் பொன் தகடு இன்றைக்கு அவளின் மகள் வாழ்க்கையைச் செப்பனிட்ட செப்பேடாய் விளங்கியது.

'ஒரு கனி — ஒரு பூ — ஒரு இலை — எதுவுமே கிடைக்கவில்லையானால் துளி நீர் இதில் ஏதாவதொன்றை எவனொருவன் எனக்கு உள்ளன்போடு உவந்தளிக்கிறானோ அவனுக்கு நான் எளிதில் காணப்படுவேன்' என்று கீதையில் பகவான் சொன்னாராம்! அதைப் போல் காமாட்சி கொடுத்த தாலியைத் தவிர வேறு எந்த வகை சீர் செனத்தியும் இல்லாமல் தனக்கு மருமகளாகப் போகும் நிர்மலாவை உளமாற ஏற்றுக்கொள்வார் சர்மா! நிச்சயம் கண்கலங்காமல் காப்பாற்றுவார்.

கண்ணன், பிரபா யாருமே விருப்பப்படாமல், மனம் கசந்து பைசா செலவில்லாமல் செய்து கொடுக்கிறோம் என்ற அற்ப நிம்மதியுடன் தள்ளிவிடப் போகிறார்கள் அவளை!

ஆனாலும் அவளுக்கும் ஆண்டவன் ஒரு வழி காட்டிவிட்டான். இதுபோதும் காமாட்சிக்கு. நிம்மதிப் பெருமூச்சுடன் நிமிர்ந்தாள்.

அட்சதைக் கிண்ணத்தையே பார்த்துக் கொண்டிருக்கிறாள் காமாட்சி.


நாளைக்கு விடிந்தால் முகூர்த்தம்!

யோசனை

எலுமிச்சம் பழம் பிழிந்த பிறகு மூடிகளைத் தூரப் போடவேண்டாம். ரெப்ரிஜரேட்டருக்குள் வைத்தால் உள்ளே உள்ள துர் நாற்றங்கள் அகன்று மணம் கமழும்.

—ப்ரியா பாலு





தாயம் தாய்ப்பாலும்

— மாயா

"ஹௌ ஆர் யூ மாயா?"

"ஹாய் விஜி!" கல்லூரியில் 'ஸீனியர்' ஆனாலும் என் உயிர்த் தோழி! இரண்டு வருடங்களுக்குப் பிறகு பார்த்த சிநேகிதியை லேசில் விட்டுவிட மனமில்லை. தவிரவும் பேச்சுக்கிடையில் அவள் தெரிவித்த ஒரு விஷயம் என்னை மிகவும் கவரவே, கட்டாயப் படுத்தி வீட்டுக்கு அழைத்து வந்தேன்.

"விஜி, நீ இப்போ என்னைக் கொஞ்சம் கேள்விகள் கேட்கணும்."

"இதென்ன வேடிக்கை! என்ன கேள்வி? உன் அழகின் ரகசியம் என்னன்னு?"

"சீ. கிண்டல் வேண்டாம். உன் குழந்தைக்கு ஒன்றரை வயசு என்றுயில்லையா? சரியாக ஒன்றரை வருஷம் முன்பு அதாவது குழந்தை பிறந்த உடனே அவ்வப்போது சத்துணவு விஷயத்தில் உனக்கு எழுந்த சந்தேகங்கள் ...."

"அதை ஏன் கேக்கறே, ஏகப்பட்ட சந்தேகங்கள்." நான் தயாரானேன்.

"முதல்லே குழந்தை பிறந்தவுடன் எதைச் சாப்பிட்டாலும் எங்கியோ கிணத்துல போட்ட மாதிரி வயிறு காலியாகவே இருக்கிறது போலத் தோன்றும். வயிறு நிறையச் சாப்பிட்டாலோ உடம்பு பருத்துப் போய் அழகு கெட்டுடுமோன்னு பயமாகவும் இருக்கும். அப்பச் செய்யவேண்டியது என்ன?"

"குழந்தை பிறக்கு முன் சில வாரங்கள் நம்முள் பெரும்பாலான இடத்தை குழந்தை அடைத்துக் கொள்வதைப் போல உணர்வு இருப்பதால், மற்ற உறுப்புக்கள் முழு அளவில் உணவை ஏற்றுக்கொள்ள இயலாத நிலையில் இருக்கும். பிறந்த பின்பு அந்த 'வெறுமை' சட்டெனத் தெரிய நியாயம் உண்டு. முதன் முதலில் கடைசி சில வாரப் பழக்கம் காரணமாக அதிக உணவு உட்கொள்ள முடியாது. அதனால் இந்தச் சமயத்தில் வயிறு நிரம்பச் சாப்பிட வேண்டும். கர்ப்ப காலத்தை விட இப்போது இன்னும் அதிக அளவு எல்லாவித உணவும்

சேர்த்துக் கொள்ளணும். தன்னைத் தவிர இன்னொரு தனி உயிருக்கும் — அதுவும் மிக வேகமாக வளர்ந்து கொண்டிருக்கும் உயிருக்கும் சேர்த்து உணவூட்ட வேண்டிய நிலையிலிருக்கிறோம் என்கிற பொறுப்புணர்வு ஒவ்வொரு தாய்க்கும் அவசியம். எந்தவிதக் கட்டுப்பாடும் இல்லாத உணவு முறை, எடை கூடுவது, குறைவது பற்றிய சிந்தனை இல்லாமல் இருக்கவேண்டியது அவசியம்''

—''அதிகச் சாப்பாட்டை ஈடுகட்ட வேலை அதிகம் செய்யணுமா?''

''கூடாது. இளம் தாய் எதைப் பற்றியும் கவலையாக இருக்க வேண்டாம். பிடித்ததைச் சாப்பிட்டு, வேண்டிய அளவு ரெஸ்ட் எடுக்கலாம்.''

—''அதெப்படி கண்டபடி சாப்பிட்டு, வேலையும் குறைந்தால்...?''

''பரவாயில்லை. அதிகப்படி வேலைகளைப் பூராவாகத் தவிர்க்கணும். கட்டாயம் செய்ய வேண்டிய 'மினிமம்' வேலையை மட்டும் செய்தால் போதும். கொஞ்சம் தூசி சேருவதாலோ, பாத்திரம் துணி மணி அழுக்கடைவதாலோ ஒன்றும் மோசமாகி விடாது. லெட் தெம் வெயிட் ஃபார் ஸம் டைம். குழந்தைக்குப் போதுமான அளவு பால் கிடைக்கத் தாய் அதிக அளவு 'ப்ரோட்டீன்' சத்து சேர்த்துக் கொள்ளணும். வேர்க்கடலை, முருங்கைக் கீரை, முட்டை, காய்கறி, வழக்கமான அளவைவிட இரு மடங்கு பால் சாப்பிடணும். குழந்தைக்குத் தாய்ப் பால் தவிர, 'ஸெமி ஸாலிட்' உணவுக்குத் தாவும்போது, தாய் உணவுக் கட்டுப்பாடு, உடற்பயிற்சி, வேலைகளைப் பழையபடி தொடரலாம்.

—''பிள்ளை பிறந்தவுடன் 'பத்தியம்' என்று ஒரு மாதம் வரையில் தனிச் சாப்பாடு நம்மிடையே வழக்கமாகப் படிந்து விட்டதே?''

''இது அவரவர் நம்பிக்கையைப்பொறுத்த தனிப்பட்ட விஷயம். குழந்தை பிறந்தவுடன் தையல் அல்லது ஆப்ரேஷன் கேஸாக இருந்தால் 'Bland diet' — காரம், மசாலா சேராத பால், ஹார்லிக்ஸ், ப்ரட் போன்றவையே பெரும்பாலும் தரப்படுகிறது. இதெல்லாம் சுலப ஜீரணத்துக்குத்தான்.

பொதுவாகவே 'பத்திய'ச் சாப்பாட்டின் அடிப்படையும் இதுதான் என நினைக்கிறேன், மிளகாய், மசாலா சாமான்களை ஒதுக்கி, சத்துப் பொருளான பச்சைக் காய்கறிகள், நெய், பால், பருப்பு வகைகளைச் சேர்ப்பது நல்லதுதானே! நிறைய வெற்றிலை (சுண்ணாம்புடன்) போட்டுக் கொள்வதும் ஜீரண சக்தியோடு 'கால்ஷியச்' சேர்க்கையும் அதிகமாகிறது. ஆனால் 'ஜூஸ்' கூடாது; சில காய்கறிகளை ஒதுக்குவது போன்ற பத்திய முறைகளில் எனக்கு ஒப்புதல் இல்லை.

பாதாமும் ஆப்பிளும்தான் சத்து நிறைந்தவை என்று நிறையப் பேர், 'போஷாக்கு' எல்லாம் நமக்குக் கட்டுப்படியாகுமா என்று கூறிக்கொண்டு குறைந்தபட்ச அக்கறை எடுப்பதைக் கூட விட்டு விடுகிறார்கள். மிகச் சுலபமாகக் கிடைக்கும் பல வகைக் கீரைகள், கொய்யா, நெல்லி, தக்காளி, வேர்க்கடலை, பொட்டுக்கடலை, சோளம், கேழ்வரகு போன்ற சத்து மிகுந்த — நாம் அதிகம் பொருட்படுத்தாத — எளிய உணவுகளை அதிகம் சேர்த்துக் கொள்ள வேண்டும். இதுவும் அதே அளவு போஷாக்குதான்.

இன்னொரு விஷயம். இரவு உணவான பாலைச் சுரந்து ஊட்டும் தாய், நிறைய சுத்தமான தண்ணீர் குடிப்பது அவசியம். 'பத்தியம்' என்று நிறையத் தண்ணீர் குடிக்கக் கூடாது என்பார்கள். அது மிகத் தவறு.

கர்ப்பமுண்டாவது, பிள்ளை பிறப்பு, பால் ஊட்டுவது — எல்லாமே ஒரு பெண்ணின் வாழ்க்கையில் முக்கியமான மைல் கல்கள் எனலாம். ஏன், ஒரு 'ஹேர்பின் பெண்ட்' மாதிரி ஒரு கஷ்டமான திருப்பமும் கூட. அது உடலளவில் கடினமான ஒரு சுமையாக ஆகாமல் ஈஸியாக இருப்பதற்கு இந்தச் சத்து மிகுந்த ஊட்டம் அவளுக்கு உதவுகிறது என்பேன். அநாவசிய எந்தக் கட்டுப்பாடும் உணவில் அவளுக்கு இருக்கக் கூடாது என்பதுதான் என் கருத்து.

—''அப்பாடா! கண்ணில் எண்ணெய் விட்டுக் கொண்டு, 'பத்தியம், பத்தியம்' என்று நாம் அலட்டிக் கொள்வது தேவை இல்லை என்கிறாய்! சரி, ஒரு பாலூட்டும் தாய்க்கு வேண்டிய ஒரு நாள் 'மாதிரி' உணவுத்தேவை என்ன என்று கொஞ்சம் சொல்லேன்.''

''ஒரு நாளைக்குத் தேவையான அளவுகளைக் கொடுக்கிறேன். இது சுமார் 2800 கலோரி சத்தும் 70 கிராம் புரத சத்தும் நிறைந்த உணவாகும்.

கணவன்: ''மணி எட்டாகப் போகுது இன்னும் பேப்பர் வரவில்லையே....?''
மனைவி: (சமையல் அறையிலிருந்து) ''பேப்பர் ஆறுமணிக்கே வந்துவிட்டது...! கொஞ்சம் இருங்க.... மாவு சலிச்சுட்டுத் தரேன்....!''
-எம். சாவித்திரி



நெல்லிக்கனி



நெல்லிக்காயை நாம் ஒரு ஆப்பிளுக்கு ஒப்பிடுகிறோம். மூர்த்தி சிறிதாயினும், அது பல வகைகளில் கீர்த்தி செய்கிறது. வைட்டமின் 'சி' நெல்லியில் அதிகம் காணப்படுவது அதன் ஒரு சிறப்பம்சமாகும். இக்கனி நன்றாக உலர்ந்தாலும் இவ்வைட்டமின் இதைவிட்டு நீங்குவதில்லை.

-அ. வா. தேவன்

	சைவம் (கி)	அசைவம் (கி)
தானிய வகைகள்	450	450
பருப்பு வகைகள்	80	65
ஏதாவது ஒரு கீரை	150	150
காய்கறிகள்	75	75
கிழங்கு வகைகள்	75	75
எல்லாவிதமான பழ வகைகள்	30	30
பால்	2 கிளாசுக்குக் குறையாமல்	ஒரு கிளாஸாவது
எண்ணெய், நெய்	4, 5 டேபிள் ஸ்பூன்	
முட்டை		1
இறைச்சி, மீன்		30கிராம்

மற்றும் சர்க்கரை சேர்த்த இனிப்பு வகைகளும், வேர்க்கடலை, பிஸ்கட் முதலியவைகளையும் நீரிழிவு, ரத்த அழுத்தம் முதலிய குறைகள் இல்லாதவர்கள் தாராளமாகச் சாப்பிடலாம்.

—''தாய்ப் பால் கொடுக்கத்தான் வேண்டுமா?''

''கட்டாயம். புதிதாக ஜனிக்கும் மனித உயிருக்கு இயற்கை அளித்திருக்கும் வரப்பிரசாதம் தாய்ப் பால். வேறெதுவும் இதற்கு ஈடாக முடியாது. நம் குழந்தைக்கு வேண்டிய ஊட்ட சத்துக்கள் சரியான விகிதத்தில் கலந்துள்ளன. இயற்கை உணவு.

இதன் உயர்வு பற்றி எத்தனை சொன்னாலும் போதாது. நினைத்தபோது கிடைக்கும் தன்மை, பாதுகாப்பு, சரியான உஷ்ண நிலை, பரிசுத்தம், குழந்தையின் இயற்கையான உறிஞ்சும் உணர்வுக்கு ஏற்படும் திருப்தி — இதற்கெல்லாம் ஈடாக எந்த மாற்று உணவும் கிடையாது.

—''அப்போ பால் போதுமான அளவு சுரக்காதவர்கள், வேறு சில காரணங்களுக்காக டின் உணவு கொடுப்பவர்கள் என்ன செய்வது?''

''டின் ஃபுட் நல்லதுதான். ஆனால் அதைத் தயாரிக்க நாம் எடுத்துக் கொள்ளும் கவனம் போதாது என்பதுதான் குறை. பாட்டில், ரப்பரை ஒவ்வொரு முறையும் கொதிக்க வேண்டும். ('ஸ்டிரலைஸ்') கொதித்து அடங்கிய சுத்தமான நீரில் பவுடரைக் கரைக்க வேண்டும். பாத்திரங்கள் சுத்தமாக இருக்க வேண்டும். இதெல்லாம் காட்டும் கவனக் குறைவு டயாரியா, மஞ்சள் காமாலை, அஜீரணம் போன்ற கோளாறுகளை இளம் சிசுவுக்கு ஏற்படுத்திவிடும். விளம்பரக் கவர்ச்சி, தவறாகக் கணிக்கப்பட்ட அழகுணர்வு இவற்றால் வெகுவாகப் பலர் 'டின் ஃபுட்'டுக்கு மாறிவிட்டது வருந்தத் தக்கது. ஏன் சிக்கனம் என்று பார்த்தால் கூட தாய்ப் பாலுக்குத் தானே முதலிடம்? தாயும் குழந்தையும் அனுபவிக்கும் தொடு உணர்வும், அருகாமையும் மனோதத்துவ ரீதியில் கூட மிக அற்புதமானது. தாய்ப் பாலுக்கு மாற்றாக பசும் பால் தருவதால் சில சமயம் அலர்ஜியால் விளையும் உபத்திரவங்கள், பேதி, மலச் சிக்கல் குழந்தையிடம் தோன்றும்.''

—''தாயிடம் கிடைக்கும் பால் போதுமா என எப்படித் தெரியும்?''

''கர்ப்ப காலத்தில் புஷ்டியான ஆகாரம் எடுத்துக்கொண்ட தாய், குழந்தைக்கு வேண்டிய அளவு பாலைத் தர முடியும். குழந்தை திருப்தியாகவும், சந்தோஷமாகவும், வேண்டிய அளவு எடை அதிகரிப்புடனும் வளர்வது ஒன்றே தாய்ப் பால் போதுமான அளவில் சுரப்பதற்கு சாட்சி. ஒரு நாளைக்கு சுமார் 800 மில்லி லிட்டர் பாலை ஒரு குழந்தை தன் தாயிடமிருந்து பெறுகிறது.''

—''வேலைக்குப் போகும் பெண்கள் பெருகிவிட்ட நாளில் இது சாத்தியமா?''

''ஓரளவு உண்டு. புட்டிப் பாலுடன் காலையும் மாலையும் தாய்ப் பாலைத் தொடரலாம். கடின வேலைகளை நிறுத்தி, தன்னைத் தொற்று நோய்களிடமிருந்தும், சுற்றுப்புற அசுத்தங்களிலிருந்தும் காத்துக் கொள்வதும் அவசியம். அதே போல் பால் கரைக்கும், புகட்டும் சாதனங்களின் சுத்தம் மிக மிக அவசியம்.

—''ஒரு தாய் தன் குழந்தைக்குப் பால் தரக் கூடாத சந்தர்ப்பங்கள் உண்டா?''

''டி. பி., டைபாய்ட், மஞ்சள் காமாலை போன்று தொற்று நோய்களால் பீடிக்கப்பட்ட தாய், பாலூட்டக் கூடாது. மற்ற சாதாரண ஜுரம் போன்றவற்றுக்குக் கட்டுப்பாடில்லை. கர்ப்பமுற்றுவிட்ட தாயும், பால் தருவதை உடனடியாக நிறுத்திவிட வேண்டும். எல்லா வேளையும், முழு உணவாக, பாலூட்டும் தாய்க்கு, இயற்கை அவள் சுரப்பியில் செய்யும் ரசாயன மாற்றம் சிறந்த கருத்தடைச் சாதனமாக உதவுகிறது. தெரியுமா?''

—''அப்படியா?... குழந்தைக்கு விளக்கெண்ணெய் தருவது பற்றி...?''

''அவசியமே இல்லை. மலம் சுலபமாக

வெளியாகாதது போலத் தோன்றினால், கொதித்து ஆறி. வெது வெதுப்பான தண்ணீரைக் கொடுத்தால் போதும்.''


—''ஒரு தாயின் பால் இன்னொரு குழந்தைக்கு உபயோகப்படுமா?''

''தாராளமாக. வெளி நாடுகளில் 'தாய்ப் பால் சேமிப்பு நிலையங்களே இருக்கின்றன. எடை குறைந்த குழந்தைகள், குறிப்பிட்ட நாளைக்கு முன்பே பிறந்துவிட்ட குழந்தைகளுக்கெல்லாம் தாய்ப் பாலைப் புகட்டுவதன் மூலம் நல்ல வளர்ச்சியை அக்குழந்தைகளிடம் காண்பதோடு, இத்தகைய குழந்தைகளைத் தாக்கும் டயாரியா (பேதி) விலிருந்தும் காப்பாற்ற முடிந்திருக்கிறது.

—''அடேயப்பா, தாய்ப் பால் விஷயத்தில் இவ்வளவு இருக்கா... இந்தத் தடவை நானும் கவனமா இருப்பேன்.''

''ஏய்... அப்படியா சங்கதி? கங்கிராட்ஸ் விஜி.''

அந்த ஆர்வமிக்க ஆரோக்கியமான இளம் தாய்க்கு முகமலர்ச்சியோடு விடை கொடுத்து அனுப்பினேன்.



கீழேயுள்ள கடிதம் யாரோ எழுதினது தானே என்று ஒதுக்கி விடாதீர்கள். இந்தக் கடிதத்தில் உங்கள் பொது அறிவை சோதிக்கும் 5 தவறுகள் மறைந்துள்ளன. நன்கு ஊன்றி கவனித்து அந்தப் பெரிய ஐந்து தவறுகள் என்னென்ன என்று கண்டு பிடியுங்கள், பார்க்கலாம்!

கடிதத்தில் புதிர்!

மதுரை
2-3-81

அன்புள்ள அக்காவுக்கு

நலம். நலமறிய ஆவல். இரண்டு நாளாக உனக்குக் கடிதம் எழுதணும்னு உட்காருகிறேன். ஒய்வே இல்லே. இப்பகூட உட்கார்ந்தவுடனே பால்காரி பணம் வாங்கிப்போக வந்தாள். பால் ஏக விலையாகிவிட்டது. போன மாசம் முப்பது நாளைக்கு ரூ 210 ஆகிவிட்டது. இப்பத்தான் எண்ணி கொடுத்துட்டுவரேன். இங்கே என் கணவர் குழந்தைகள் யாவரும் நலம்.

ஒரு சந்தோஷ சமாசாரம். போனமாசம் நாங்க டூர் போனபோது ராஜஸ்தான் லாட்டரி டிக்கட் இரண்டு வாங்கினேன். அதிலே ஒன்றிற்குப் பரிசு கிடைத்திருக்கிறது. எவ்வளவு தெரியுமா? கடைசியில் எழுதறேன்.

இன்னும் ஒரு வாரத்திலே சித்திரா பௌர்ணமி வரது. இந்தப் பௌர்ணமிக்கு எங்கள் ஊர் காவேரி ஆற்றிலே நிலாச்சாப்பாட்டுக்கு ஏற்பாடு செய்திட்டிருக்கேன். ஆத்தங்கரை எங்கள் வீட்டுக்கு ரொம்பக் கிட்டத்திலே இருக்கிறது. அதோட என் பெண் பாரதிக்கு அடுத்த மாசம் பிறந்த நாள் வருகிறது. பாரதியார் பிறந்த தினத்தன்னிக்கு அவள் பிறந்தான்னு என் கணவருக்கு அவள் மேல் ரொம்பவும் பிரியம்னு உனக்குத் தெரியுமே! பட்டுப்பாவாடை வாங்கிடுன்னு பணம்கூட தந்து விட்டார். போய் வாங்கணும். நல்ல மஜந்தாகலரிலே புட்டாபோட்டு வேண்டும் என்று அவளும் சொல்லிவிட்டாள்.

பிரைஸ் சமாசாரம். 24-2-81 அன்னிக்கு லக்னோவிலே நடந்ததாம் குலுக்கல். பரிசு பத்து ரூபாய். சிரிக்காதே! வேறு விஷயங்கள் இல்லே. மற்றவை பின்னர்.

அன்புத் தங்கை,
விஜயா


விடை : 48ம் பக்கம்



மேஷம்

உங்களுடைய பிரச்னைகளெல்லாம் உங்களின் கௌரவத்தைப் பற்றியதாகவே இருக்கிறது. ஏதேனும் ஒரு பாதிப்பு ஏற்படும் போதெல்லாம் சலனப்படுவதால் சிக்கல்கள் எழுகின்றன. இம்மாதத்தின் இறுதியில் உங்களின் செல்வாக்கு உயரும். உங்களைப் புரிந்து வைத்துள்ள நண்பர்களின் உதவியால் உங்களுடைய பிரச்னைகள் தீர்ந்து பிரகாசமான எதிர்காலம் உண்டாகும். கலைஞர்களுக்குச் சிறப்பான வாய்ப்புக் கிடைக்கும்.

பெண்களுக்கு இல்லத்தில் மதிப்பு அதிகரிக்கும். குழந்தைகள் உங்களின் மனமறிந்து நடந்து கொள்வார்கள்.



ரிஷபம்

அரசாங்க வேலையில் இருப்பவர்களுக்கும், உலோக வியாபாரிகளுக்கும் இம்மாதம் சில சிரமங்களைத் தருவதாக அமையும். பண வரவும், மேலதிகாரிகளின் திருப்தியும் இருந்தாலும் சிக்கல்கள் எழக் கூடும். ஆனால் சூரியனைக் கண்ட பனி போல அவையெல்லாம் விரைவில் விலகிவிடும். மெதுவாக நிதானமாக இருந்தாலும் உறுதியான முன்னேற்றம் வாழ்க்கையில் படிப்படியாக ஏற்படும். உங்களுடைய உறுதியும், தைரியமும் நிச்சயம் வெற்றியை உண்டாக்கும்.

இல்லத்தில் சில குழப்பங்கள் ஏற்பட்டாலும், சஞ்சலமில்லாத உங்களுடைய உறுதியால் குடும்ப அமைதி காப்பாற்றப்படும்.



மிதுனம்

இரண்டு மாதங்களுக்குப் பிறகு வரப்போகும் சுப நிகழ்ச்சிகளின் காரணமாக இப்போதிருந்தே முன்னேற்பாடுகள் செய்ய வேண்டி வரும். குடும்பத்தில் அதன் மூலம் நல்லதொரு திருப்பம் உண்டாகும். சிறந்த குறிக்கோள்கள் கொண்ட வாழ்க்கையாக உங்களுடைய வாழ்க்கை இருக்குமானால் அவை விரைவிலேயே நிறைவேறும் சந்தர்ப்பம் ஏற்படும். உங்களுடன் பணிபுரிபவர்களுடன் சரிசெய்து கொண்டு போகும் மனப்பக்குவம் உண்டாகுமானால் வெற்றி நிச்சயம்.


பெண்களுக்கு இந்த மாதம் மிகவும் சுறுசுறுப்பாக ஓடியாடி வேலை செய்யும் மாதமாக இருக்கும். குழந்தைகளின் உடல்நலம் சிறப்பாக இருக்கும்.



கடகம்

நீங்கள் திட்டம் போட்டபடி சில வேலைகள் துரிதமாக நடக்காமல் தாமதங்கள் ஏற்படலாம். அதற்காக மனம் அதைரியப்பட வேண்டியதில்லை. இன்னும் ஒன்றரை மாதங்களுக்குப் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டியதாகவே இருக்கிறது. தெய்வ பக்தியும், மனிதர்கள் மேல் நீங்கள் வைத்திருக்கும் அபார நம்பிக்கையும் உங்களை நிச்சயம் கைவிடாது. உங்கள் வாழ்க்கையில் நினைத்ததை நினைத்தபடி முடிக்கும் ஆற்றலுடையவர்கள் நீங்கள். எனவே பயனை எதிர்பாராமல் காரியத்தைச் செய்து கொண்டிருங்கள்.

இல்லறத்தையே முன்னின்று நடத்தும் உங்களின் பணிகளுக்குச் சில பழிகள், இடையூறுகள் வந்தாலும் விரைவில் உங்களின் அந்தஸ்து உயரும்.



சிம்மம்

தைரியமான மனப்போக்கும் சவால் விட்டுச் செயலாற்றும் துணிவும் உள்ள நீங்கள் பாதையறிந்து நடந்து செல்வது அவசியம். உங்கள் படபடப்பான சுபாவத்தினால் வாய்ப்புக்கள் நழுவ இடமுண்டு.

எனவே நிதானமான அறிவுடன் எதையும் சிந்தித்துச் செயலாற்றினால் உங்கள் குறிக்கோள் நிறைவேறுவது நிச்சயம். ஒவ்வொன்றாக நீங்கள் நினைத்தவை நடந்து கொண்டு வரும். சென்ற ஆண்டை விட இவ்வாண்டு நல்ல முன்னேற்றங்களைத் தரும்.

பெண்களுக்குச் சுபகாரியங்கள் நடப்பதற்கான சூசகங்கள் தெரியும்.



கன்னி

அதிகமான கற்பனைகளும், ஆகாசக் கோட்டைகளும் கட்டச் சில சமயங்களில் ஆசைப்படுவதைத் தவிர்த்தால், தற்கால நிலைமையை உணர்ந்து நடந்து கொண்டால் உங்களுடைய பிரச்னைகள் தீருவதற்கு வழியுண்டு. நடைமுறை வாழ்க்கையைப் புரிந்து கொண்டு முன்னேறுவீர்களானால், நீங்கள் போட்ட திட்டங்களின் முன்னேற்றத்தை இம்மாதத்தின் நடுவிலேயே காணத் தொடங்குவீர்கள். பொருளாதார நிலைமையும் இம்மாதம் திருப்தியாகவே இருக்கும்.

பெண்களுக்குக் குடும்பப் பிரச்னைகளை உணரும் திறனும், அதற்குத் தகுந்தாற்போலச் சரிசெய்து கொண்டு செல்லும் மனப் பக்குவமும் உண்டானால், குழந்தைகளைப் பற்றிய திட்டங்களை முன்னேற்றலாம்.



துலாம்

உங்கள் உடல் நிலையைப் பாதுகாத்துக் கொள்வதுடன், இனிய துணையிடமிருந்து பிரச்னைகள் வராமல் பார்த்துக் கொள்ள வேண்டும். நீங்கள் நினைத்த திட்டத்திற்குச் சம்மதம் இம்மாதத்தின் இறுதியில் கிடைக்க வாய்ப்புக்கள் அதிகம். இரண்டாவது வாரத்தை ஓய்வெடுக்கப் பயன்படுத்திக் கொள்வதுடன், தீர்மானமான எதிர்காலத் திட்டங்களுக்கு வழி வகுக்கச் சிறந்ததாக வைத்துக் கொள்ளலாம். குடும்பத்தாருடன் களிப்புடன் வெளியே செல்ல உகந்தவாரம் மூன்றாவது வாரம்.

பெண்களுக்கு எதிர்பாராத மன மகிழ்ச்சி உண்டாகும். குழந்தைகளின் உடல் சிறிதே சுகவீனம் அடைந்தாலும் விரைவில் தேறி விடும்.



விருச்சிகம்

தனியாக வியாபாரத் துறையில் ஈடுபட்டவர்கள் வரப்போகும் சில வாரங்களில் பலவகையான அனுபவத்தைப் பெறுவார்கள். ஆனால் புதிய நட்புக்களில், புதிய கருத்துக்களில் வீழ்ந்து விடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். உடல் நலம் பாதிக்கப்படலாம். பொருளாதார நிலைமை நல்ல முன்னேற்றம் உண்டாகும். அதைக் காப்பாற்றிக் கொள்வதுடன் வீண் விரயங்களைத் தவிர்ப்பது நல்லது.

பெண்களுக்குச் செலவுகள் அதிகமாகும் மாதம் இது. கணவனால் எதிர்பாராத வரவும் உண்டு.



தனுசு

நீங்கள் திட்டப்படி சில காரியங்களை முடித்துக் கொள்வதற்கான சிறந்த மாதம் இது. இதுவரை வந்த பொறுப்புக்களையும் கடமைகளையும் முடித்துப் புதிய முடிவுகளை ஏற்படுத்தும் தருணம் ஏற்படக்கூடும். குடும்பச் சூழ்நிலைகளில் விரைவில் பெரும் மாற்றங்கள் உண்டாகும் காலம் இது. பொதுஜனங்களிடம் நல்ல செல்வாக்கும், மதிப்பும் ஏற்படும். வாழ்க்கையின் எல்லா நிலைகளிலும் சிறப்பான திருப்பங்கள் உண்டாகும் தருணமாக அமையும். பொருளாதார நிலைமையில் சற்றே வீழ்ச்சி ஏற்படக்கூடும். இளைய தலைமுறையினரிடம் சில மனோ சஞ்சலங்களும், சறுக்கல்களும் ஏற்படலாம்.


பெண்களுக்கு மன அமைதி, வாக்குச் செல்வாக்கு ஆகியவை கிடைக்கும். தெய்வ பக்தர்களுக்குப் புனித யாத்திரைகள் மேற் கொள்ளும் சந்தர்ப்பங்கள் கிடைக்கும்.



கும்பம்

வெளியார்களின் நட்பும், உறவினர்களின் ஆதரவும் இம்மாதம் அமோகமாக உண்டு. இந்த மாதத்தின் இறுதியில் கிடைக்கும் வெற்றிகளின் காரணமாகப் புதிய திட்டங்களும், புதிய குறிக்கோள்களும் உண்டாக வாய்ப்புண்டு. வழக்கறிஞர்கள், எழுத்தாளர்கள், கலைஞர்கள் வாழ்க்கையில் முக்கியமான முன்னேற்றங்கள் ஏற்பட்டு பொதுமக்களிடையே புகழ் பரவுவதற்கான காலமாக அமையும். முதல் வாரத்தை லாபகரமான முடிவுகளை ஏற்படுத்திக்கொள்ளும் நாட்களாக ஆக்கிக் கொள்ளலாம்.

உறவினர்களிடையே மதிப்பும், கலந்து கொண்டு பழகும் சுபாவமும் உண்டாகும்.



மீனம்

நடக்கவிருக்கும் பொது நிகழ்ச்சியின் மூலமாக உங்களுக்குக் கிடைக்கவிருக்கும் வாய்ப்பின் மூலமாக நல்ல வருமானமும், தொழில் முன்னேற்றமும் உண்டாகும். புதிய நட்புக்களினால் ஏற்படும் சறுக்கல்களுக்கு மனம் தளர வேண்டியதில்லை. பழைய உறவின் மூலமாகக் கிடைக்கும் அறிவுரையினால் நல்ல வருங்காலம் ஏற்படும். பொழுது போக்கு உற்சாகங்களைக் கொண்டாட இம்மாதக் கடைசி வாரம் சிறந்ததாக அமையும். உங்களுடைய குடும்பம் உங்களுடைய நடவடிக்கைகளுக்கு முழு ஒத்துழைப்புத் தரும் மாதமாக அமையும்.

பெண்களின் கவனம் பொழுது போக்கு அம்சங்களில் செல்லும். குழந்தைகளால் சந்தோஷமும் உண்டாகும்.



மகரம்

இப்போது இருக்கும் பொருளாதார நிலைமையைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டியவர்களாய் இருக்கிறீர்கள். வரும் இரண்டரை மாதங்களுக்குச் செய்து கொண்டிருக்கும் பணியை மாற்றிக் கொள்ளாமல் இருப்பது நல்லது. இதனால் ஏற்படும் மாற்றங்களே எதிர்காலப் பொருளாதார நிலைமையைத் தீர்மானிப்பதாக அமையும். வீண் விரயங்களையும், செலவுகளையும் தவிர்ப்பது நல்லது.

பெண்களுக்கு மனோ சஞ்சலமும் மன அமைதியும் இழக்கக் கூடிய சந்தர்ப்பங்கள் ஏற்பட்டாலும் விரைவில் மாற்றங்கள் ஏற்படும் வாய்ப்புக்கள் உண்டு.

இவர்கள்



ராணி

பிரபு...பிரபு...பிரபு...

இப்படி விவித பாரதியின் வர்த்தக ஒலிபரப்பில் சொல்லும் பெண் குரல் நமக்கு மிகவும் பரிச்சயமானது. அவர் ராணி! இப்படி விளம்பரங்களுக்குக் குரல் கொடுப்பதுடன் படங்களுக்கு 'டப்பிங்'கும் கொடுக்கிறார். 'ரசிகர்களிடமிருந்து எனக்கு வரும் கடிதங்கள்தான் என்னை உற்சாகப்படுத்துகிறது' என்கிறார் இவர்.



நேரு மாதர் சங்கம்

இருபது ஆண்டுகளாகக் குரோம்பேட்டையில் நடந்து வருவது நேருநகர் மாதர் சங்கமாகும். அகில இந்திய மாதர் சங்கத்தோடு தன்னை இணைத்துக்கொண்டு பொதுப் பணிகள் பல ஆற்றி வருகிறது.

முதலில் தெய்வ வணக்கம்தான். மாதம் ஒரு முறை லக்ஷ்மி பூஜை செய்கிறார்கள்.

ஏழைகளுக்கு அன்னதானம், நன்றாகப் படிக்கும் ஏழைக் குழந்தை ஒன்றுக்குப் புத்தகங்கள் வாங்கிக் கொடுத்தல், பழைய துணிமணிகளை வசதியற்றவர்களுக்குத் தருதல் ஆகியவற்றைத் தவறாமல் செய்து வருகிறார்கள்.

தவிரவும், ஒவ்வொரு புதன் கிழமையும் திருமதி கலோசனா மகாதேவன் இலவசமாகப் பக்திப் பாடல்களைச் சொல்லித் தருகிறார்.

அருகில் உள்ள சேரிகளில் மெடிகல் கேம்ப்களையும் நடத்துகிறார்கள். தங்கள் செலவிலேயே பெரிய டாக்டர்களை வரவழைத்து அவர்களுக்கு மருத்துவப் பரிசோதனை செய்து, தேவையான மருத்துவ உதவிகளைத் தருகிறார்கள்.

பெரும் எதிர்காலத் திட்டங்களை வகுத்துக் கொண்டிருப்பதனால், பல்வேறு கலை நிகழ்ச்சிகளை நடத்தி அதன் மூலம் கிடைத்த வருவாயில் இரண்டு கிரவுண்டு நிலம் வாங்கியிருக்கிறார்கள். அதிலே மூன்று வகையான பெரும் பணிகளை மேற்கொள்வதில் தீவிரமாக இருக்கிறார்கள். வெளியூரிலிருந்து இங்கு வேலைக்கு வரும் பெண்கள் பாதுகாப்பாகத் தங்கி வசிப்பதற்கான விடுதி ஒன்றும், வேலைக்குச் செல்லும் பெண்களின் குழந்தைகளைப் பார்த்துக்கொள்ள குழந்தைகள் காப்பகம் ஒன்றும், முதியோர் கல்விக் கூடம் ஒன்றும் ஏற்படுத்தப்போகிறார்களாம். இம்மாதர் சங்கம் ஒற்றுமையின் சிறப்புக்கு எடுத்துக்காட்டாக இருந்துகொண்டு பல்வேறு சமுதாயப் பணிகளைச் சங்கத் தலைவி திருமதி சாரதா வெங்கடராமன் தலைமையில் சிறப்பாகச் செய்து கொண்டு வருகிறது. தொடர்க இவர்களது தொண்டு!

ஊருக்குள் ஒரு உபயோகமான சங்கம்!

உங்கள் ஊரிலும் பயனுள்ள சாதனைகளைச் செய்து வரும் மாதர் சங்கம் இருக்கிறதா? மங்கையர் மலருக்கு எழுதுங்களேன். புகைப்படத்தையும் இணைத்து அனுப்புங்கள்.

கடிதப் புதிர் விடைகள்

1 கடிதம் எழுதப்பட்ட மாதம் மார்ச் என்றால் அதற்கு முன்மாதம் பிப்ரவரி அல்லவா? போனமாசம் முப்பது நாளைக்கு பால் கணக்கு 210 என்று எழுதி உள்ளாள்.

2 அவள் வாங்கியது ராஜஸ்தான் லாட்டரி டிக்கட். குலுக்கல் லக்னோவில் என்று கடைசியில் எழுதியுள்ளாள். ஜனதா தான் லக்னோவில் குலுக்குவார்கள்.

3 கடிதம் எழுதிய மாசம் மார்ச். அந்த மாதம் சித்திரா பௌர்ணமி வராது.

4 கடிதம் மதுரையில் எழுதப்பட்டது. அந்த ஊரில் காவேரி ஆறு கிடையாது. வைகை தான் ஓடுகிறது.


5 பாரதியார் பிறந்த நாள் டிசம்பரில் தானே வரும்? அடுத்த மாதம் மகள் பிறந்த நாள் என்று எழுதியிருக்கிறாளே!

—ரமணி ரங்கநாதன்.

"நாங்கள்ளாம் செலவு செஞ்சு தியாகம் பண்ணிப் படிக்க வச்சு அம்மா, அப்பாவுக்காகத் தயங்குகிறோம்.
கடமைக்காக நினைப்பை மாத்திக்கிறோம்!"

கைதிகள்

வி.மஞ்சுளா ரமேஷ்



நிலவு காய்ந்து கொண்டிருந்தது.

இன்னும் அவன் வரவில்லை. நிர்மலாவுக்குத் தூக்கமும் விழிப்புமாக அரை மயக்க நிலை. எது எப்படி இருந்த போதிலும் நேரத்தை சரியாகப் பின்பற்றுவதில் மிகவும் உறுதியாக இருப்பவன். மூந்தாநாள் ஊட்டிக்குக் கிளம்பும்போது கூடச் சொல்லிவிட்டுத்தான் போனான்.

''நாளன்னிக்குச் சாயந்திரம் எப்படியும் வந்து சேர்ந்துடுவேன்'' என்று சொன்னவன் மோட்டு வளையைப் பார்த்துக் கொண்டு ஒரு நிமிஷம் நின்றான்.

கடைசியாக அவனுடைய துணிப் பெட்டியின் மேலாக வைத்து அழுத்திப் பூட்டிவிட்டு நிமிர்ந்து நிர்மலா கேட்டாள்:

''என்னவோ சொல்லணும் போலத் தோணுது...''

''ஆமா நிம்மி, என்னவோ எப்பவும் மாதிரி ஒரு பாரமுமில்லாம போற மாதிரி இந்தத் தடவை தோணலை. என்னவோ மனசை நெருடறது...''

''ஏனும்...''

''இல்லை, ஊர்ல எங்க பார்த்தாலும் கொலை, திருட்டுன்னு மெட்ராஸ் கூட ஏதோ அமெரிக்கா மாதிரி ஆயிடுச்சு. பேப்பரைப் பிரிச்சா நடு ரோட்டில் கொலை, தனியாக இருந்த பெண்ணின் நகைக்காகக் கொலை. இப்படித்தான் நியூஸ்...''

''விடுங்க. அப்படியெல்லாம் ஒண்ணும் ஆகாது. அத இத போட்டு மனச குழப்பிக் காதீங்க. அதான் ரெண்டு நாள்ல வந்துடறீங்க இல்ல....''

வரவில்லை. இரவு ஒன்பது மணிவரைபார்த்து விட்டு சாதத்தில் தண்ணீர் ஊற்றியாயிற்று. பக்கத்து வீட்டுச் சுவர்க் கடிகாரம் மணியடித்தது. எண்ணினாள்.

பன்னெண்டு!

இனிமேற்பட்டு வருவதற்கு வாய்ப்பிருக்கோ? தெரியாது. இந்த மாதிரியான விஷயங்களில் புள்ளிவிவரக் கணக்



கில், பொது அறிவில் என்றைக்குமே நாட்டம் இருந்ததில்லை. எங்கேயோ பறப்பது போல, மண்ணில் ஒட்டாத தேவதை போல வாழ்ந்தாயிற்று.

கல்யாணம் ஆனப்புறம்தான் எத்தனை எத்தனை சிறு சிறு விஷயங்கள். காலையில் சுகமான தூக்கம், நிதானமான குளியல், (ஏண்டி உன் உடம்புல சுறுசுறுப்பே இருக்காதா' என்ற ''அம்மாவின் திட்டலை ரசித்துக் கொண்டே. இது மந்தத்தனம் இல்லேம்மா. ஒவ்வொண்ணுத்தையும் ரசித்து...''

''என்ன எழவோ, இந்தக் காலத்துப் பெண்களோட பேச்சையே புரிஞ்சுக்க முடியறதில்லே...''

என்று சலித்துக் கொள்ளும் அம்மாவுக்கும் பதில் பேசாமல் அழகான முறுவலோடு, இன்றைக்குக் கன கச்சிதமாக வந்துட்ட பொட்டை ரசித்துக் கொண்டே கிளம்புவது..

நிர்மலா எழுந்து உட்கார்ந்து கொண்டாள். முழுமையாகத் தூக்கம் போய் விட்டது. 'ஏன் இன்னும் வரவில்லை!?' மனசைக் குடையும் கேள்வி. யாரிடம் போய்க் கேட்பது?

முதன் முதலாக அப்போதுதான் பயத்தை உணர்ந்தாள். நேற்று முந்தா நாள் இரவுகூட கணவனின் வாக்கே துணையாக, தைரியமாக உறங்கினாள். இன்றைக்கு யாரோ கைவிட்டு விட்டது போலிருந்தது.

எங்கேயோ சுருட்டிப் பிடித்த இதயத்தை மாற்ற வழி தேடினாள். வீடெல்லாம் சுத்தமாக்கினால் என்ன? இந்த அர்த்த ராத்திரியிலா? யாராவது பார்த்தால் சிரிக்க மாட்டார்கள்! யாராவது பார்த்தால்தானே?

கூட கூட நடந்து வந்த பயத்தைப் பிடித்துத் தள்ளிவிட்டு வெகு நாளாகத் தூசி படிந்த மேல் அலமாரியில் இருந்த எல்லாப் புத்தகங்களையும் எடுத்துக் கீழே போட்டாள். சமையலறைக்குப் போய் கைப்பிடித் துணியைக் கொண்டு வந்து ஒவ்வொரு புத்தகமாகத் துடைத்தாள். எல்லாம் திருமணமானவுடன் பிறந்த வீட்டிலிருந்து கொண்டு வந்து போட்டது. ஒரு புத்தகத்தை ஆசையோடு எடுத்துப் புரட்டினாள். அம்மா, எவ்வளவு நாளாகி விட்டது! அந்தப் புத்தகம் அவளுடையது அல்ல.... இது.... இது....

ஆமாம்; அவனுடையதுதான். சிவராமனுடையது. இதை அவள் திருப்பிக் கொடுக்கவே யில்லையா? எப்படி மறந்து போனாள்... எல்லாவற்றையும்?

'ஹலோ...'' புன்னகை பூக்க நெஞ்சில் குரல் கொடுத்தவனைக் கவனித்தாள். அவனை நினைக்கும் போதெல்லாம் முதலில் வந்து நிற்கும் காட்சி அதுதான்.

'சீ போ' என்று நாயை விரட்டுவது போல விரட்டினாலும் திரும்ப வந்து குழையும் மனோபாவம். அப்படியொரு காதலா?' பணிந்து பணிந்து போகும் அந்தக் குழந்தையின் கெஞ்சலுக்கு ஒப்புக் கொண்டதும்கூடத் தவறோ? இல்லையென்றால் இந்த வேதனைகூட இன்றைக்கு மிஞ்சாதோ?

என்றைக்கோ தான் வாழும் வாழ்க்கையை நொந்து கொள்ள குமுறும் போது மனசில் வந்து நிற்கிறானே? -இப்படித்தான் ஒவ்வொரு பெண்ணுமே நினைப்பாளோ?

'சீ, இவனைப் போய்க் கல்யாணம் பண்ணின்டோமே! அவன், அன்றைக்குப் பார்த்தவன் எவ்வளவு நயமாகப் பேசினான். அந்தப் பண்பாடு இவனுக்கு இல்லையே....'

ஒவ்வொருத்தர் வாழ்க்கையிலும் எங்கேயோ ஒரு ஓட்டை. திருப்தி தராத மூளி. ஆண்கள்கூட இப்படித்தான் நினைப்பார்களோ? பெண்டாட்டி முகமெறியப் பார்க்கும் போது, இரவின் குழைவில் நயந்து செல்லும் கையை 'வெடுக்'கென்றுபிடுங்கியெறியும் போது,

'சீ, இந்த ராட்சசிக்குப் பதில் அன்றைக்கு 'நகுமோ' பாடினாளே...எப்பா, என்ன குரல்!'

பச்சையைத் தேடி ஓடும் மனிதர்கள்!

எப்பொழுதோ அவள் தூங்கிப் போய் விட்டாள், பால்காரி கதவை இடிக்கும்வரை.

ஆர்ப்பாட்டமாக வெய்யில் சுட்டெரித்துக் கொண்டிருந்தது. வியர்வை வழிய வந்து நின்ற அந்த இரு இளைஞர்களைப் பார்க்கும் போது மனசில் லேசாக மூட்டம்.

''யார் வேணும்?''

''ரவிச்சந்திரங்கிறவர் வீடு இதுதானே?''

''ஆமா, அவர் இல்லேயே... இன்னும் ஊர்லேந்து வரலேயே. நீங்க யார்னு சொன்னா வந்தா....''

அவர்கள் இருவரும் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டு தயங்கினார்கள். ஒருவன் தொண்டையைச் செருமிக் கொண்டான்.

''நாங்களும் ஊட்டிலேந்துதான் வர்றோம். எங்களுக்கு ரவியை முன்னபின்னத் தெரியாது. ஆனா எங்களோடதான் அவரும் டிக்கெட் வாங்கினார். மெட்ராஸுக்குப் போகிறோம்கிற முறையிலே பேசிக்

யோசனை



கொய்யா இலைகளை காயும் எண்ணெயில் முதலில் போட்டு எடுத்துவிட்டால் கடலை எண்ணெய் பொங்கி வழியாது. கமறாது.

—ப்ரியா பாலு

கிட்டிருந்தோம். அப்போ...'' ஒரு நிமிஷம் நிறுத்தினவன் தெருவில் போய்க் கொண்டிருந்த கிழவரை அக்கறையாகப் பார்த்தான்.

நிர்மலா உறைந்து போய், பேசியவனுக்கு வாய் ஒன்றுதான் இருப்பது போல, அதிலிருந்து வரும் சொற்களுக்காகக் காத்திருந்தாள்.

''...திடீர்னு ரெண்டு மூனு கான்ஸ்டபிள் வந்தாங்க. அவர் தான் ரவிச்சந்திரன்னு தெரிஞ்ச உடனே 'உங்களை அரெஸ்ட் பண்ணப் போறோம். குன்னூர்ல ஒருத்தருக்கு வேலை வாங்கிக் கொடுக்கிறேன்னு ஏமாத்திப் பணத்தைப் புடுங்கிட்டு இங்க வந்து நின்னா எங்களுக்குத் தெரியாமப் போயிடுமா?'' அப்படின்னாங்க. அவர் மேல கேஸ் போடப் போறாங்களாம். அவங்களோட வந்திருந்த ஒரு பையன் இவர்தான் என் வாட்ச், மோதிரத்தை யெல்லாம் வாங்கிண்டு போனார்னு சொன்னான். பஸ் ஸ்டாண்டில ஒரே களேபரமாயிடுச்சு. எங்ககிட்ட இந்த அட்ரஸ் கொடுத்து, வந்து சொல்லச் சொன்னாரு...''

வந்தவன் நிர்மலாவைப் பார்க்கவேயில்லை. கதவைப் பிடித்துக் கொண்டு ஒன்றுமே புரியாமல் நின்று கொண்டிருந்தாள் அவள். இப்பொழுது என்ன செய்வது? ஊட்டி எங்கே இருக்கு? மெட்ராஸ் எங்கே இருக்கு? யாரைப் போய் ஆலோசனை கேட்பது?

வந்தவர்களுக்கும் மேற்கொண்டு பேசத் தோன்றவில்லை.

''ஏய்யா மிஸ்டர்! நீதான் ரவிச் சந்திரனு...''

''ஆமாம் சார்...''

பிடரியில் விழுந்த பலமான அறையை அவளிடம் சொல்ல முடியவில்லை. மேற்கொண்டு நடந்த அவமானங்களைத் தெரிவிக்க முடியவில்லை. போய்விட்டார்கள்.

அழுவாமா? அழுகையே வரவில்லை. உள்ளே போய் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டாள்.


மாமியார் மாமனார், மருமகள் வந்து விட்டாள் என்று கழற்றிக் கொண்டு காடு கழனி பார்க்கப் போய் விட்டார்கள். அம்மா, அப்பா... இந்த அவமானத்தை அவர்களிடம் எப்படிச் சொல்வது? நல்ல பிள்ளை, நல்ல பிள்ளை என்று அவளையும் இழுத்துக் கிணற்றில் தள்ளி அப்புறமாக மாப்பிள்ளை அவர்கள் நினைத்த அளவுக்கு இல்லை என்பதைப் புரிந்து கொண்டு ஒதுங்கி விட்டவர்கள். அவர்கள் உதவி பண்ண மாட்டார்கள். வேறு யார்?

அந்தப் புத்தகம் நினைவுக்கு வந்தது.

சிவராமன்!

''நிம்மி, இட்ஸ் ஓகே. இது இப்படித்தான் முடியும்னு தெரிஞ்சே தான் உன்னோட பழகினேன். எதிர்பார்த்த இழப்புத்தான். நீ குடும்பம் நடத்தப் போ! நான் வா படிக்கப் போகிறேன்.''

பாரிஸ் கார்னரில் அவனுடைய ஆபீஸ் இருக்கும் இடம் தெரியும். எப்பொழுதோ



செய்திச் சிதறல்

அசாதாரணமாகக் கருதப்பட்ட சிறுமியாகக் கருதப்பட்ட 'பனஜ்யாஷ்னுதேய்,' பல்கேரியா தலைநகர் சோஃபியாவில் நடந்த சர்வதேச குழந்தைகள் மாநாட்டில் பங்கு கொண்டு, மாநாட்டினர் நடத்திய ஓவியம், வண்ணம் தீட்டும் போட்டிகளில் கலந்து கொண்டு முதல் பரிசைப் பெற்றாள் என்பதை 'சண்டே' வார இதழில் படித்தறிந்த டெல்லியில் உள்ள இந்திய தபால் - தந்தி தலைமை நிலையத்தின் இயக்குநர்—பனஜ்யாஷ்னுதேய் வரைந்த பரிசுபெற்ற ஓவியத்தைத் தபால் தலையாக வெளியிட முடிவு செய்திருக்கிறார்.

- எஸ். விஜயன்

ரவியோடு அந்தப் பக்கம் போனபோது போர்டைப் பார்த்திருக்கிறாள். அவனுடையது தானா என்ற சந்தேகத்துக்கே இடமில்லாமல் வெளியில் யாருடனோ விவாதித்துக் கொண்டிருந்தான். இவளைக் கவனிக்கவில்லை. வக்கீல் கவுனும், கேஸ் கட்டுமாக நின்ற அந்த இளைஞன் இன்றைக்கு என்ன சொல்லப் போகிறான்?

''இப்படி மொட்டையாப் பிடிச்சுப் போயிட்டாங்கன்னு சொன்னா எப்படி நிம்.. நிர்மலா? என்ன விவரம், யார் அந்த ஆளு, எந்தப் போலீஸ் ஸ்டேஷன்ல வச்சிருக்காங்க, ஒண்ணுமே தெரியலையே?''

''எனக்குந்தான் தெரியலே. நேத்து சாயந்திரம் வந்துடுவேன்னுட்டுப் போனாரு. மத்தியானம் அவர் வரவேண்டிய பஸ்ல, கூட டிக்கட் வாங்கினவங்க வந்து சொன்னதுதான் தகவல்...''

''சரி. நான் கிளம்பறேன், இன்னிக்கு ஜாமீன்ல எடுத்துட்டு வந்துடலாம். அப்புறமா மத்த விஷயங்களைப் பார்க்கலாம்.''

கண்ணில் துளிர்த்து விட்ட நீரைச் சிரமப்பட்டு அடக்கிக் கொண்டாள். இவனெதிரில் அழக் கூடாது. இப்போ மட்டுமில்லே

எப்பவுமே காரியம்தான் முக்கியம். அநா வசியமாய் ஏன் இந்த அழுகை?

'குபுக்'கென்று பூத்து விட்டது.

சிவராமன் பார்த்து விட்டான். ''ஷ்... என்னது இது நிம்மி, ப்ளீஸ், எங்கிட்ட பொறுப்பை ஒப்படைச்சாச்சு இல்ல, இன்னும் என்ன?''

'அதனாலதாண்டா அழுகை. கீழே விழுந்த குழந்தை உடனே அழுதுடாது. அம்மா, ஐயையோ விழுந்துட்டாயாடான்னு ஓடி வந்தாத்தான் 'ஓ'ன்னு அழும்.'

சொல்லவில்லை. கண்கள் மிதக்க அவனுடைய புத்தகங்களை நோட்டமிட்டாள். சிவராமன் அவளேயே பரிவோடு பார்த்தான்.

'எனக்கு நம்ப முடியல நிம்மி. உனக்குக் கல்யாணம் ஆகி அஞ்சு வருஷம் ஆயிடுச்சா. என்னைச் சுத்திச் சுத்தி வந்துக்கிட்டிருந்த பொண்ணுதானே நீ? நான்தான் எவ்வளவு வேகமாக ஓடுது?'

''நாங்கூட வரலாமா?''

''எங்க?''

''ஊட்டிக்கு!''

அவன் சிரித்தான். ''ஏன் உங்க வீட்டுக்காரரைக் கூட்டிக்கிட்டு வருவேன்கிறதில நம்பிக்கை இல்லையா? இந்த மூணு நாள் பிரிவு ரொம்பக் கஷ்டமா இருக்கு போலிருக்கு...''

''இதென்ன சிவா இப்படி நீங்களும்....''

ஒரு பெண்மணி புடவையைத் தேர்ந்தெடுப்பதில் கடைச் சிப்பந்தியின் பொறுமையைச் சோதித்துக் கொண்டிருந்தார். அவர் முகம் மாறுவதைப் பார்த்து அந்தப் பெண் கத்தினாள்.

''உங்கள் மானேஜரைக் கூப்பிடு. உன்னை விட அவருக்கு மூளை இருக்கும்.''

''இருக்கிறது மேடம். அதனால்தான் நீங்கள் உள்ளே வந்தபோதே அவர் வெளியே போய்விட்டார்.''

-ப்ரஸன்னு



முடிக்காமல் அவளை நிமிர்ந்து பார்த்தாள். அவன் தலையைக் கவிழ்ந்து கொண்டான்.

இது சரியில்லை. எத்தனை வருஷம் கழித்துப் பார்த்தாலும் சாதாரணமாகப் பேச்சைஆரம்பித்துத் தொடரும் பாவனையில் வேஷத்தில் விழும் ஓட்டை, சிவா!.... கூடாது.

''ஸாரி நிர்மலா. நீ வரணும்னு அவசியமில்லை. நானே போயிட்டு வந்துடறேன்.''

''அப்போ நான் கிளம்பட்டுமா?''

''ரொம்ப நாள் கழிச்சுப் பார்க்கறோம். ஒரு காப்பி குடிச்சுட்டுப் போலாமே?''

வெளியே வந்தபோது குறுக்கும் நெடுக்குமாகக் கறுப்புக் கவுனில் அலைந்து கொண்டிருந்த வக்கீல்கள். அவர்களிடம் பேசும் மனிதர்கள் தான் எத்தனை விதம்! ரவிக்கைக்கும் வழியில்லாமல் அங்கங்கே ஒட்டுப் போட்ட கிழிசல் புடவைக் கிழவியிலிருந்து சரளமான ஆங்கிலத்தில் டையைச் சரி செய்து கொண்டு பேசும் இளைஞன் வரை... இத்தனையும் பொருட்படுத்தாமல் நிமிர்ந்து நிற்கும் சிவப்புக் கட்டிடம். நீதிமன்றம்!

அந்தச் சிறு கேண்டீனில் சளசளவென்ற சப்தத்தின் நடுவே அவர்களும் உட்கார்ந்து கொண்டார்கள்.

''ஸ்வீட் கொண்டாரட்டுமா ஸார்! அம்மா வந்திருக்காங்களே, அதிசயமா? வாங்கிக் கொடுங்க!''

சிவா மறுக்கவில்லை. எதையுமே. நிர்மலா எங்கே பார்த்தாலும் சட்டம் பேசும் அந்தக் கும்பலைப் புதியவளாய் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள். நெஞ்சில் மூலையில் வலித்துக் கொண்டிருந்த கணவனைக் கூட ஒரு கணம் மறந்து விட்டாள்.

''இப்படித்தான் அடிக்கடி மிஸ்டர் ரவி ஊருக்கெல்லாம் போய்க்கிட்டிருப்பாரா?..'' சர்வர் கொண்டு வந்து வைத்த மசால் தோசையை அவளிடம் தள்ளிக் கொண்டே கேட்டான்.

''அடிக்கடி இல்லே. அவர் அவருடைய கம்பெனியுடைய ரெப்ரசன்டேட்டிவ் போல. வெளியூர்க் கஸ்டமரைச் சில சமயம் நேர்ல போய்ப் பார்க்க வேண்டி வரும். ரொம்ப நாளா டிமிக்கி கொடுத்துக்கிட்டு இருக்கிறவங்களை நிறுத்தி வச்சு வசூலிக்க வேண்டி இருக்கும். அந்த மாதிரி சமயத்தில போவாரு...''

ஒரு கணம் யோசித்தவன் நிர்மலாவைப் பார்த்தான். மெல்லச் சிரித்தான்.

''என்ன?''

''டாக்டர் கிட்டேயும் வக்கீல் கிட்டயும் பொய் சொல்லக் கூடாதுன்னு சொல்லுவாங்க. உன் கணவர் பத்தி...''

''நிச்சயமா அப்படி இல்லே. அவர் அந்தக் காரியத்தைச் செய்திருக்க மாட்டார்...''

''சரி.''

அவனோடு இருந்தவரை ஒரு கவலையும் தெரியவில்லை. ஏதோ ஒரு தேவதை தன் பூங்கரத்தால் வருடி விட்டது போலிருந்தது

ஆறுதலாக வீட்டுக்கு வந்தவுடன்தான் மீண்டும் மனத்தை அழுத்தியது.

'இந்த வேளையில் என்ன செய்து கொண்டிருப்பார்? போலீஸ்காரங்க அடிப்பார்களாமே! ஒருவேளை இவரையும்... சே... சே.. இவரைச் சந்தேகக் கேஸில்தானே பிடித்திருக்கிறார்கள்....'

சூப்பிடா விருந்தாளியாக இருட்டிக்கொண்டிருந்தது. வெறிச்சென்று கிடந்த வீட்டுக்குள் இருக்கப் பயந்து கொண்டு வெளியே வந்து நின்று கொண்டாள்.

அது தனித் தனி மனையாக வாங்கி ஒவ்வொருவரும் அரசாங்க லோன் வாங்கிக் கட்டிக் கொண்டிருந்த ஏரியா. அரை குறையாகக் கைவேலையைப் போட்டு விட்டுப் போயிருக்கும் வேலையாட்கள். தனித் தனியான வீடுகளில் வெளியே நாயாகப் படுத்துக்கிடக்கிற 'ட்யூப் லைட்' வெளிச்சம்.

மனசை வண்டாகக் குடைந்தது. எல்லோருக்கும் ஏதோ ஒரு பொழுது போக்கு இருக்கிறது. அலுவலகம், குழந்தைகள், மனைவி, சினிமா...

இவளுக்கு எதுவுமில்லை. ரசனைகள் இல்லாத அன்பான கணவன்.

'ஸ்... இன்னிக்கு அதே சிட்டுக் குருவி நம்ப காம்பவுண்ட் வாசல்ல வந்துதா.நேத்து நீதானே எனக்கு நெல்லுப் போட்டே, இன்னிக்கும் போடுங்கற மாதிரி தலையை சாச்சு பாத்தது....'

'ஓஹோ....' ஒரு கையில் அடையும், ஒரு கையில் 'பேங்கிங் லா' புத்தகமுமாக உட்கார்ந்திருப்பான்.

இன்றைக்கு அவன் இல்லை என்பதுதான் குறை. மற்றபடி அதே வெறுமை.

அவனுடைய பிரிவு நல்லபடியாக இல்லை என்பதுதான் பயம். ஏக்கம் எல்லாம்.

'எங்கிட்ட ஒப்பனைகூட்டே இல்ல. இன்னும் என்ன....'

சிவராமனின் சொற்கள் அவளுக்குப் பக்கத்தில் துணையாக நின்று கொண்டிருந்தன.

பாரம் குறைந்த மனத்தில் நடைமுறைச் சாத்தியக்கூறுகளைக் கணக்குப் போட்டாள்.

மாத வருமானம் என்று அவனிடம் எதுவும் கொடுத்தது இல்லை. எக்ஸ்டென்ஷன் ஏரியாவில் இருக்கிறோம் என்ற சாக்கில் ஆபிசிலிருந்து வரும்போதே காய்கறி, சாமான் வந்துவிடும். அவளுக்குப் பவுடர் எப்பொழுது தீர்ந்து போகும் என்பதுகூட அவனுக்குத் தெரியும். அவளிடம் என்ன இருக்கும்?

அவர் வந்துவிட்டால் தேவலை. சிவராமனுக்கு வக்கீல் ஃபீஸ் கொடுக்கணும். அப்புறம் கேஸ் என்று வந்து விட்டால் ஊட்டிக்கு அடிக்கடி போக வேண்டி வரும் என்று சொன்னானே, அதற்கான பணம். அங்கே செலவழிக்க, சாப்பிட.... இதெல்லாம் எத்தனை நாள். கடைசியில் எப்படித் தீர்ப்பாகும்....

அப்பொழுது வலிக்காத ஊமைக் காயம் நேரம் ஆக ஆக வீங்கிக் கொண்டு குத்துவது போல அவளுக்குப் பொறுப்பின் பாரங்கள் புலப்பட ஆரம்பித்தன. அவர் ஜாமீனில் வரவில்லை என்றால் இத்தனையும் தான் ஒருத்தியாகச் சமாளித்தாக வேண்டும்... அந்த நாட்களுக்குச் சாப்பாடு வேண்டும். பணம் வேண்டும். நிஜமாகவே இவர்தான் மோசடி செய்தாரா? அந்தப் பையன் எப்படி அவ்வளவு சரியாக இவர்தான் என்று சொன்னான்? ஏன், ஏன் இதெல்லாம் நடக்கிறது?'

புதியவரைக் கண்டு பயப்படும் குழந்தையாக நிர்மலா வெளிநிப்போய் நின்றாள். பொழுது எப்பொழுதோ இருட்டி விட்டது.



இந்திரா காந்தி, மார்கரெட் தாட்சர் ஆகியோரைத் தொடர்ந்து நார்வே நாட்டின் முதல் பெண் பிரதமராகத் தொழிலாளர் கட்சியின் சார்பில் 'க்ரோ ஹார்லம் ப்ரண்ட்லண்டு' (Gro Harlem Brundtland) என்ற பெண்மணி தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார். (இவர் உலகின் மூன்றாவது பெண் பிரதமரும்கூட) இவருக்குள்ள மிகப் பெரிய பிரச்னை என்னவென்றால் இவரது அரசியல் எதிரி இவரது வீட்டுக்குள்ளேயே இருக்கிறார். ஆளுங்கட்சிக்கு எதிர்க்கட்சியான கன்சர்வேடிவ் கட்சியின் தலைவர் இவரது கணவர்தான்.

—'ஃபெடமோனீர்' இதழிலிருந்து

மல்லிகைப் பூ சரியாக இரண்டு பக்கமும் தொங்குகிறதா என்று தலையைத் திருப்பித் திருப்பிப் பார்த்துக் கொண்டிருந்த கோசலை, கண்ணாடியில் சிவராமன் தெரிவதைப் பார்த்துத் திரும்பினாள்.

காலை பத்து மணிக்குக் கிளம்பினால் கோர்ட் வேலையை முடித்துக் கொண்டு அவனுடைய சீனியர் அட்வகேட் காரிலேயே வீட்டுக்குப் போய், அங்கே அவருடன் அன்றைக்கு வந்த கேஸ்களை விவாதித்து விட்டு வீட்டுக்கு வர பத்தாகி விடும். இன்றைக்கு என்ன அதிசயமாய் நாலு மணிக்கே வந்து விட்டார்.

''என்ன இவ்வளவு சீக்கிரம்? சீனியர் வீட்டுக்குப் போகலே? காப்பி சாப்பிடறீங்களா?''

''ஒண்ணொண்ணாக் கேளேன். காப்பி வேண்டாம். வர்றப்பதான் சாப்பிட்டேன். இன்னிக்கு சீனியர் வீட்டுக்குப் போகலே. அவரைப் பார்த்துச் சொல்லிட்டேன்: ஊட்டிக்குப் போறேன்.''

''என்னது, ஊட்டிக்கா, இந்த ஜனவரி மாசத்துலயா... ஏனும்...''

கொழுக சப்திக்க வந்து நின்ற மகனைத் தூக்கிக்கொண்ட சிவராமன்,

''நானென்ன சீஸனை என்ஜாய் பண்ணவா போறேன். ஒரு கிளையண்டை அங்க அரெஸ்ட் பண்ணி வச்சிருக்காங்க. ஜாமீன்ல எடுக்கணும்....''

கோசலைக்குச் 'சப்'பென்று போய்விட்டது. குறுகுறுவென்று அவனையே பார்த்துக்கொண்டிருந்தாள். ஏன் இவர் இப்படி இருக்கிறார் என்று தெரியவில்லை. 'பம்'மென்று குழந்தையின் கன்னம் போல் உப்பியிருக்கும் கன்னமும், குறும்பைப் பொழியும் கண்களும் ஏன் இப்போது கதை பேசவில்லை? அவனுடைய முகத்துக்கும் நடந்துகொள்ளும் விதத்துக்கும் சம்பந்தமே இல்லை. எம்பொழுதும் சீரியஸாகத்தான் பேசுவான்.

''எப்பப் பாரு லா புக்ஸ்தானு, எங்கிட்ட ஏதாச்சும் பேசக் கூடாதா?''

அவன் புத்தகத்தை மூடி வைத்துவிட்டு அவளைப் பார்த்துச் சிரிப்பான்.

''உங்கிட்ட என்ன பேசறது? உனக்குத் தெரிஞ்சது எனக்குத் தெரியாது. சினிமா, புடவை இதுதான் உன் உலகம். எனக்குத் தெரிஞ்ச சட்டம் பத்தி உனக்கு இன்ட்ரெஸ்ட் இல்லே....''

'அவ்வளவுதானு? கணவன் மனைவிக்குள்ளே அவரவர்களுக்குத் தெரிந்ததைத்தான் பேசணுமா? வேறு பேச்சே இருக்காதா? ஊரில் உள்ள கணவன் மனைவி எல்லாம் இப்படித்தான் இருக்கிறார்களா? கலகலவென்று வாய் ஓயாமல் கணவனோடு பேசும் அக்கௌண்டண்ட் மனைவி குமுதாவுக்கு லெட்ஜரைப் பற்றி என்ன தெரியும்?

இல்லே. இவன் பொய் சொல்கிறான். மனதில் எங்கேயோ பட்டுவிட்ட மூளியை மூடி மறைக்கப் பார்க்கிறான். பெண்டாட்டிக்குத் தெரியக் கூடாது என்று நினைக்கிறான். அதை மறைக்க வக்கீலாக வேஷம் போடுகிறான்.

அவள் கேட்கவில்லை. 'ஏன்' என்று குரல் தூக்கவில்லை. சரி, அவரே மனைவி என்ற அந்தஸ்தைக் கொடுக்க நினைக்கும்போது, இவள் என்னுடையவள் என்று ஆர்வப்படும்போது சொல்லட்டும். மனது கரையும்போது அதில் அழுக்கெல்லாம் வந்துவிடும்.

''ஊட்டிக்குப் போறேன்னு சொன்னதுக்கா இவ்வளவு யோசனை. ஏன், நீயும் வரயா...''

தன்னை நோக்கித் தாவும் மகனை எடுத்துக் கொண்டாள். அவன் கழுத்தில் இரண்டு பக்கமும் கைகளால் சுற்றி இழுத்துக் கொள்ளும்போது சுகமாக இருந்தது. பாதுகாப்பாக உணர்ந்தாள்.

''இல்லே. நானே வாய் திறந்து வரேன்னு கேட்டாலும் நீங்க கூட்டிக்கிட்டுப் போக மாட்டீங்கன்னு எனக்குத் தெரியும். ஏன்னு, அபிஷியல் ஒர்க்கா போறீங்க.''


அதன் அழுத்தத்தை அவன் புரிந்துகொண்டானோ அல்லது தெரிந்துகொண்டது போலக் காட்டிக் கொள்ளாமல் போய்விட்டானோ என்னவோ?

என்னென்னவோ வார்த்தைகள் நாக்கில் புரண்டன. மகனை இழுத்து முத்தமிட்டாள் கோசலை.

இது என்ன குடும்பத்தில் சேர்த்தி என்று புரியவில்லை. மருமகள் ஒருத்தி வந்துவிட்டாள், இனிமேல் நமக்கென்ன என்று ஒதுங்க வேண்டாம், குறைந்தபட்சம் அவளோடு பகிர்ந்துகொள்வோம் என்றுகூட நினைக்காத மாமியார், இடுப்பை விட்டு இறங்காத பீரோ சாவி, ரிடையர்டு ஆனப்புறம் கறிகாய் வாங்க மட்டுமே எனத் தன்னை மாற்றிக் கொண்ட மாமனார், வக்கீல் என்பதால் சௌகரியமாகக் காலையில் போய்விட்டால் இரவு வரை 'பிராக்டீஸ்' என்று வேஷம் போடும் கணவன். மற்றபடி சர்வ அமைதி. கொழுக கொஞ்சும் மகன்தான் அவளோடு கொஞ்சுகிறான்.

இதெல்லாம் எப்படி நேராகும் என்று தெரியவில்லை. காலிலும், கையிலும் விலங்கை மாட்டி, பால் சோறு போடும் இவர்களுக்கு 'கீகீ' என்று நன்றியறிவிப்புத்தான் தன்னுடைய வேலையா? பெண் ஜன்மம் இதோடு முடிவடைகிறதா?

இரவின் அமைதியில் 'தடக் தடக்' என்ற ரெயில் ஓடும் சப்தம் மட்டும் தொடர்ந்து



யோசனை

வெள்ளைத் துணிகளை துவைக்கும் போது தண்ணீரில் சிறிது டேபிள் சால்ட் சேர்த்துக் கொண்டால் துணிகள் வெள்ளை வெளேர் என்று ஆகும்.

—ப்ரியா பாலு



கொண்டிருந்தது. பெட்டியில் அநேகமாக அனைவரும் தூங்கிவிட்டார்கள். சிவராமன் மட்டும் தூக்கம் வராமல், இதற்கு முன்பாக தீர்ப்பாகி யிருந்த 'சிட்டிங் கேஸ்' களைப் பற்றிக் குறிப்பெடுத்துக் கொண்டிருந்தான். தேவையான செய்திகள் கிடைத்துவிட்டன. இனி அங்கு போய் விவரம் தெரிந்தால்தான் மேற்கொண்டு 'ப்ரொசீட்' பண்ண முடியும். புத்தகத்தை மூடி வைத்துவிட்டுக் கைகளை மேல் நோக்கித் தூக்கி இணைத்து வளைத்து சோம்பல் முறித்தான். அடிவயிற்றிலிருந்து சுகமான கொட்டாவி வெளியே வந்தது. சன்னல் பக்கமாகச் சாய்ந்து கொண்டு எதிர்க் காற்றை உள்ளே இழுக்கும் போது பெரிய பாரம் குறைந்தாற்போல இருந்தது.

அப்பா, எவ்வளவு வேஷங்கள் போட வேண்டியதாக இருக்கிறது? சொந்தப் பெண்டாட்டியிடம் கூடவா? வேறு வழி?

வக்கீல் என்ற கருப்புப் போர்வையால் மனசையும் மூடியாகி விட்டது. சுதந்திரமாகச் சிரித்து எத்தனை நாளாகி விட்டது! எல்லாம் நிம்மியோடு போயிற்று. அவளுக்காகத் தாடி வளர்க்க முடியவில்லை. கடற்கரையில் அவர்கள் சுற்றிய இடங்களுக்கெல்லாம் போய், வெறித்த கண்ணோடு கையை விரித்துக் கொண்டு பாட்டுப் பாடவில்லை.

ஆனால் மனசால் அத்தனையையும் செய்துவிட்டான். ஆழமான வடுவாகத் தங்கிவிட்ட அந்தக் காயம் லேசாகத் தொட்டால் கூட இப்போதும் வலிக்கிறது.

டைவர்ஸ் கேஸும், கணவன் கைவிட்டு விட்டான்என்று கண்ணீரோடு நிமிரும் பெண்ணின் தலையும் அந்தப் புண்ணை மெதுவாகத் தொட்டு வலிக்கச் செய்யும்.

நிம்மியைப் பற்றி நினைக்கும்போது ஆச்சரியமாகத்தான் இருக்கிறது. எப்பேர்ப்பட்ட நிர்மலா! அப்பா, நிமிர்ந்து பார்க்கும் போதே தகிக்கும். தோளோடு போர்த்திய தலைப்பு யாரையும் தயங்கச் செய்யும். ரோடோரம் பீடி குடித்துக் கொண்டு வார்த்தைகளை வீசும் மைனர்கள் கூட யோசிப்பார்கள்.

அப்போர்ப்பட்டவளுக்குப் பக்கதுணை, தோழனாகி, முதிர்ந்த நிலையில் ஆலோசனையாளனாக மாறினபோதுகூட அவள் மாறவில்லை. ஓடி ஓடி வந்து கரையைத் தொட்டுவிட்டு, மனிதர்களைப் பார்த்துவிட்டு, ஒளிந்து கொள்ளும் அலைகளை அலுக்காமல் பார்த்துக் கொண்டிருப்பார்கள்.

'சிவா, உங்க பின்னாடி பாருங்களேன். சூரியன் எவ்வளவு அழகா மறையறான்னு...''

என்று செப்பு உதடு குவியும்போது இரண்டையும் மாறி மாறி ரசித்திருக்கிறான். அன்றைக்கு அவர்கள் வகுப்புத் தோழி வகுப்பிலேயே மயக்கம் போட்டு விழுந்து விட்டாள். டாக்டரிடம், ஆளுக்கு ஒரு கையாகப் பிடித்துக் கொண்டு போய் போட்டபோது அவர் சொன்ன சொல்லில் வகுப்பே அதிர்ந்தது.

'காந்தி' படத்தின் படப்பிடிப்புக்காக ஆட்டன்பரோவின் படப்பிடிப்பு குழுவினர் டெல்லியில் உள்ள ஐந்து நட்சத்திர ஓட்டல் ஒன்றில் தங்கி இருக்கிறார்கள். அயல் நாட்டு நட்சத்திரங்கள் அந்த ஓட்டலின் உணவு வகைகளை வெளுத்துக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் கஸ்தூரி பாயாக நடிக்கும் ரோஹினி கட்டங்காடி மட்டும் தனக்குரிய உணவினை ஸ்டவ் ஒன்றில் தானே சமைத்து சாப்பிட்டுக் கொள்கிறார். ஓட்டலில் தயாராகும் உணவினை உட்கொள்ள அவருக்கு விருப்பமில்லையாம். காரணம் ரோஹினி நடுத்தர குடும்பத்தைச் சேர்ந்த பெண்மணி. காலையில் ஒரு கோப்பை டீ அருந்துவதற்கான கட்டணம் ஒன்பது ரூபாயாகும். இது கொடுமையானது என்று அவர் ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டார்.

—ஸ்டார் & ஸ்டைலிலிருந்து

''ஸாரி, இந்தப் பொண்ணு வேணும்னுட்டே செஞ்சுண்டிருக்கா. முறையான அபார்ஷன் பண்ணிக்காம இவளா செஞ்சுகிட்டதாலே, எக்கச்சக்கமா போய்...''

அன்றைக்குக் கேண்டீனில் வெகு நேரம் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்தார்கள்.

''இந்த யுகத்துப் பெண்கள என்னால புரிஞ்சுக்க முடியல நிம்மி. இவர்கள் முன்னேறியிருக்காங்களா, இல்லையா? இன்னும் கூட காதல் தோல்வின்னு தற்கொலைதானு தோணணும்? ஆணுக்கும், பெண்ணுக்கும் காதல்ங்கிறதுதான் லட்சியமா நிம்மி? மனசால மாறவே மாட்டாங்களா?''

நீர் படர்ந்த கண்களை மூக்கை உறிஞ்சி சரி செய்து கொண்டாள் நிர்மலா.

''எனக்குப் புரியறது சிவா. இவங்க மாறுவாங்க. ஆனா கொஞ்ச நாள் போகணும். இது காதல் தோல்வியால தற்கொலை

செஞ்சுக்கிட்ட கேஸ் இல்லே. காதலினால செஞ்ச தப்பை யாரும் தெரியாம மறைச்சுடணும்னு நினைச்சு தப்புச் செஞ்சுக்கிட்ட கேஸு. அந்த அளவில முன்னேறியிருக்காங்க இல்லையா....'' மெல்லச் சிரித்தாள்.

''நீ இப்படிப் பேசறது நல்லா இல்லே நிம்மி. நீயே உன் வர்க்கத்தைத் தாழ்த்திக்கிறே....''

''இல்லே, சிவா. இது தாழ்ந்து போச்சுன்னு சொல்லலே. அவ செஞ்சது தப்புன்னும் தீர்ப்புச் சொல்லலே. அந்தக் காலத்துல பெண்களை உடமையா, ஒரு சொத்தா வீட்டுக்குள்ள வச்சிருந்தாங்க. அதனால அவங்களுக்குப் பொறுப்போ, கடமையோ இல்லே. அப்பா வளர்க்கிற வரைக்கும் அப்பா. ஒரு அழகான இளைஞனைப் பார்க்கறபோது காதலிக்கிறதும், அவனோட குதிரையில ஓடிப்போறதும் அவங்களைப் பொறுத்த வரைக்கும் பெருமைதான்.

ஆனா நாங்கள்ளாம் படிச்சுட்டோம். செலவு செஞ்சு, தியாகம் பண்ணி படிக்க வச்ச அம்மா, அப்பாவுக்காக தயங்கறோம். கடமைக்காக நினைப்பை மாத்திக்கறோம். அதனால தப்பை மறைக்கப் பார்க்கறோம். நாங்கள்ளாம் சம்யுக்தை ஆக முடியாது சிவா!''

அப்புறம் எந்தப் பேச்சும் இல்லே. மௌனமாகவே இருவரும் கிளம்பினார்கள்.

சொந்தம், பணம், அம்மா என்ற பந்தங்களில் கைதியாகி, மணப் பெண்ணாகி அவனிடம் அழைப்பிதழை நீட்டியபோது—

உள்ளுக்குள் நொறுங்கிப் போனான். பெண்ணே, நீ ஏன் இவ்வளவு கம்பீரமாக இருந்தாய்? இனிமேல் இருப்பாயா? உன் பெண்மை எப்படி பூஜிக்கப்படும்? பவித்ரமாகத் தூங்கிப் போகும் நீயும் சிற்றின்பங்களுக்கு அடிமைப்படப் போகிறாயா? உன்னால் அது முடியுமா?

'ஓ, நானில்லாமல் உன் கல்யாணமா? கண்டிப்பா வர்றேன்'.

'அவர்கள் அந்தக் குறிப்பிட்ட கடையைக் கடக்கும்போதெல்லாம் அவள் அந்தப் பொம்மையை வைத்து அவனைக் கேலி செய்வாள். பெரிய விமானம் போல நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் அந்த மாடலைப் பார்த்து,

'சிவா, சிவா, எனக்கு அந்த ஏரோப்ளேன் வாங்கிக் கொடுங்களேன்.'

மறக்காமல் ஒரு கண்ணாடிகள் பதித்த அழகான விமான பொம்மையை வாங்கிக் கொண்டு போய் அவளுக்குக் கொடுத்தான். அந்தத் திருமண அமர்க்களத்தில் அவள் கவனித்தாளோ இல்லையோ?

ஐந்து வருடங்கள் கழித்து இப்போது தான் பார்க்கிறான். ரவியின் மனைவியாக— சந்தேக வழக்கில் பிடித்து வைக்கப்பட்டிருக்கும் ஒருவனுடைய மனைவியாக. தன் கணவன் எப்படி இந்தச் சிக்கலிலிருந்து விடுபடப் போகிறான் என்று சஞ்சலம் காட்டும் கண்கள்.

பரந்த ஆகாய வெளியில் பறக்கும் மனங்கள் கூட்டில் அடைபட்டு விடும்போது சிரிப்பேது? அதற்குரிய பட்டுச் சிம்மாசனத்தில் கணவனாக, தகப்பனாக, வக்கீலாக வேஷங்கள்.

'மை லார்ட்! சமூகத்தின் முன் இவன் பெரும் குற்றவாளியாகிறான். குறிப்பிட்ட அந்தப் பெண்ணுக்கு மட்டுமே அவன் தீங்கிழைத்ததாகக் கருத முடியாது. தருமத்திற்கு. நியாயத்திற்கு.....'

இவன் சமூகத்தில் மதிக்கப்படும் பெரும் வழக்கறிஞனும் கூட!

தன் கால்களை இவையெல்லாம் இணைத்துக் கட்டி வைத்தது போல இருந்தது.

இளங்காலைப் பொழுதில் மேட்டுப்பாளையத்தில் இறங்கி ஊட்டி போய்ச் சேர்ந்த பொழுது பகல் ஏறிவிட்டது. ரவிச்சந்திரன் இருந்த காவல் நிலையத்தை அலைந்து கண்டு பிடிக்க வேண்டியதாகி விட்டது.

''நான் மெட்ராஸ்லேந்து வர்றேன். அட்வகேட் சிவராமன்.''

இன்ஸ்பெக்டருடன் கை குலுக்கினான்.

''மிஸ்டர் ரவிச்சந்திரனை ஜாமீனில் கூட்டிப் போக வந்தீங்களா?''

''ஆமாம். அதுக்கு முன்னாடி விவரங்கள் தெரியணும்.''

''உக்காருங்க, சொல்றேன்.''

சிகப்புக் கட்டிடமும் கடின முகக்காவல்காரர்களுமாக அந்தச் சூழ்நிலையே இறுக்கமாக இருந்தது. ரவி எப்படி இருப்பான் என்றே தெரியாது. ஆனால் அதைக் காட்டிக் கொள்ள முடியாது.

''ஊட்டி மார்க்கெட் கிட்ட முந்தாநாள் சாயந்திரம் ஆறுமுகம்னு ஒரு பையன் இருந்திருக்கான். அவன் வீட்டிலேருந்து கோவிச்சுக்கிட்டு வந்துட்டானாம். ஏதாவது ஒரு வேலை போட்டுத் தரச் சொல்லிக் கடைக்காரங்களைக் கேட்டிருக்கான். அவன் கையில

யோசனை

கைகள் புகமுடியாத கண்ணாடி பாட்டில்களில் அடியில் காணப்படும் கறைகளை அகற்ற எலுமிச்சம் பழத்தின் சிறு துண்டுகளைப் போட்டு பாதிக்குமேல் தண்ணீர் விட்டு குலுக்கினால் போதும். —ப்ரியாபாலு



இருந்த சீகோ வாட்சையும், விரல்ல இருந்த ஒரு பவுன் மோதிரத்தையும் பார்த்துட்டு இவன் எங்க ஒழுங்கா வேலே செய்வான்னு யாரும் இவனுக்கு வேலே தரல்ல. அது அறியாப் பையன். 'அந்தளுல வேஷம் போடத் தெரியல.

''இதெல்லாம் பார்த்துக்கிட்டு இருந்த இந்த ஆளு என்ன செஞ்சிருக்காரு, அவங் கிட்டப் போய் நைச்சியமாப் பேசியிருக்காரு. உனக்கு வேலேதானே வேணும், எங்க மொத லாளி கிட்ட கேட்டுப் போட்டுத்தரச் சொல் றேன்னு சொல்லியிருக்காரு. அவன் உடனே உங்களோடயே வந்துடறேன்னிருக்கான்.

'' 'எப்படியப்பா, "இங்க ஒரு கஸ்டமர் தரவேண்டிய நாலாயிரம் ரூபாய் பணத்தை வசூல் பண்ண வந்திருக்கேன். காலேயில ரெண்டாயிரம் குடுத்துட்டாரு. அவருக்கு மத்தியானம் செக்கு வரும், சாயந்திரம் ஆறு மணிக்கு வான்னு சொல்லியிருக்காரு' அப்படின்னிருக்காரு.

'''அப்பச் சரிங்க,



நானும் உங்களோடயே இருக்கேன்'னு அவன் சொன்னானும்.

''இவரு கொஞ்ச நேரம் யோசிக்கிறப் போல யோசிச்சட்டு, ''அடடா, மறந்தே போச்சு. இன்னிக்குச் சனிக் கிழமையாச்சே! ஆறரைக்கு மொதலாளி பொறப்பட்டுடு வாரு. அவரு எஸ்டேட்டுக்குப் போயிடு வாரு. இவன் அதுக்குள்ளப் பணத்தைத் தரமாட்டானே அப்படின்னு சொல்லிட்டு,

'' 'தம்பி, நீ பாத்தா நல்லவனா இருக்கே, கண்டிப்பா தப்பு தண்டா செய்ய மாட்டே! கூடலூருக்குப் போய் நான் கொடுக்கிற அட்ரஸ்லே இந்த ரெண்டாயிரத்தைச் சேர்த்துடு. மொதலாளிக்கும் உம்மேலே நல்ல அபிப்பிராயம் விழுந்துடும்'னு சொன்னாராம்.

''அந்தப் பையனுக்கு ஒரே சந்தோஷம். முன்னே பின்னே தெரியாத நம்பள நம்பி இவ்வளவு பணத்தைக் கொடுக்கிறானேன்னு ஒத்துக்கிட்டான். ஒரு பழைய பையிலே, ரூபா நோட்டைப் போட்டு இவன பஸ் ஏத்தியிருக்காரு.

''பஸ் புறப்படறதுக்குக் கொஞ்சம் முன்னாடி, ''தம்பி, நீ ரொம்பச் சின்னப் பையன். அவ்வளவா விவரம் தெரியாது. 'அதனால தான் .இதுல ரூபா இருக்குன்னு தோணாத மாதிரி பழைய பையிலே போட்டுக் குடுத்திருக்கேன். வாட்சு, மோதிரம்லாம் வேறே போட்டிருக்கே. ராத்திரி வேளை. நான் ஒன்பது மணிக்கெல்லாம் கூடலூருக்கு வந்துடுவேன். உன் வாட்ச், மோதிரம் வரைக்கும் என்கிட்டக் குடுத்து வை. நான் அங்க வந்து கொடுக்கிறேன். தப்பா நினைக்காதே. இஷ்டமில்லேன்னா வேண்டாம்...'

அப்படின்னாராம். நம்பள நம்பி ரெண்டாயிரம் ரூபாய் கொடுத்திருக்காரு; நாம்ப பத்திரமாப் போய்ச் சேரணும்னு கவலைப் படறாரு; எவ்வளவு நல்லவருன்னு உடனே கழட்டிக் கொடுத்துட்டு பஸ்ஸிலே போயிருக்கான்...

மூச்சு விட நிறுத்திய இன்ஸ்பெக்டரைப் பார்த்துக் கொண்டிருந்தான் சிவராமன்.

''அப்புறம்....?''

''அப்புறம் என்ன...? வழக்கம் போலத்தான். கூடலூர்ல அந்த மாதிரி அட்ரஸே கிடையாது. தேடித் தேடி அலுத்துப் போயிட்டு, கடைசியிலே போலீஸ் ஸ்டேஷன் லேயாவது விசாரிக்கலாம்னு வந்திருக்கான். இந்தக் கதையெல்லாம் கேட்டுட்டு, பையைப் பிரிச்சுப் பார்த்தா வெத்துக் கட்டுங்க! முன்னாடி பின்னாடி மட்டும் ரூபாய் நோட்டு!



இரண்டு நாள் கழிச்சு அந்தப் பையனே இந்த ஆளை கட்டி பஸ்-ஸ்டாண்டுலே கை யோட பிடிச்சுக் கொணந்து இங்க வுட்டுட்டு கம்ப்ளெண்டும் எழுதிக் குடுத்துட்டான். இன்னும் கொஞ்ச நேரம் ஆகியிருந்தா பறவை பறந்திட்டிருக்கும்.''

''அவர்தான் இதைச் செஞ்சாரா இல்லே யாங்கறதைக் கோர்ட்லே பார்த்துப்போம். இப்போ அவரை ஜாமீனில் விடணும்...''

''அதப் பத்தி எனக்கு ஒண்ணும் இல்லே சார். ஆனா, அவருக்கு இங்க யாரும் இல்ல அப்பமன்னு சொன்னதால ரிமாண்டிலே வெச்சுட்டோம். கோர்ட்ல எடுத்துக்குங்க...''

''ஐ ஸீ...''

அப்புற ரவியைப் பார்த்துப் பேசியது, மறுநாள் கோர்ட்டில் ஆஜர்ப்படுத்தி அவனை ஜாமீனில் விடுவித்து அழைத்துச் செல்வதாக உறுதிமொழி கொடுத்தது எல்லாம் மளமள வென்று நடந்து விட்டது.

ரவி முகம் வெளிறிப் போயிருந்தான். தன் மனைவிதான் இவனை அனுப்பியிருக்கிறாள் என்று சொல்லி எவ்வளவோ தேறுதல் சொல்லியும் திகிலிலிருந்து விடுபடவே இல்லை அவன்.

'கண்டிப்பா இவன் இதைச் செய்திருக்க மாட்டான்' என்று ஏதோ ஒன்று சிவராமனுக்கு மனத்துக்குள் சொன்னது.

''ப்ளீஸ் ரவி, ரிலாக்ஸ்டாக இருங்க. இன்னும் ரெண்டே நாள்தான். மெட்ராஸ் போயிடலாம். அப்புறமா கேஸ் நடக்கற வரைக்கும் கோர்ட்டுக்கு அப்பப்போ வந்தாப் போதும். நிச்சயம் உங்களுக்கு விடுதலை கிடைக்கும்.''

கம்பிகளுக்குப் பின்னே அடைபட்டுக் கிடந்த ரவி வெறுமனே தலையசைத்தான். அவனுக எதுவும் கேட்கவில்லை. நிர்மலாவுக்கு இவனை எப்படித் தெரியும், பெற்றோர்களுக்கு இந்த விஷயம் தெரியுமா? எதுவும் கேட்கவில்லை.

மேற்கொண்டு என்ன பேசுவது என்று ஒரு கணம் யோசித்தான் சிவராமன்.

''நிர்மலாவுக்கு நான் பி.ஏ.லே கிளாஸ் மேட். உங்க கல்யாணத்துக்குக்கூட வந்திருந்தேன். இந்த மாதிரி நேர்ந்ததும்தான் அவங்க என்னைத் தேடிக்கிட்டு வந்தாங்க. கிராமத்தில இருக்கிற உங்க அம்மா, அப்பாவுக்குத் தெரிஞ்சா கலவரப்படுவாங்கன்னு தெரிவிக்கலே....''

''நிர்மலாவோட அப்பா, அம்மாவுக்கு?''

''அவங்களுக்கும் சொல்லலே...''

'தனியொருத்தியாக அவள் இந்தப் போராட்டத்திலே குதிச்சிருக்கிறாள்; உன்னைப் போல பயந்தாங்கொள்ளி இல்லேடா அவ' என்று சொல்லவேண்டும் போலிருந்தது. இனி அவர்களுக்கும் வழக்குக்கும் இருக்கப் போகிற நீண்ட காலத் தொடர்புக்கும், அதற்கு ஆகப் போகிற செலவுக்கும் அவன் என்ன செய்யப் போகிறான் என்று கேட்கத் தோன்றியது.



மத்திய பிரதேசத்தில், பெண்கள் குழந்தை பெற்றபின் 21 நாட்களுக்கு ஏலம் போட்ட வெந்நீரைக் குடிக்கத் தருகிறார்கள். இதைக் குடிப்பதால் தாயின் கருப்பையும், தாய்ப்பாலும்சுத்தம் பெறுவதோடு குழந்தையை வட்டப் பூச்சிகள் தாக்குவதையும் தடுக்கிறதாக நம்பப் படுகிறது.

மௌனமாக இருந்து விட்டான்.

ஏதோ ஒரு லாட்ஜில் கம்பளிப் போர்வைக்குள் சுருட்டிக் கொண்டாலும் உடலை நடுக்கி எடுத்தது. நினைக்கும்போது வேடிக்கையாகவும் இருந்தது. இவ்வளவு தூரம், முன் பின் தெரியாதவனை ஜாமீனில் எடுக்க ஓடி வந்ததும், அவனுக்குத் தேறுதல் சொன்னதும் எதற்காக? சாதாரண மூன்றும் ஆளுடைய கேஸாக இருந்தால் மனம் இவ்வளவு தூரம் இதில் ஈடுபடுமா?

அப்படியென்றால் இன்னும் கூட நிர்மலாவிடம் தனக்கு ஈடுபாடு இருக்கிறது என்று தானே அர்த்தம்? என்றோ ஒரு நாள் காதலித்தான் என்பதால் இன்றைக்கு நடப்பது கதைகளில் வருவது போல பண்பாட்டுக்கு விரோதமில்லையா? அல்லது அந்த அன்பு என்பது மனிதர்கள் மேல் கொள்ளும் மனித நேயத்தில் ஒன்றுதானா? தான் அவளிடம் என்ன எதிர்பார்த்தான்? ஒன்றுமே இல்லை. அவள் மேல் அக்கறை இருக்கிறது; அவள் முகம் வாடிவிடக் கூடாது என்ற முயற்சிகள். இதற்கு என்ன களங்கம் கற்பித்துக்கொள்ள முடியும்?

ஏதேதோ சிந்தனைகள் குடைய அந்த மயக்கத்தில் அப்படியே உறங்கிப் போய் விட்டான் சிவராமன்.

கோர்ட் நேரத்துக்கு முன்பே அங்கே போய்விட்டான் சிவராமன். ரவிக்கு ஜாமீன் கொடுக்க இரண்டு ஆட்கள் தேவை. இதற்கென்றே அங்கே சுற்றிக் கொண்டிருந்தவர்களில் இரண்டு பேரைப் பிடித்தான்.

''என்ன, சஸ்பிஷன் கேஸ்¬ங்களா? இரு நூறு ரூபா ஆகுங்க...''

''நானென்ன இன்னிக்குத்தான் பார் கவுன்ஸில்ல என்ரோல் பண்ணியிருக்கேன்னு நினேச்சியா? மெட்ராஸ் வக்கீல்பா நான்...'' சிரித்தான் சிவராமன்.

''இருக்கட்டுங்க. எங்க வேல எவ்வளவு ரிஸ்குங்கறது உங்களுக்குத் தெரியாது? ஊர் பேர் தெரியாத ஒருத்தனைப் போய், இவரை எனக்கு ரொம்ப வருஷமாத் தெரியும். என் பொறுப்பில ஜாமீன்ல விடுங்க. கேஸ் நடக்கறப்ப கோர்ட்டுக்குத் தவறும வருவார்'னு சொல்லப் போறோம். அந்த அயோக்கியன் டிமிக்கி கொடுத்தான்னு நாங்க இல்ல உள்ளாரப் போகணும்...''

''சரிப்பா. இந்தக் கதையெல்லாம் எனக்குத் தெரியாது. நூத்தம்பது நூத்தம்பது கொடுத்திடறேன். வாங்கிக்கங்க..''

நீதிபதி அமருவதற்கு இன்னும் பத்து நிமிஷம் இருந்தன. ரவியைக் கூட அழைத்து வந்துவிட்டார்கள். நேற்றைய தினத்தைவிட இன்றைக்குக் கொஞ்சம் முகம் தெளிவாக இருந்தது. தூரத்தில் இருந்து அவனுக்குக் கையாட்டினான்.

ஜாமீனுக்கு இருவர் உறுதிமொழி கொடுக்க நீதிபதி அவனை விடுவித்தார். கேஸ் நடக்கும் நாட்களில் எல்லாம் அவன் ஆஜராக வேண்டும் என்று.

''அப்பா, எவ்வளவு பெரிய விடுதலே''

சந்தோஷமாகச் சிரித்த அவனேப்பார்க்கப் பாவமாக இருந்தது. இனிமேல் அல்லவா கஷ்டங்களே ஆரம்பமாகப் போகின்றன!

''ஆமாம், இவர்கள் இரண்டு பேரை எங்கே பிடித்தீர்கள்'' என்று கேட்டான் ரவி.

''அவர்களுக்கு இதே தொழில்தான். பணம் வாங்கிக் கொண்டு எனக்கு இவரைத் தெரியும் என்று ஜாமீன் கொடுப்பார்கள்.''

'ஓஹோஹோ...' என்று சிரித்தான் ரவி.

''அப்படீன்னு இவர்கள் ஜாமீன் கொடுக்கற ஆள் வரலேன்னு இவர்கள் இல்ல ஜெயிலுக்குப் போய் உட்கார்ந்துக்கணும்...''

சிவராமன் சிரித்தான். ''இவர்களுக்கு வெளியில மாத்திரம் ஜெயில் இல்லேன்னு நினேத்தீர்களா... இவர்கள் தொழில் எப்பவும் கைதியா ஆகப்போகிற ரிஸ்க்க எடுத்துக்கிட்ட தொழில்தான். வெளியிலேயும் வறுமையால மனைவி, குடும்பத்தக் காப்பாத்தணும்கற கட்டாய ஜெயில்ல இருக்காங்க. பாக்கப் போனு யார்தான் கைதியா இல்லே? எல்லோரும் ஏதோ ஒரு விதத்தில விலங்கை மாட்டிக்கிட்டுத்தான் இருக்கோம்''

ரவி ஒன்றும் பேசவில்லே. இருவரும் மௌனமாகவே பகல் உணவு சாப்பிட்டனர். அவனிடமிருந்து பணம் ஒன்றையும் எதிர் பார்க்கவில்லே.

பஸ் பிடித்து மேட்டுப்பாளையத்துக்கு வந்த இருவரும் அங்கிருந்து சென்னேக்கு சாவகாசமாக ரயிலில் போய்க் கொண்டிருக்கும்போதுதான் கேட்டான்.

''எப்படி அவங்க உங்களேப் பிடிச்சாங்க? எனக்கு ஒன்னு விடாமச் சொல்லுங்க. இன்ஸ்பெக்டர் சொன்னவரைக்கும் சொல்றேன். விடுபட்டுப் போனதை நீங்க சொல்லுங்க'' என்று விவரித்தான்.

அனேத்தையும் கேட்ட ரவி தொடர்ந்தான்.

''...இதெல்லாம் அவங்க சொன்னது. இது எதுவுமே எனக்குப் புரியலே. நான் கஸ்டமர் கிட்ட இருந்து வரவேண்டிய பணத்தைக் கலெக்ட் பண்ணிக்கிட்டேன். சாயந்திரம் பஸ் பிடிக்க எப்படியும் போயிடணும்னு பஸ் ஸ்டாண்ட்ல நின்னுட்டிருந்தப்போ ஒரு பையன் என்னேயே உத்துப் பார்த்தான். அவனுக்கு இருபது வயசிருக்கும். நான் அவனை இதுக்கு முன்னடி பார்த்ததில்லே. 'ஏம்பா என்ன வேணும்?' என்று கேட்கலாமான்னு வாய் திறந்தப்போ,

'ஏய், நீதானே என்னே ஏமாத்தினே. என் வாட்ச், மோதிரத்தை யெல்லாம் குடுடா என்று சட்டையைப் புடிச்சான். அவன் கத்தினவுடனே எல்லாரும் வந்துட்டாங்க. போலீஸ்காரரும் வந்தாரு. எல்லாருமாச் சேர்ந்து என்னே இழுத்துக்கிட்டுப் போனுங்க.

இவன்தான் என் வாட்ச், மோதிரத்தைத் திருடியிருக்கான் அப்படீன்னு கம்ப்ளேண்ட் கொடுத்தான்.''

இதுவரை பேசாமல் கேட்டுக் கொண்டிருந்த சிவராமன் குறுக்கிட்டான்.

யோசனே



ஜாடி பாட்டில்களின் மூடி இறுகிக் கொண்டு திறக்க முடியாமல் திண்டாடுகிறீர்களா. ஒரு வாயகன்ற பாத்திரத்தில் குளிர்ந்த நீரை நிரப்பி பாட்டிலே தலேகீழா கவிழ்த்து அதன் வாய் நீரிலே நனேயும்படியாக வையுங்கள், பின்னர் அந்த நீரை சூடாக்குங்கள் கொதிக்க விட வேண்டாம். பின்னர் ஜாடியை எடுத்து துணியில் பிடித்து மூடியை கழற்றுங்கள் எளிதாக கழன்றுவிடும். —ப்ரியாபாலு

பெண் கல்வி!



ஒரு ஆணுக்கு வழங்கும் கல்வி அவனுக்கு மட்டுமே பயன்படுகிறது. ஒரு பெண்ணிற்கு வழங்கும் கல்வியோ பல தலைமுறைக்குப் பயன்படுகிறது!

- அஜீதா

''அப்பத்தான் அவன் கம்ப்ளேயண்ட் கொடுத்தானு? அப்பகன்னு அவன் கூட ஞார்ல எழுதிக் கொடுக்கலேயா?''

''தெரியலேயே. என் எதிர்க்க எழுதிக் கொடுத்தான். அவ்வளவுதான் எனக்குத் தெரியும்...''

''அதுக்கப்புறமா அந்த வாட்ச், மோதிரம்லாம் எங்க வச்சிருக்கேன்னு கேட்டாங்க. எனக்குத் தெரிஞ்சாத்தானே? நான் எவ்வளவோ சொன்னேன். நான் கவுரவமான உத்தியோகம் பண்றதையும், மத்தையும். நல்ல காலம். நான் பார்க்கக் கொஞ்சம் படிச்சவனுட்டம் இருக்கவும் கொஞ்சத்துக்குக் கொஞ்சம் தப்பினேன். அன்னிக்கே இன்னொரு திருட்டுக் கேஸ் வந்தது. அவன் மாறூல் ஆளாம். அவனை வச்சுப் பந்தாடுறங்க பாருங்க, ஐயோ...''

சொல்லும்போதே அவனுக்கு வேர்த்துக் கொட்டியது. 'நெசமாகவே இவனைத் தொடாமல் இருந்திருப்பார்களா' என் நினைத்துக் கொண்டவன் கேட்கவில்லை.

'மத்தபடி வேறென்ன விவரங்கள் தெரியும்?'

''எனக்குத் தெரிஞ்சது இவ்வளவுதான்.''

மறுநாள் காலையில் நிர்மலாவின் வீட்டில் கணவனைக் கொண்டு போய் விட்டபோது, மௌனமான ஒரு அங்கீகரிப்பு அவள் கண்களில் மின்னியது. கண்களில் படர்ந்த நீரை மறைத்துக் கொண்டாள். தன் மனைவியைப் பார்த்தவுடன் மீண்டும் எல்லாம் நினைவுக்கு வர இடிந்து போய் உட்கார்ந்து விட்டான் ரவி.

''போனுப் போறது போங்க. எப்படியும் இந்தக் கேஸ்ல நாம ஜெயிச்சுடுவோம். மடியிலே கனம் இருந்தாத்தானே வழியில பயம் இருக்கணும். சிவராமன் கிட்டே விவரமாப் பேசுங்க. இப்பத்தான் நல்லா தைரியமா இருக்கணும்...''

என்றவள் இருவருக்கும் சூடாகக் காப்பி கொண்டு வந்து கொடுத்தாள். மனைவியின் அண்மையும், தைரியமும் அவனுக்கு வேண்டும் என்பதைப் புரிந்து கொண்ட சிவராமன் கிளம்பினுன்.

''நான் அப்போ கிளம்பறேன். மேற்கொண்டு கேஸ் என்னிக்கு வர்றதோ அன்னிக்குப் போனுப் போறும்...''

என்று கூறி இருவரிடமும் விடை பெற்றுக்கொண்டான்.

''ஒரு நிமிஷம்...'' என்று உள்ளே சென்ற நிர்மலா இருநூறு ரூபாயுடன் வெளியே வந்தாள்.

''இதை வெச்சுக்குங்க. மேற்கொண்டு ஆகும் செலவுக்கு அப்பப்போ...''

''...இல்லே, பரவாயில்லே. அப்புறம் மொத்தமாப் பார்த்துக்கலாம்...''

''ப்ளீஸ் மறுக்கக் கூடாது...'' அந்தக் குரலில் தொனித்த உறுதி அவனை நிமிர்ந்து பார்க்கச் செய்தது.

'பழைய நிம்மியின் சாயல் முழுவதும் மறையவில்லே. இவன் கௌரவம் பார்க்கிறவன்....'

மௌனமாக வாங்கிக் கொண்டு வெளியே வந்தான்.

''நிர்மலா, ஏது பணம்...?''

ரவியைத் திரும்பிப் பார்த்தாள் நிர்மலா. இவ்வளவு பெரிய கண்டத்திலிருந்து தப்பி வரும் கணவன் முதலில் கேட்கும் கேள்வி!

'என் மேலே எப்படிப்பட்ட அபாண்டம் சுமத்திட்டாங்க பாத்தியா நிம்மி. அந்த நியூஸ் கிடைச்சவுடனே நீ எப்படிப் பதறிப் போயிருப்பே இல்லேம்மா!'

அவ்வளவுகூட வேண்டாம்—

'இந்த இரண்டு நாளா எப்படி இருந்தே தனியா?'

''ஏது பணம்...?''

இதுதான் அவனுக்கு முக்கியமாகப் படுகிறது.

''இரண்டொரு பாத்திரங்களை வச்சு வாங்கினேன். முன்னுடியே இவருக்குக் கொடுத்திருக்கணும். அட்லீஸ்ட் இப்பவாவது கொடுக்கிறதுதான் மரியாதை இல்லேயா... சரி, முதலில் குளியுங்கள். சாப்பிடலாம். நல்லா ரெஸ்ட் எடுத்துக்குங்க...''

''இங்க வாயேன்...''

இவன் ஜெயில்ல இருந்துட்டு வந்திருக்கிறுன் என்ற நினைப்பு ஒரு கணம் மின்னியது. 'சீ, இது என்ன நினைப்பு' என்று உதறிவிட்டு அவனருகே போனுள். சட்டென்று அவளை இழுத்து உட்கார்த்தி வைத்துக் கொண்டவன், அவள் மடியில் முகத்தைப் புதைத்துக் கொண்டான். உடம்பு தூக்கித் தூக்கிப் போட்டது.

"ஐயையே, இது என்னசின்னக் குழந்தை மாதிரி அழுதுக்கிட்டு. அப்பவே சொன்னேன் இல்லே, நாம இனிமேத்தான் தைரியமா இருக்கணும்னு. இதோ பாருங்க. திருப்பித் திருப்பி அதையே நினைச்சுக்கிட்டு இருந்தா கஷ்டமா இருக்கும். எழுந்து குளியுங்க."

அவன் முதுகை ஆறுதலாக வருடிக் கொடுத்தாள். இவனை என்ன செய்வது? சாதாரண மனிதன்! நிச்சயமாக இவன் கைதானதுக்குக் கூட வருத்தப்பட மாட்டான். நாலு பேருக்குத் தெரிந்தால் என்ன வாகும் என்பதுதான் வருத்தம். அற்புதமான ஓவியத்தைக்கூட 'இது என்ன விலை, அம்மாடியோ, இவ்வளவு ரூபாயா' என்று அங்கலாய்க்கும் குணம்தான். அதனால்தான் 'ஏது பணம்' என்று கேட்கத் தோன்றுகிறது. மற்றபடி நல்லவன்.

மிகச் சிரமப்பட்டு அவனைத் திருப்பி ஆறுதலாக இருக்க வேண்டும் என்பதற்காக நெற்றியில் முத்தமிட்டாள். அவன் கட்டிய தாலி ஊஞ்சல் போல ஆடி அவன் நெஞ்சுக்கு நேராக நின்றது.

வாய்தாக்கள், விசாரணைகள், வழக்குகள் ஆறு மாதம் இதே நிலையில் ஓடியது. ரவிக்கு வேலை போய்விட்டது. 'இந்த மாதிரி ஆள் எங்களுக்கு வேண்டாம்' என்று சொல்லி ஐந்து மாதமாகி விட்டது.

அம்மா அப்பாவுக்குத் தெரிய வேண்டாம் என்று நினைத்தது முடியவில்லை. மாதத்துக்கு இரண்டு நாட்கள் ஊட்டிக்குப் போய் வரும் செலவு, அங்கிருக்கும் வக்கீல் பிடுங்கும் பணம், மற்ற செலவுகள். நிர்மலா ஒடுங்கிக் கொண்டே வந்தாள்.

கிராமத்தில் தன் மகனுக்காகப் பார்த்துப் பார்த்து வைத்திருந்த நிலத்தை விட்டுவிட்டார்கள். இது இரண்டே மாதத்தில் கரைந்தது. குடும்பச் செலவுக்கும் சேர்த்தல்லவா இழுக்க வேண்டும். நிர்மலா தங்கள் இருவரையும் நான்கு சுவருக்குள் முடக்கிக் கொண்டாள். ஒரே அறையில் அடைபட்ட இரு கைதிகளைப் போல ஒருவருக்கொருவர் தான் துணை.

மாயா ஜால சினிமாவில் வருவது போல பாத்திரங்களும் பண்டங்களும் மறைந்து கொண்டிருந்தன. சிவராமன் எவ்வளவோ முறை வேண்டியும் அவனிடமிருந்து எந்த விதமான உதவியைப் பெறவும் மறுத்து விட்டாள் அவள். ரவியால் வேறு வேலையும் தேட முடியவில்லை. 'மாதத்துக்கு நான் நாலு நாள்லீவு போடுவேன். ஊட்டிக்குக் கேஸுக்குப்போக வேண்டும். மோசடி குற்றச்சாட்டு என்மீது இல்லேன்னு நான் வழக்காடணும்' என்று சொல்லிக்கொண்டா வேலை தேட முடியும்?

அன்றைக்குக் கடைசி நாள் விசாரணை. ரவியின் வக்கீல், நான் நிச்சயம் ஜெயித்துவிடுவேன் பார்த்துக் கொண்டே இருங்கள் என்று போன முறையே தைரியம் சொல்லி அனுப்பியிருந்தார். சிவராமனும் கேஸில் இருந்த ஓட்டைகளைக் கவனித்திருந்தான். கட்டாயம் ரவி விடுதலை அடைந்து விடுவான் என்ற நம்பிக்கை முழுமையாக இருந்தது.


வரும்போது தன்னுடைய பீஸின் பாக்கியான ஆயிரத்து இருநூறு ரூபாயைக் கட்டாயம் கொண்டு வர வேண்டும் என்று சொல்லியிருந்தார். ரவி திணறினான். நிர்மலா அப்போதுதான் முதன் முதலாகத் தன்னுடைய பிறந்த வீட்டைப் பற்றி நினைத்தாள்.

திருமணத்தின்போது ரவி பாக்கி வரதட்சிணையை வைத்தால்தான் கல்யாணம் நடக்கும் என்று தகராறு செய்தது உண்மைதான். அந்த நேரத்தில் அம்மா ஒன்னே ஒன்னு என்று அருமையாக வைத்திருந்த இரண்டு பவுன் சங்கிலியை விற்றுக் கொண்டு வந்ததும், கல்யாணம் நடந்ததும் உண்மைதான். அதற்குப் பிறகு, 'சீ, இவனும் ஒரு மனுஷனு' என்று ஒதுங்கிவிட்டார்கள்.

ஆனால் அவர்களால் ஒதுங்கிவிட முடிந்தது. தாலி கட்டிக் கொண்ட தோஷத்துக்காக நிர்மலாவால் ஒதுங்க முடியவில்லையே! ரவியின் கைக்குள் அல்லவா அன்றைக்கே அடங்க வேண்டி வந்தது?

இதற்கு யார் மேல் கோபத்தைக் காட்டுவது? தனியொருத்தியாக இவ்வளவு தூரம் கஷ்டப்படுவது அவர்களுக்குத் தெரியாமலா இருந்திருக்கும்? மாப்பிள்ளை மேல் இருக்கும் வெறுப்பைப் பெற்ற பெண்ணின் மேல் காட்டுவதா?

இதற்கெல்லாம் நீங்கள்தான் காரணம் என்று திருப்பிச் சொல்ல எவ்வளவு நேரம் பிடிக்கும்? இவனைத் தேர்ந்தெடுத்ததும் இவனே நான் பார்த்தவர்களில் உயர்ந்தவன் என்று கொண்டாடியதும் யார்? கௌரவத்



யோசனை

சாதம் மிகவும் குழைந்து விட்டதா. சாதம் வடிக்கும் போது பாதி எலுமிச்சம் பழத்தை பிழிந்து விடுங்கள். பின்னர் சாதத்தை வடித்தால் முல்லை மொட்டுப் போல சாதம் பொல பொல வென்று இருக்கும். —ப்ரியாபாலு

துவையல்களின் பயன்கள்



- தூதுவளைத் துவையல் நுரையீரல் வலிமை பெறவும் உடலில் தாதுக்களை நலிவடையாமல் பாதுகாக்கவும் நினைவாற்றல் பெருகவும் உடலுக்கு வலிமை கிட்டவும் உதவுகிறது.
- புதினா — கறிவேப்பிலைத் துவையல் பசியைத் தூண்டவும் உடலுக்கு போதிய சூட்டினைத் தரவும், ஜீரணசக்தி அதிகமாகவும் உதவுகிறது.
- வேப்பிலைத் துவையல் போலிப் பசியை நீக்கவும் உடல் மெலிவதைத் தடுக்கவும், சோகை, வயிற்றுக் கிருமிகள் நீங்கவும் உதவுகிறது.
- பிரண்டைத் துவையல் மல நோய்க் கடுமை நீங்கும்.
- எள்ளுத் துவையல் குடும்பக் கட்டுப்பாட்டுக்கு இயற்கையான மருந்தாகிறது.

- ஏ. பாரதி சங்கர்

துக்காக ஊரையே கூட்டிக் கல்யாணம் செய்துவிட்டுக் கடைசி நிமிஷத்தில் மனம் கசந்து வெளியேறுவது யார்? திருப்பிக் கேட்டால் இதை எத்தனை நெஞ்சங்கள் தாங்கும்?

வெகு நேரம் யோசித்தபடி அமர்ந்திருந்தாள் நிர்மலா. பிறகு மளமளவென்று எழுந்து முகம் கழுவிப் பொட்டிட்டுக்கொண்டாள். பட்டுப் புடவைகள் எல்லாம் எப்பொழுதோ அடகுக் கடைக்குப் போய் விட்டன. போன தீபாவளிக்கு அவன் வாங்கிக் கொடுத்திருந்த நைலக்ஸைக் கட்டிக் கொண்டாள்.

எங்கேயோ வெளியே போயிருந்த கணவனுக்காகக் காத்திருந்தாள். அவனும் யார் யாரோ ஆபீஸ் நண்பர்களைப் பார்த்துவிட்டு வருவதாகப் போயிருந்தான்.

முகம் சிவக்க ரவி வந்தபோது பன்னிரண்டாகி விட்டது. மனைவியின் அலங்காரத்துக்குக் காரணம் கூடக் கேட்காமல் சுருண்டு உட்கார்ந்து கொண்டான்.

அவனுக்கு முதலில் தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தாள். போன காரியம் என்ன வாயிற்று என்று கேட்கவில்லை. முகத்தைப் பார்த்தாலே தெரிந்தது.

"பிரபு....பிரபு..."

மகனைத் துரத்திக் கொண்டு ஓடிவந்தான் சிவராமன். அவனுக்குப் போக்குக் காட்டி 'ஜல்ஜல்' என்று கொலுசுகள் சப்திக்க ஓடிக் கொண்டிருந்தான் பிரபு.

கோசலை இவர்களின் விளையாட்டை மௌனமாகப் பார்த்துக் கொண்டிருந்தாள். அன்றைக்கு ஞாயிற்றுக் கிழமையானதால் அவன் எங்கேயும் வெளியே போகவில்லை.

பக்கத்து வீட்டில் பொருட் காட்சிக்காகக் கிளம்புகிறவர்களின் சந்தடி அமளிப்பட்டுக் கொண்டிருந்தது. இரண்டுபக்கமும் காது கொடுத்துக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

"கோசலை, சாயந்திரம் டிபனுக்கு அடை பண்ணு. சிவராமன்கூட இன்னிக்கு எங்கேயும் வெளியே போகலையே..." பின்னால் வந்து நின்ற மாமியாரின் கட்டளைக்கு உடனே தலையாட்டினாள். அவள் சமையலறைக்குப் போகும்போது ஏற்கனவே ஊற வைத்திருந்த அரிசி, பருப்பை எடுத்துக் கொடுத்தாள் மாமியார்.

'அப்படியானால் என்னைக் கேட்டது சும்மா ஒரு பேச்சுக்குத்தானா? அரைப்பதற்கு ஒரு ஆள் வேண்டும். அதுதான் விஷயமா...'

நாக்கு துறுதுறுவென்றது. கேட்டுவிட வேண்டுமென்று. 'ஏம்மா, நான் அரைக்க வேண்டும், சமைக்க வேண்டும் என்று கட்டளை போடத் தெரிகிறதே. உங்கள் மகனுக்கும் சொல்லக் கூடாதா. அவனை எங்கே யாச்சும் கூட்டிக்கிட்டுப் போ. இன்னிக்கு வீட்லதான் இருக்கேன்னு. கல்யாணமான புதுசிலேயே இல்லை. இப்பத்தானா...'

எதையும் அவள் கேட்கவில்லை. மௌனமாகப் பாத்திரங்களை வாங்கிக் கொண்டு கல்லுரல் பக்கத்தில் வைத்துவிட்டு, தண்ணீர் ஊற்றிக் கழுவ ஆரம்பித்தாள்.

இங்கிருந்து பார்க்கும்போதே பி. எஸ்.ஸி பட்டம் வாங்கிய நாளன்று எடுத்த படம் ஹாலில் பளிச்சென்று தொங்குவது தெரிந்தது. 'இதற்குத்தானா... இவ்வளவுதானா...'

வாசலில் இன்னும் சிவராமன், பிரபுவின் துரத்தல்கள் முடியவில்லை.

"வேற வழியே உனக்குத் தோணலையா நிர்மலா....?"

ரவியின் குரலில் முதன் முதலாகத் தெரிந்த பச்சாதாபத்தில்தான் கண்கள் அடைத்துக் கொண்டதே தவிர அவள் எடுத்த முடிவு தப்பாகத் தோன்றவில்லை.

"வேற வழி என்ன சொல்லுங்க? உங்க அம்மா அப்பா இருக்கிறதுக்கு நிழல்னு ஒரு ஓட்டு வீடு வச்சிக்கிட்டிருக்காங்க. அதைக்

கேக்கறதா? ஸாரி, இப்படிப் பட்ட கிரிமினலுக்கு உதவி செஞ்சேன்னு தெரிஞ்சாலே என்னை வேலையிலிருந்து எடுத்துடுவாங்கன்னு வாசல்லியே சொல்லியனுப்பிச்ச அண்ணனை மீறி அப்பாவைப் பார்க்கிறதா? எதச் செய்யச் சொல்றீங்க?''

துடைத்து விட்ட செப்புச் சிலை மாதிரி நின்று கொண்டிருந்த நிர்மலாவைப் பார்க்கும்போது தொண்டையை அடைத்துக் கொண்டது. இதற்கு என்ன விலை போடுவது என்று மனம் கணக்கிட்டது.

'நாம ஏன் இவ்வளவு நாளா பணத்தின் பின்னாடிப் போனோம்? இதோ வானத்துக்கும் பூமிக்குமா நிக்கிற இவ முகத்தோட ஒளியில இல்ல குளிச்சிருக்கணும்? இவ என்ன நினைக்கிறான்னு ஒரு தடவையாவது யோசிச்சிருப்போமா? இவ ஏன் நம்பளை ஒரு நாள் கூட ஒரு முழம் பூக்கூட கேட்டதில்லைன்னு சிந்திச்சிருக்கோமா? ஒருவேளை இவளைத் தெரிஞ்சுக்க ஒரு சந்தர்ப்பமாத்தான் இப்படி ஒரு இக்கட்டைக் கடவுள் நமக்குக் கொடுத்தானோ?'

யோசிக்க யோசிக்க பிரமிப்பாக இருந்தது.

அந்த ஆறு மாசங்களில் ஒரு நாள் கூட அவள் சோர்ந்து உட்காரவில்லை. கண் கலங்கவில்லை. அவன் நத்தையாய் உள்ளுக்குள் சுருட்டிக் கொண்டபோதுகூட வாரியெடுத்து ஆறுதல் சொல்லியிருக்கிறாள். ஒவ்வொன்றாக, ஒவ்வொன்றாக பாத்திரம், நகை, வீடு, நிலம் என்று போனபோதும் கலங்கவில்லை. யார் சொன்ன பழியையும் கேட்கவில்லை.

இது வெறும் அவனுக்கும் இன்னொரு மனிதனுக்கும் இடையே நடக்கும் வழக்குதான். ஆனால் எத்தனை பேருக்கிடையே அவன் வழக்காட வேண்டியவனாக இருக்கிறான்? அலுவலகத்துக்கு, பக்கத்து வீட்டுக்காரர்களின் அலட்சியப் பார்வைக்கு, சொந்தக்காரர்களின் ஒதுங்கலுக்கு எல்லாம் எதிர் வழக்காட முடியுமா? எத்தனை பேரிடம் போய் நெஞ்சைத் திறந்து தான் நிரபராதி என்று காண்பிக்க முடியும்? எந்த அக்கினியில் போய் இறங்கிப் பரிசுத்தத்தை விளக்குவது?

நிர்மலாவிடம் முழுமையாக ஒடுங்கிவிட்டான். அவளோ விசுவரூபமாகி, அவன் நடத்திக் கொண்டிருந்த குருக்ஷேத்திரப் போரில் பாதுகாக்க ஆரம்பித்து விட்டாள். எல்லோரும் கைவிட்டபோது அக்கினி சாட்சியாக அவன் கட்டிய திருமாங்கல்யத்தைக் கழட்டிக் கொடுத்தாள். இன்னும் அவன் கெஞ்சிக் கொண்டிருந்தான்.

''நிர்மலா, வேற வழியே இல்லையா?''

''இல்லே. உங்களுக்கும் நேரம் ஆயிட்டிருக்கு. இன்னும் கொஞ்ச நேரத்துல சிவராமன் வந்துவிடுவார், கூட்டிக்கிட்டுப் போறதுக்கு. நான் போய்ப் பணம் வாங்கிட்டு வந்துடறேன். இங்கேயே இருங்க...''

வாசலில் இறங்கியபோது நெருப்புத் தணலாக சூரியன் எரிந்து கொண்டிருந்தான். முகமெல்லாம் எரிந்தது. எதையும் கவனிக்காமல் மடமடவென்று நடக்க ஆரம்பித்தாள் நிர்மலா.

பஸ் ஸ்டாண்ட் அங்கே யிருந்து அரை மைல் தூரம் இருந்தது. அவ்வளவு தூரம் நடந்து பஸ் பிடித்து மாம்பலம் போய்ச் சேர்ந்தால்தான், இதை விற்க முடியும்.. இங்கே யாரும் வாங்கிக் கொள்ள மாட்டார்கள். கடைகளில்தான் விற்க வேண்டும். அதை முடித்துக் கொண்டு சிவராமன் வருவதற்குள் வந்து சேர்ந்துவிட வேண்டும்.

தலை பறக்க, முகம் எரிய அவள் பஸ் பிடித்துப் போய்ச் சேரும் போது 'உணவு இடைவேளை' என்று கதவைச் சாத்த ஆரம்பித்துக் கொண்டிருந்தான்.

''மூணு மணிக்கு மேல் வாங்களேம்மா. இப்ப என்ன முகூர்த்தமா தப்பிப் போகிறது?''

என்று கேள்வி கேட்ட கடைக்காரரை நிமிர்ந்து பார்த்தாள் நிர்மலா. 'முகூர்த்த வேளையில் கட்டினதை நாளைக்கு முகூர்த்தம் தப்பிடக்கூடாதேங்கறதுக்காக விக்கறேம்பா'

''இல்ல சார். ரொம்ப அர்ஜெண்ட். அதனாலதான்.''


ஏற்கனவே கடையில் வியாபாரத்தை முடித்துக் கொண்டவர்கள், இந்தக் கடைசி நேரக் கஸ்டமரை விநோதமாகப் பார்ப்பதை கவனிக்கும் நிலையில் இல்லை அவள்.

கடைக்காரர் சலித்துக் கொண்டே அவள் கொடுத்த திருமாங்கல்யத்தை உரைத்துப் பார்த்தார். ஒன்றரை பவுனுக்கு மேல் கனத்துக் கொண்டிருந்த அதற்கு ஆயிரம் முறை யோசித்து, வாதாடி ஆயிரத்து முன்னூறு ரூபாய் கொடுத்தார். அவள் பதில் பேசாமல் வாங்கிக் கொண்டாள். பணத்தைப் பர்ஸில் திணித்துக் கொண்டாள்.


யோசனை

எரிந்து கொண்டிருக்கும் பல்ப் மேல் இரண்டு சொட்டு சென்டைத் தெளியுங்கள். அறை முழுக்கக் கம கம வென்று வாசனை பரவும்.

—ப்ரியாபாலு



யோசனை



காபி டிகாக்ஷன் ஸ்டாராங்காக இறங்குவதற்கு காபி பில்டரில் அடியில் ஒரு சிட்டிகை கல் உப்பைப் போட்டு வைக்கவும். பிறகு மேல் பாகத்தில் காபி பொடியைப் போட்டு வெந்நீரை விடவும். டிக்காஷன் படுஸ்ட்ராங்காய் இறங்கும்.

- ஆர். ஜெயா

'இதோடு இப்படிப் பணம் புரட்டும் அவஸ்தை இனி இல்லை. நாளையோடு கேஸ் முடிஞ்சுடும். ரவி கண்டிப்பாக விடுதலை ஆயிடுவார்னு சிவா சொன்னாரே. இப்படிப் பணத்துக்குக் கஷ்டப்பட வேண்டாம்.

என்று நினைக்கும் போது சந்தோஷமாக இருந்தது. 'இனி பணம் புரட்ட என்ன பொருள் இருக்கிறது' என்று மனதில் எழுந்த கேள்வியை அடக்கிக் கொண்டாள்.

அந்தத்தடவை நிர்மலாவும் அவர்களுடன் பயணப்பட்டாள், தீர்ப்பை தான் உடனே தெரிந்து கொள்ள வேண்டும் என்ற பிடிவாதத்துடன்.

"மைலாட்! பிராஸிக்யூஷன் தரப்பினருடைய வாதம் முடிந்து விட்டது. இனி என்னைக் கொஞ்சம் பேச அனுமதியுங்கள்!" என்று எழுந்தார் ரவியின் தரப்பு வக்கீல்.

நீதிமன்றம் மௌனம் சாதித்தது. ரவி இனிதான் தன் தலையெழுத்தே நிர்மாணிக்கப் படப் போகிறது என்று நிச்சயத்தில் அவரையே உற்று கவனித்துக் கொண்டிருந்தான்.

"என்னுடைய கட்சிக்காரரை ஊட்டி பஸ் ஸ்டாண்டில் பார்த்தவுடன் இவர்தான் என் வாட்சையும் மோதிரத்தையும் திருடியவர் என்று குற்றம் சுமத்தி போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துக் கொண்டு போயிருக்கிறார் எதிர்கட்சிக்காரர். அங்கேதான், அப்போதுதான் அவர் புகாரும் எழுதிக் கொடுத்திருக்கிறார்.

என்னுடைய கட்சிக்காரர் இவரை ஏமாற்றி அவருடைய பொருட்களை வாங்கிக் கொண்டு, கூடலூருக்கு பணம் என்று ஏமாற்றி வெற்றுக் காகிதங்களைக் கொடுத்தனுப்பினாராம். தவறான முகவரி என்று தெரிந்தவுடனேயே அங்கிருக்கும் காவல் நிலையத்தில் கேட்டிருக்கிறார்கள். சரி, ஆனால் ஏன் அங்கே கம்ப்ளெயண்ட் எழுதிக் கொடுக்கவில்லை. எழுத்து மூலமான புகாரை ஏன் இவர் தரவில்லை? இரண்டு நாட்கள் பேசாமல் இருந்து விட்டு, திடீரென்று ஊட்டியில் ஒருவரைப் பிடித்து இவர்தான் குற்றவாளி என்று எதிர்க்கட்சிக்காரரே காட்டிக் கொடுக்கிறார்; புகாரும் கொடுக்கிறார் என்றால் காவல் துறையினருக்கு அங்கே வேலையே கிடையாதே!

திடீரென்று ஒருவர் மற்றொருவரைப் பிடித்துக் கொண்டு வந்து இவர்தான் போன மாதம் என் வீட்டில் திருடினார் என்றால்எப்படி ஒத்துக் கொள்ள முடியும்? குற்றம் சாட்டப் பட்டவரின் ஐடெண்டிபிகேஷனை எப்படி நிரூபிப்பது? போன மாதமே புகார் கொடுத்திருக்க வேண்டும்; காவல் துறையினர் அந்த ஒரு மாதம் முழுவதும் திருடியவனைக் கண்டு பிடிக்க முயற்சி எடுத்திருக்க வேண்டும். அதற்குப் பிறகு திருடியவனை அகஸ்மாத்தாக திருடு கொடுத்தவர் பார்த்துப் பிடித்து வந்தால் அதில் பொருள் இருக்கிறது. அதை விட்டு விட்டு திருடனைப் பிடித்து விட்டு புகார் எப்படி கொடுப்பார்கள்?

இரண்டாவதாக, என்னுடைய கட்சிக்காரர் மோசடி செய்ததாகக் கூறப்பட்ட வாட்சையும், மோதிரத்தையும் இதுவரை காவல் துறையினர் கைப்பற்றவும் இல்லை. அதைக் கோர்ட்டில் கொண்டு வந்து சமர்ப்பிக்கவுமில்லை.

மூன்றாவதாக, எதிர்க்கட்சிக்காரர் ஆறுமுகத்தை நான் சில கேள்விகள் கேட்க அனுமதிக்க வேண்டும்!

நீதிபதி தலையசைத்தார். ஆறுமுகம் என்னும் அந்த இளைஞன் வந்து நின்றான்.

"ஆறுமுகம் என்பது நீங்கள்தானே?"

"ஆமாம்!"

"உங்களை ஏமாற்றி உங்களுடைய வாட்சையும், மோதிரத்தையும் வாங்கி மோசடி செய்தது, இதோ நிற்கும் ரவிச்சந்திரன்தான் என்று சொல்கிறீர்கள், இல்லையா?"

"ஆமாம்!"

"உங்களிடமிருந்து இவை இரண்டையும் வாங்கிக் கொண்டு இவர் என்ன செய்தார் என்று புகாரில் கொடுத்திருந்தீர்கள்?"

ஆறுமுகம் உற்சாகமாகப் பேசினான். "புகார் கொடுத்தது மட்டுமில்லே. இப்பவும் எனக்கு நல்லா ஞாபகம் இருக்கு. தம்பி, நீ கூடலூர் போய்ச் சேர ஒருவேளை லேட்டானாலும் ஆகும். அதனால் மொதலாளிக்கு போன் பண்ணி நீ வர்ற தகவலைச் சொல்லிடறேன்னு சொன்னாரு. நான் சரின்னு சொன்னே

அவல் மசாலா பொங்கல்

தேவையான பொருட்கள் :

அவல் கால் கிலோ
அரிசி கால் கிலோ
பாசிப்பருப்பு 100 கிராம்
துவரம்பருப்பு 100 கிராம்
கடலைப்பருப்பு 1 டீஸ்பூன்
உளுத்தம்பருப்பு 1 டீஸ்பூன்
மிளகாய் வத்தல் 8

கடுகு, பெருங்காயம், மஞ்சள்பொடி, கறிவேப் பிலை, கொத்துமல்லி, இஞ்சி, முந்திரிபருப்பு, ஒரு மூடி தேங்காய்: புளி சிறிதளவு. நெய்: 50 கிராம்.

செய்முறை :

தேங்காயைத் துருவிப் போடவும். பிறகு அரிசி பாசிப்பருப்பு, துவரம் பருப்பு, அவல் முதலிய வற்றை வறட்டு வாணலியில் போட்டு வாசனை வரும்வரை கிளறி இறக்கவும். (கொதித்து) வேகவிடவும். முறைப்படி ஆனவுடன் எடுத்து இறக்கவும். மீதமுள்ள நெய்யைவிட்டுக் கிளறி, கறிவேப்பிலை, கொத்துமல்லி தூவி இறக்கி பரி மாறவும். சுவையும், சத்தும் மிகுந்ததான இப் பொங்கல் மாலைவேளை டிபனுக்கு ஏற்றது! (தொட்டுக்கொள்ள தேங்காய்சட்னி அல்லது அவியல் செய்து கொள்ளலாம்)

வுடனே, அங்கேயே பஜார் வாசல்ல இருந்த போன்ல பேசினரு....''

''அப்படியா, அதாவது பஜார் வாசல்ல இருந்த பப்ளிக் போன்லேயிருந்து பேசினர், இல்லையா.....?''

''ஆமாங்க.....''

''பப்ளிக் போனுக்கு எவ்வளவு காசாகும்?''

இதையேன் திரும்பத் திரும்பக் கேட்கிறர் இவர் என்று அவனுக்குப் புரியவில்லை. இருந்தாலும் இந்தச் சாதாரண கேள்விக்குப் கூடப் பதில் தெரியாத முட்டாளா நான் என்ற வீராப்போடு பதில் சொன்னன்.

''எங்கேயும் போல அம்பது காசுதாங்க.''

''அப்போ அம்பது காசு நாணயத்தை டெலிபோனில் போட்டுக் ஊட்டியிலே யிருந்து கூடலூர்ல இருந்த மொதலாளிக்கு அவர் பேசினத நீ பாத்தே, கேட்டே இல்லையா?''

''சத்தியமா நான் பாத்தேன். கேட் டேன்.''

''தட்ஸ் ஆல்....'' சிறு புன்னகையோடு முடித்துக் கொண்ட அவர் நீதிபதியைப் பார்த்தார்.

''மை லார்ட். என்னுடைய கட்சிக்காரர் ஐம்பது பைசா நாணயத்தைப் போட்டு ஊட்டியிலே இருந்து கூடலூரில் இருக்கும் தன்னுடைய முதலாளிக்கு பப்ளிக் போனில் பேசியதாகக் கூறுகிறர். அதாவது 'உள்ளூர்க் காலில்' பேசியதாக அர்த்தம். ஆனல் கூடலூருக்கும், கோயம்புத்தூருக்கும் நேரடி யான தொலை பேசித் தொடர்பு கிடையாது. டிரங்கால் போட்டாலன்றிப் பேச முடி யாது.....''

''வக்கீல் சார்....'' ஆறுமுகம் வெளிறிப் போனன்.

கோர்ட்டில் சளசளவென்று பேச ஆரம் பித்து விட்டார்கள்! 'ஒரே பாயிண்ட்லேயே அடிச்சுட்டான்யா எமகாதகன்.'


வழக்கு கலகலத்துப் போய் விட்டது. ''ஆயிரம் குற்றவாளிகள் தண்டிக்கப்படாமல் போகலாம். ஆனல் ஒரு நிரபராதி தண்டிக்கப் பட்டுவிடக்கூடாது. என்பதில் நீதிமன்றம் கவனமாக இருக்கிறது. திரு ரவிச்சந்திரன் மேல் சுமத்தப்பட்ட மோசடிக் குற்றச்சாட்டு நிரூபிக்கப்படாததால் அவரை விடுதலை செய் கிறேன்..''

விடுதலை....?

'ஜிவ்'வென்று மனம் ஆகாயத்தில் விடு பட்டுப் பறந்தது. நிர்மலா முழுமையாக முகம் மலர கூண்டில் நின்று கொண்டிருந்த ரவியைப் பார்த்தாள். அதே சமயத்தில் கண்களில் நீர் துளிக்க நிர்மலாவைப் பார்த் துக் கையசைத்தான் ரவி.

அந்தக் கண நேரத்துச் சந்தோஷத்தில் முகம் மலரச் சிரித்துக் கொண்டிருக்கும், அவர்களின் எதிர்கால வாழ்க்கை பின்னல்களை நினைத்து நெற்றியைத் தேய்த்துக் கொண் டான் சிவராமன்-வெளி உலகத்து கைதியாக!

யோசனை



மஞ்சள் முள்ளங்கியை வேகவைக்கும் போது ஒரு சிட்டிகை சர்க்கரையைச் சேர்த்து வேகவையுங்கள். முள்ளங்கி மிகவும் வாசனை யுடனும், சுவை மிகுந்தும் இருக்கும்.

—ப்ரியாபாலு

வீட்டை நாமே அழகுபடுத்தலாமே!

— இந்திரா பழனியப்பன்



அழகாகக் கலை உணர்ச்சியுடன் விளங்குவதைப் பார்த்தவர்கள் கேட்கும் 'கேள்வி என்ன இதெல்லாம், உன் மனைவி செய்ததா? ஓ! உன் பெண்ணின் கைத்திறனு? உன் சகோதரியின் படைப்போ?' என்பதுதான். பெண்ணைச் சம்பந்தப்படுத்தியே கேள்விகள் எழுகின்றன. ஆம்! கலைக்கும், அழகுக்கும் நேர்முகத் தொடர்புடையவள் பெண்ணே. தன்னைச் சுற்றி அழகுபடுத்தி, கலைச் செறிவுடன் நேர்த்தியாக வைப்பதில் பெண்ணுக்கு நிகர் பெண்ணே.

இல்லறத்தைக் குறித்துக் கூறும்போது இல்லத்தரசி என்றுதான் கூறுகிறார்களே அன்றி இல்லத்தரசன் என்பதில்லை. பெண்களுக்குத்தான் நிறத்தைப் பற்றிய கவனமும், உணர்வும் இருப்பதாக மனோ விஞ்ஞான நூல் கூறுகிறது.


அழகுபடுத்துவது என்றவுடனேயே நிறையப் பொருட் செலவு செய்து கடைகளிலிருந்து வாங்கி வைப்பது தான் என்று எண்ண வேண்டாம். அதிகச் செலவில்லாமல், அழகான பொருட்களை எல்லோரும் செய்ய இயலும் சுலபமான வழிகள் பல உள்ளன. மத்திய தர வர்க்கத்து மக்கள் மட்டுமேயன்றி, பொருள் நிலையில் தாழ்ந்தவர்களும் குறைந்த செலவில் செய்யும் பொருட்களைச் செய்து பணம் சம்பாதிக்கலாம். இவ்விதம் செய்துள்ள பலரின் பழக்கத்தால் எனக்கு ஏற்பட்டுள்ள அனுபவத்தைக் கூறுகிறேன்.


நான் பல வருடங்கள் வட நாட்டில் வசித்தபொழுது, அங்கு அக்கம் பக்கத்தில் இருந்த பெண்களின் சுறுசுறுப்பு, தங்களுக்கு வேண்டியவற்றைச் சிக்கனமாகத் தாங்களே தயாரித்துக் கொள்ளும் விதம், (துணி தைத்தல், கம்பளி வேலை செய்தல், பூ தைத்தல், பானங்கள் தயாரித்தல், சிற்றுண்டிகள், பிஸ்கட், கேக், ரொட்டி முதலியவற்றைச் செய்யும் நேர்த்தியானது என்னை ஆச்சரியப்பட வைத்திருக்கிறது. தங்களுக்கு மட்டுமே யன்றி மற்றவர்களுக்கும் செய்து கொடுத்தும், சொல்லிக் கொடுத்தும் பணம் சம்பாதிக்கிறார்கள். பணம் சம்பாதிப்பதால் மட்டுமன்றி, தாங்களே செய்துள்ளதை அணிவதாலும், மற்றவர்களுக்குச்சொல்லித் தருவதாலும் படும் சந்தோஷமே அலாதி.

நான் சென்னைக்கு வந்த பிறகு இங்கு எனக்கு ஏற்பட்ட அனுபவம் இதற்கு நேர் எதிர். இங்கு கடையில் வாங்குவதிலும் வம்பளப்பதிலும் (பெரும்பான்மையோர்) செலவிடும் பொருள் செலவு, நேரச் செலவும் பேசியும், வம்பு பேசியும் நேரத்தை விரயமாக்குவதைத் தவிர்த்து, குறைந்தபட்சம் தங்கள் இல்லத்துக்கும், தங்களின் குழந்தைகளுக்கும் வேண்டிய பொருட்களையாவது கற்றுச் செய்தால், பொருட் செலவும் குறையும், மனச் சந்தோஷமும் ஏற்படும்.

நான் செய்தது, நான் செய்து கொடுத்தது என்று வரும்போது, மற்றவர்கள் அதைப் பார்த்து புகழ்ந்தும், சற்றுப்பொறுமையுடன் பார்க்கும்போது நம் மனம், ஒரு பறவை சந்தோஷமாகப் பறப்பது போல் இருக்கும். இந்த விதமான மனச் சந்தோஷத்துக்கு ஈடு இணையே இல்லை.

எனது இல்லத்தில் சமையல் அறையில் நுழைந்து சிற்றுண்டி தயாரிக்க ஆரம்பித்தேன். பொருட்களோ அதனதன் இடத்தில் நேர்த்தியாக அமர்ந்திருந்தது. நான் என் கையைச் சுவரின் பக்கம் ஒரு சாடிப் பொம்மை





யிடம் கொண்டு சென்றேன். என்ன பார்க்கிறீர்கள்? ஓ, அதுவா? மழைக் காலங்களில் தீப்பெட்டிகள் ஈரமாகி, நமுத்துப் பல குச்சிகள் உரசியும் எரியாமலும் வீணாகிறது. அவ்விதம் ஆகாமல் இருக்க, ஒரு கலை உணர்வுடன் செய்ததுதான். வாங்கியது அல்ல. பொருட் செலவு கேட்கிறீர்களா? ரூபாய் ஒன்றரைதான். என்ன அப்படிக் கண் விழித்துப் பார்க்கிறீர்கள்? நிஜம்தான். செய்வதும் மிகச் சுலபம்.

அதே போல இன்னொரு பொருளும் நமக்கு ரொம்ப அவசியம். உங்கள் கணவரிடம் சொன்னால் ஒத்துக்கொள்வார். என்ன என்று கேட்கிறீர்களா?

அப்போதுதான் நீங்கள் பட்டியல் போட்டுக்கொடுத்த சாமான்களை வாங்கி வந்திருப்பார். எல்லாவற்றையும் அதனதன் இடத்தில் பிரித்து, கொட்டி சமையல் ஆரம்பிப்பீர்கள். அப்போதுதான் ஞாபகம் வரும், உப்பில்லை என்பது. திரும்பியும் யார் ஓடுவது? முணு முணுத்துக் கொண்டே கணவர்தான்.

எல்லாவற்றையும் முடித்து விட்டு அவசரம் அவசரமாகத் தலையை வாரிக் கொள்ளலாம் என்றால் தேங்காய் எண்ணெய் பாட்டில் காலி. இப்படிச் சின்னச் சின்ன விஷயங்களைக் காலை அவசரங்களில் - மறந்து விடுவது சகஜம். எனவே தீர்ந்துவிடும் ஒவ்வொன்றையும் ஒரு காகிதத்தில் குறித்துக் கொண்டீர்களானால் கணவர் கேட்கும்போது ஒன்று விடாமல் சொல்லி அவர் சிரமத்தைக் குறைப்பதுடன் பாராட்டையும் பெறலாம்.

(இவ்வளவு சாமான் வாங்கி வர வேண்டும் என்று கேட்கும் கணவன்மார்களை என்ன செய்வது என்று என்னிடம் கேட்காதீர்கள்!)

சரி, இப்படிக் குறிக்கப் பல காகிதங்களை இணைத்த அட்டையையும் அழகாகத் தயாரித்துச் சமையலறையில் மாட்டலாம்.


முதலில் மைதா மாவு கூழ் தயாரித்துக் கொள்ளுங்கள். அதுதான் விலைமிகவும் குறைவானது. அதைப் பூச்சி அரித்து விடாமல் இருக்க காப்பர் சல்பேட் சிறிதே கலந்து கொள்ளலாம்.


இனி நாம் தயாரிக்கலாமா?

தேவையான பொருட்கள் :

1. நமக்குத் தேவையான உருவத்தில் படங்கள். (கரடி, பூனை, யானை, வீடு என வரையும் ஆற்றல் உள்ளவர்கள் வரையலாம். பத்திரிகைகளில் வரும் படங்களைக் கத்தரித்துக்கொள்வதும் சுலபம்.)
2. கலர் துணித் துண்டுகள். (தையல் தெரிந்து வீட்டில் தைப்பவர்களுக்கு கந்தல் துண்டுத் துணிகள் நிறையக் கிடைக்கும். இல்லையென்றால் உங்கள் தையற்காரரிடம் கேட்டால் குப்பையில் போடுவதைச் சந்தோஷமாக உங்களிடம் அள்ளிக் கொடுப்பார்.)
3. Felt paper (இப்படிக் கடையில் கேட்டால் 5 அல்லது 6 வர்ணங்களில் கிடைக்கும். விலை குறைவானது)
4. கத்தரிக்கோல்.
5. குழந்தைகள்பயன்படுத்தி முடித்திருக்கும் நோட்டுகளின் அட்டைகள்.

செய்முறை :





அட்டையின் மேல் நீங்கள் தேர்ந்தெடுத்த படத்தை மைதா பேஸ்டினால் சுத்தமாக ஒட்டுங்கள்.

பிறகு Felt paper ஐ, அந்தப் படத்தின் கண், காது, மூக்குக்குத் தகுந்தாற்போல வெட்டுங்கள். கறுப்புக் காகிதத்தையோ, நீலத்தையோ கண்களைப் போல வட்டமாக வெட்டி, படத்தின் மேல் ஒட்ட வேண்டும். உங்களுக்குப் பிடித்த வர்ணத்தில் படத்தின் சட்டைக்கு ஒட்டலாம்.

புருவத்துக்கு, சட்டையின் காலர் போன்ற வற்றுக்குத் துண்டுத் துணிகளை அளவாக வெட்டி ஒட்டலாம்.

(படம் 1) இதைக் கடிதங்கள், பத்திரிகைகள் வைக்க உபயோகப்படுத்தலாம். Do not Disturb என்ற பகுதியில் மட்டும் நான்கைந்து துண்டுத் துணிகளை வைத்துக் கனமான பகுதியாக ஒட்ட வேண்டும். அந்தப் பகுதியின் மேற்புறம் திறந்த வாயாக இருக்க வேண்டும். அதற்குள் கடிதங்களைச் செருக லாம்.

மேலே உள்ள கூம்புகள் எப்படி வந்தன தெரியுமா? கல்யாணங்களில் கொடுத்த பைகளில் பட்டு நூல் இருக்குமில்லையா? அவற்றை இப்படி அழகாக வளைத்து ஒட்ட வேண்டியதுதான்.

(படம் 2) சமையல் அறையில் உங்கள் குறிப்பேட்டுப் பொம்மைதான் இது. இப்படி அழகான டிசைன் தயாரித்துக் கொண்டு காகிதங்கள் இணைந்த அட்டையை அதன் நடுவே செருகி வைக்கலாம்.

(படம் 4) இந்தக் கரடியிடம்தான் வத்திப் பெட்டி இருக்கிறது. அதன் கால்கள் நடுவே பெட்டி போன்ற அமைப்பைச் செய்து கொள்ள வேண்டும். இதற்கு ஒரு தகரத்தை வளைத்துப் பின் அடிக்கலாம். அதன் மேல் கலர்க் காகிதத்தை ஒட்டிவிட வேண்டும். வத்திப் பெட்டி நமத்துப் போகாமல் இருக்கும்.

(படம் 3) இந்த அழகான டப்பாக்கள் எப்படி வந்தன? குழந்தைகள் இதில் சந்தோஷமாகத் தங்களுடைய பேனா, பென்சில்களைப் போட்டு வைக்கின்றனர் இல்லையா?

காலியான பவுடர் டப்பாக்கள், சோப்பு பவுடர் டப்பாக்களின் மேல் இப்படிப்பட்ட அழகான டிசைன் போட்ட காகிதங்களை ஒட்ட வேண்டியதுதான். பெரிய அட்டைப் பெட்டிகளைக் குப்பைக் கூடையாக வெறுமனே வைக்காமல் அதனை இதே முறையில் அழகுபடுத்தி வைக்கலாம்.

(படம் 5) இது சமையல் அறை கைப் பிடித் துணிகளை வைக்கும் ஸ்டாண்ட். துணிகளைக் கதவின் மேல் போட்டு வைக்காமல் இதில் சொருகி வைக்கலாம். எப்படிச் செய்வது?

உடைந்த கண்ணாடி வளையல்களின் மேல் துண்டுத் துணிகளை மெதுவாகச் சுற்றிக் கொண்டே வாருங்கள். அவரவர் கற்பனைக்குத் தகுந்தாற்போல வெவ்வேறு நிறம் மாற்றி மாற்றி வரும்படியாகக் கூடச் சுற்றலாம். நல்ல தடிமன் வந்தவுடன் அதை ஒரு ஆணியில் சொருகிப் பிடி மாதிரி வையுங்கள். அதில் இப்போது கைப்பிடித் துணிகளைச் சொருகலாம்.



படங்கள்: டி.இ.ரமணன்

ஆண் — பெண் காதலைத் தூயதாக்கி, தேக விகாரம் எதுவும் இல்லாத உன்னத உயரங்களுக்கு உயர்த்தினால் அதுவே பக்தி யாகிவிடும்.

காதலனும் காதலியும் காதலும் மூன்றும் இணைந்து ஒன்றுவதை பிரேமானந்தம் என்று சொல்வார்கள்.


ஆங்கிலத்தில் Platonic love என்பது இந்த வகையைச் சேர்ந்தது.

பக்திக்கும் இதுபோன்ற தூய காதலுக்கும் அதிக வித்தியாசமில்லை.

ஆற்றங்கரையில் அழகிய இளப் பெண் ராமியைக் கண்ட சண்முகவருக்கு புலன்கள் ஸ்தம்பித்துவிட்டன.

சுவாசம் நின்றுவிட்டது. இமைக்காமல் அவளைப் பார்த்தார். உடம்பில் எந்த விதச் சலனமும் இல்லை. உயிரில்கூட இல்லை. ஆனால் ஆழமான ஆழத்துள் கிடக்கும் அவன் ஆன்மாதான் கண் விழித்தது.

இந்த அழகி யார்? இந்த இளம் பெண் யார்? மயக்கும் விழிகள் உள்ள இந்தப் பருவ மங்கை யார்? இந்த ஆற்றில் துணி துவைத்



துக்கொண்டு நிற்கிறாளே! என்னைப் பார்த்து இவளும் மெய் மறந்து நிற்கிறாளே! ஏன் துவைப்பதை நிறுத்தினாள்? ஏன் இப்படி என்னைப் பார்வையால் பருகுகிறாள்?

சண்டிதாசர் யௌவ்வனம் நிரம்பிய வாலிபர். வசீகரமும் உள்ளவர். விசால நெற்றியும் அழகான மேனியும் உடையவர்.

கல்வி கேள்விகளில் சிறந்தவர், அறிவாளி. அந்தணர் குலத்தில் பிறந்து விசாலாட்சி கோவிலில் பூசாரியாக இருந்தார்.

ராமி துணி வெளுக்கும் இனத்தைச் சேர்ந்தவள். அபூர்வ அழகு அவளிடம் இருந்தது. பக்குவ வயது. ஒரு தெய்வ கன்னிகை போல் நின்றாள்.

வங்காள தேசத்து ஆற்றங்கரை ஓரம் சுமார் 430 ஆண்டுகளுக்கு முன் எதேச்சையாக நடந்த சந்திப்பு இது.

வித்தியாசமான ஜாதிகளைச் சேர்ந்த இவர்களது வாழ்க்கையில் இந்தச் சந்திப்பு எவ்வளவு மகத்தான மாறுதலை ஏற்படுத்தியது!

சண்டிதாசர்

ஸ்ரீ வேணுகோபாலன்

ராமி வெறும் அழகி மட்டுமல்ல. அறிவு உள்ளவள். ஒழுக்கம் உள்ளவள்.

அந்த யௌவன இளைஞரைப் பார்த்து மெய்மறந்து நின்றாள்.

ஒரே ஒரு பார்வைதான். ஜன்மங்களாக உள்ள உறவை அது உடனே உணர்த்திக் காட்டியது.

இருவரும் தங்கள் நிலை இழந்தார்கள். மற்றவரை மனத்தில் நினைக்கத் தொடங்கினார்கள். அந்த நினைப்பு அவர்களுக்குக் கற்கண்டான ஆனந்தங்களை வாரி வழங்கத் தொடங்கியது.

தினமும் சண்டிதாசர் ஆற்றுப் பக்கம் வந்தார். ராமி அவளுக்காகவே காத்திருந்தாள். இருவரும் கண்களால் பேசினார்கள். பிரிந்தார்கள்.

இந்தக் கண் பாஷைதான் அவர்களது நீண்ட நாள் பேச்சு. அதுவே அவர்களுக்குப் போதுமானதாக இருந்தது. ஒரே ஒரு பார்வை! அது ஒரு நாளுக்குப் போதும்! அதையே மனத்தில் உருட்டி அவர்கள் ஆனந்த நிலையில் இருந்தார்கள்.

கண்களின் நெருக்கம் வெகு நாட்களுக்குப் பிறகு முறுவலாகியது. ஒன்று இரண்டு வார்த்தைகளாகப் பரிணமித்தது. அவர்களது நேயம் அதிகமாகிவிட ஒருவரை ஒருவர் பிரிந்திருப்பது கஷ்டமாகியது.

அந்த விரகம் பொறுக்க முடியாத நிலைக்கு வந்தது. சண்டீசர் ராமியைத் தமது கோயிலுக்கு அழைத்தார். கோவிலில் பணிபுரியும் வேலைக்காரியாக வைத்துக் கொண்டார்.

விசாலாட்சி கோயில் அது. சண்டிதாசர் மனம் நெகிழ்ந்து பூஜை செய்யும் பூசாரி! ராமி வந்ததால் அவரது கடவுள் பக்தி குறையவில்லை. இன்னும் அதிகமாகியது. அவரது எல்லாக் காரியங்களுக்கும் அவள் உதவினாள். அவரது மனம் உருகும் பிரார்த்தனையில் அவளும் கலந்து கொண்டாள்.

கோயிலில் ராமியை வேலைக்காரியாக நியமித்து சண்டிதாசரும் அவளும் இணக்கமாக சுடுபாட்டில் இருப்பது வெளியே மற்றவர்களுக்கு அருவயையைக் கொடுத்தது.

ஊரில் அவர்களைப் பற்றிய வதந்திகள் உலாவத் தொடங்கின.

ஜனங்கள் ஆத்திரம் அடைந்தார்கள்.

புனிதமான கோவிலில் இவர்கள் கேளிக்கை வாழ்வு வாழ்வதா என நினைத்தார்கள்.

ஒரு நாள் கோவிலுக்குள் புகுந்து இருவரையும் வெளியே தள்ளினார்கள்.

இருவரும் மனம் தளரவில்லை.

அவர்கள் ஒருவருக்கொருவர் இருக்கும் பிரேமையும், இருவருக்கும் கடவுள் மீது இருக்கும் பக்தியும் அதிகமாகியது.

ராமி இந்த நிலையில் சண்டிதாசரின் மனத்தை ராதா – கிருஷ்ணர் மீது திருப்பி விட்டாள்.

இருவரது பிரேமைக்கும் அந்த ராதா–கிருஷ்ண பக்தி மிகவும் ஒத்ததாக இருந்தது.

சண்டிதாசர் மனம் உருக ராதா–கிருஷ்ண லீலைகள் பாடத் தொடங்கினார்.

அவருக்கு ராமி ராதையாகத் தோன்றினாள்.

ராமிக்கும் சண்டிதாசர் தனது கண்ணனாகவே தோன்றினார்.

வெறும் ஆண் – பெண் காதலே ஆன்மீக உயரங்களுக்கு ஏறிக் கடவுள் பிரேமையாகப் பரிணமித்தது.

இருவரும் பாடித் திரிய, அவர்களது பாடல்கள் வங்காளம் முழுதும் பிரசித்தமாகி விட்டது.

பண்டிதர், பாமரர் நாவுகளில் அவர்கள் கீதங்கள் தவழத் தொடங்கின.

'தும் லே ஆமார் ஆமி லே தோமார்
ஸஹ்ருத்கே ஆசே ஆர்!
கேதே 'ராமி' கய சண்டிதாஸ் பினு ஜகத்
தேகி ஆந்தார்!

'நான் உம்முடையவள். நீங்கள் என்னுடையவர். என்னது என்று வேறு யாரும் எனக்கில்லை.

சோகம் நிரம்பிய ராமி சொல்கிறாள்: ஓ, சண்டிதாஸ்! நீங்கள் இல்லாவிடில் உலகம் எனக்கு அந்தகாரம்!'

அந்த ராமியை சண்டிதாசர் நமஸ்கரிக்கிறார்.

ராமியையே சண்டிதாசர் தமது பாடல்களில் கடவுளுக்குச் சமமாக ஏற்றி அவளையே வழிபடத் தொடங்கினார்.

இன்னொரு பாடலில்,

''துணி துவைப்போர் இனத்தைச் சேர்ந்த ராமியே!

உனது இரு தாமரைப் பாதங்களில் சரணடைகிறேன்.

அவைகள் எனக்குக் குளிர்ச்சி தந்து என் மனத்தை இதமாக்குகின்றன.

உன்னை வணங்குகிறேன். உன்னைப் பற்றிய பாமாலைகளை உன் கழுத்தில் பூமாலைகளாக அணிகிறேன்.

நீதான் சகல அறிவுக்கும் கடவுள்!

என் கண்களின் வெளிச்சம் நீ!

துணி துவைக்கும் இனப் பெண்ணாக ராதை தான் தோன்றியிருக்கிறாள்.

கேவலம் உடல் விகாரங்கள் அவளை நெருங்காது.

ராமியின் மீதுள்ள சண்டிதாசரின் இக் காதல், ஒளிரும் பொன்னுக்குச் சமானம்

இன்னொரு பாடலில்,

''நான் யாருக்குக் கவலைப்படுகிறேன்? சமூகத்தை நான் புறக்கணிக்கிறேன். சட்ட திட்டங்களை நான் ஒதுக்குகிறேன். என் அடைக்கலம் கடவுள்தான்!'' என்கிறார்.

பக்திப் பாடல்களில் கண்ணன் லீலைகளைப் புகுத்தி சண்டிதாசரும், ராமியும் பாட, அவர்கள் பாடல் கேட்பவர் மனத்தையெல்லாம் போதை ஆக்கியது.

புகழ் பெற்ற ஆஸ்தான கவிஞரான வித்தியாபதி வெகு தூரம் நடந்து வந்து சண்டிதாசரைச் சந்தித்து அவரை வெகுமானித்துச் சென்றார்.


அறுபது ஆண்டுகள் வாழ்ந்த சண்டிதாசர் வங்காளத்தையே உன்மத்தமாக்கி விட்டார்.

ராமியும் அவரும் ஒரு நாள் ஒரு கட்டடத்தில் தங்கி இருக்க, அது இடிந்து விழுந்து இருவரையும் சமாதியாக மூடி விட்டது. (கி.பி. 1477)



சென்ற இதழில் வெளியான குழந்தைகள் காப்பகம் பற்றிய கட்டுரை மிகவும் சிறப்பாக இருந்தது. வேலைக்குப் போகும் பெண்களுக்கு வீட்டில் குழந்தைகளைப் பார்த்துக்கொள்ள ஆள் இல்லாவிட்டால் இந்த காப்பகங்கள் அவர்களுக்கு வரப்பிரசாதம். குழந்தைகள் பத்திரமாக இங்கு இருப்பதால் பெண்கள் நிம்மதியாக அலுவலக வேலையைப் பார்க்க முடிகிறது. நாங்களும் இது போல் காப்பகம் வேண்டும் என்று எங்கள் வங்கி அதிகாரியிடம் கேட்டபோது, அவர் பொறுப்பில்லாமல், ''குழந்தையைப் பார்த்துக்கொள்ள வேறு யாரும் இல்லையென்றால் வேலையை ராஜினாமாச் செய்துவிட்டு வீட்டில் இருங்கள்'' என்று கூறிவிட்டார். எங்களுடைய இந்தப் பிரச்னை என்று எப்படித் தீருமோ?

''மூர்த்திப்ரியா''



நாம் வெளி நாட்டு துணிவகைகளை வாங்கும்போது, அவை நல்லதுணிகளா என்பதை அறிய ஒரு சிறு நூலிழையினை அத்துணியிலிருந்து எடுத்து பொசுக்கிப் பார்க்கும்போது அத்துணி மெழுகுபோல் உருகி நின்றால் தைரியமாக வாங்கலாம். அன்றி அது திரித்திரியாக எரிந்து பொசுங்கி விட்டால் போலியானது என்பதை அறியலாம்.

- அகிலா

வேலைக்குச் செல்லும் பெண்ணே!

நித்யாமூர்த்தி



அன்புள்ள வனிதா,

சமீப காலமாக, மிகப் பிரபலமாக அடிபடும் ஒரு கேள்வி, ஆபீஸா அல்லது வீடா?

இந்தக் கேள்வி பெண்களை நோக்கி எழுப்பப்படும் ஒரு பிரச்னைக்குரிய கேள்வியாக நிற்கிறது.

பட்டங்கள் ஆள்வதும், சட்டங்கள் செய்வதும் புதுமைப் பெண் என்று பாரதியார் பாடிவிட்டுப் போனார்.

அறிவு பாகுபாடு செய்யப்படக் கூடாது. ஆண், பெண் இருபாலாருக்கும் கல்வி பொதுவாக இருத்தல் வேண்டும். இல்லையேல் சமூகம் முன்னேற முடியாது என்பது காந்திஜியின் வாதம்.

இருப்பினும், இன்னமும் பலர், ஆண், பெண் ஏற்றத் தாழ்வு உணர்ச்சிகளில் வாழ்கின்றனர்.

சம்பாதிப்பவன் ஆண். குடும்பத்தைக் கவனிப்பவள் பெண் என்று இருந்த காலம் மாறிக்கொண்டு வருகிறது என்ற உண்மையை நாம் உணர்வதே யில்லை.

அந்தக் காலத்திலும் வேலைக்குச் சென்ற பெண்கள் இருந்தார்கள். கணவனின் வருமானம் போதாவிட்டால், அல்லது, குடும்பத்தில் தகப்பன், சகோதரன் என்பவரின் வருமானம் பற்றுக்குறையாக இருந்தால் அந்த மனைவியோ, தாயோ, சகோதரியோ, வீட்டில் இருந்தபடியே அப்பளம், வடகம் இட்டு விற்பாள, அல்லது தெரிந்தவர்கள் வீட்டில் சமையல் வேலை செய்வாள்.

சற்றுக் கீழ்நிலையாசிப் பெண்கள், நாலு வீடு பத்துப் பாத்திரம் தேய்த்து, குடும்பத்தைக் காப்பாற்ற முனைவாள். வயல் வெளிகளில் நாற்று நடுவதும், போரடிப்பதும் பெண்கள் செய்த வேலைகள்தான். அன்றைய பெண்ணின் கல்வி அறிவு அவ்வளவே. அதனால் உடல் உழைப்பால் அதை ஈடுகட்ட முயன்றாள்.

இன்றைய பெண் படித்தவள். ஆண்களுக்குச் சரிநிகர் சமானமாக, ஆபீஸில் வேலை செய்யும் திறமை வாய்ந்தவள்.

''வேலைக்குச் செல்லும் பெண்வேண்டாம்'' என்று கூறிய காலம் போய், இப்போது வேலை பார்க்கும் பெண்ணுக்குத் திருமண மார்க்கெட்டில் தகுதி வந்திருக்கிறது. காரணம், பொருளாதாரப் பிரச்னைகள்.

கணவனும் மனைவியும் சம்பாதித்தால், குடும்பத்தின் தேவைகளை நன்றாகக் கவனிக்கலாம் அல்லவா?

''மனைவி என்பவள் வீட்டைக் கவனிப்பதுதான் நல்லது. களைத்து வரும் கணவனுக்கு உபசரித்துப் பணிவிடை செய்ய ஒருத்தி இருக்க வேண்டாமா?''

''உண்மைதான். கதைகளில் வருவது போல், ஆபீசிலிருந்து வீடு திரும்பும் கணவனுக்கு டிபனும், ஆவி பறக்கும் காப்பியுமாக

மனைவி வந்து நின்றால் படிக்க அழகாகவே இருக்கிறது. அதே சமயம், ஒரு புடவைக்கும் மற்ற சிறு தேவைகளுக்கும், கண்ணீர் அஸ்திரப் பிரயோகம் செய்தாள் என்று ஜெண்டலாகக் கூறும்போது நமக்கு எவ்வளவு கோபம் வருகிறது!''

வசதியான வருமானம் இருந்துவிட்டால் அந்தக் குடும்பத்தில் தேவைகளைப் பற்றிய சிந்தனை ஏன் ஏற்படப் போகிறது?

பற்றாக்குறை விழும்போதுதான் குடும்பத்தில் பிரச்னைகள் தலை தூக்குகின்றன. அதன் பிறகு சில வசதிகள்... ஒரு ரேடியோ அல்லது டி.வி. அல்லது பீரோ... இப்படி அவரவர் தகுதிக்கேற்றவாறு ஆசைகள் எழும்போது, ஏக்கமும், பெருமூச்சும் நம்மையும் அறியாமல் எழும்பிவிடுமே!

கணவன் அல்லது குடும்பத் தலைவரின் வருமானம் பற்றாக்குறையாகப் போகும் போது, நிச்சயம் வேலை செய்யும் பெண் ஒரு முக்கிய தேவையாகிறாள்.

பம்பாய், டில்லி போன்ற பெரிய நகரங்களில் விலைவாசியின் ஏற்றத்தில், ஆண், பெண் இருபாலாரும் வேலைக்குச் செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டு விடுகிறது.

''பெண்கள் போட்டி போட்டுக் கொண்டு வேலைக்குப் போவதால்தான் ஆண்களுக்கு வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாகிறது என்பது ஒரு சாரார் வாதம்.

''தலைவன் கொண்டு வருவதை வைத்துக் கொண்டு, சிக்கனமாக வாழ்ந்து, வீட்டிலேயே இருப்பதை விட்டு விட்டு, எதற்காக ஆபீசுக்கு ஓடி நாயாக உடம்பைத் தேய்த்துக்கொள்ள வேண்டும்'' இது வேறு ஒருவர் கூறும் குற்றச்சாட்டு.

இவர்கள் ஓர் உண்மையை மறந்து விடுகிறார்கள். இயல்பாகவே எந்தப் பெண்ணும், தனது குடும்பம், குழந்தைகளை விட்டு வெளியில் போய் உழைக்க விரும்ப மாட்டாள்.

வேலைக்குச் செல்லும் பெண்ணின் முக்கிய நோக்கம்...

ஒன்று, அப்பாவுக்கு உதவியாகச் சம்பாதித்துக் கொடுத்தால், பிற்பாடு திருமண சமயத்துக்கு அந்தப் பணம் உதவும்.

இரண்டு, படித்த படிப்பை வீணாக்காமல், வேலை பார்த்து வந்து, கொஞ்சம் பணம் சேர்த்து வைக்கலாமே!

மூன்று, திருமண மார்க்கெட்டில் வரதட்சிணை, சீர் செனத்திகளுக்கு, முன்னங்கிப் பத்தை போல இந்தப் பணம் உபயோகமாகலாம்.

நான்கு, வேலை பார்க்கும் பெண்ணென்றால், மாதா மாதம் கணிசமான தொகையை வீட்டுக்குக் கொணரும் பெண் என்ற முறையில், கல்யாண மார்க்கெட்டில் கிராக்கி அதிகரிக்குமே!


ஐந்து, திருமணத்துக்குப் பின்னரும் குடும்பத் தேவைகளில் ஒரு கைகொடுக்கலாமே!

இப்படிப் பல காரணங்களைச் சொல்லிக் கொண்டே போகலாம். இதையெல்லாம் எதற்காகக் குறிப்பிடுகிறேன் என்றால், நீ ஆபீஸில் வேலைக்குப் போகிறாய். அங்கே பலர் பலவிதமாகப் பேசலாம். பேசுவார்கள். அதைப் பற்றியெல்லாம் கவலைப்படாதே.

ஏனெனில், நாளைக்கு உன் குடும்பத்தில் ஏற்படும் பற்றாக்குறைகளை அவர்கள் இட்டு நிரப்பப் போவதில்லை. உன் கஷ்ட நஷ்டங்களுக்கு ஈடுசெய்ய அவர்கள் முன்வரப் போவதில்லை.

அதனால், கஷ்டங்களைச் சமாளித்து, கருமமே கண்ணாக, பொறுப்போடு இரு.

கரப்பான் பூச்சிகளை விரட்டப் பல மருந்துகள் இருக்கலாம். இருந்தாலும் சுலபமான, ஆபத்தில்லாத வழி ஒன்று இருக்கிறது. வேப்பெண்ணெயைத் தெளித்தால் உடனே பலன் கிடைக்கும்.







Wrist-watch கண்ணாடியில் கீறல் இருந்தால், Plain nail polish (Colour less) தடவினால் கீறல் தெரியாது.

—ஜனனி முரளி



அழகானது எது?

ஓர் ஓவியர் உலகிலேயே மிக மிக அழகான படம் ஒன்றை வரைய விரும்பினார். இதுபற்றி அறிய ஓர் உபதேசியாரிடம் சென்றார்.

''உலகிலேயே மிகவும் அழகான பொருள் எது?'' என்று கேட்டார்.

''நம்பிக்கை'' என்றார் உபதேசித்தார்.

பின்னர் ஓவியர் ஓர் இளம் பெண்ணைக் கண்டு இதே கேள்வியைக் கேட்டார். அவள் உடனே ''அன்பு'' என்று கூறினாள்.

மேலும் அவர் கொஞ்ச தூரம் சென்ற பிறகு ஒரு இராணுவ வீரரைச் சந்தித்து, இராணுவ வீரரிடம் இதே கேள்வியைக் கேட்டார்.

''உலகில் சமாதானம் தான் மிக மிக அழகானது. போர் மிக மிகக் கோரமானது. எங்கே சமாதானத்தைக் காண்கிறீர்களோ, அங்கே நீங்கள் அழகைக் காணலாம்''. என்றார் இராணுவ வீரர்.

''நம்பிக்கை, அன்பு, சமாதானம்'' — இவற்றை எப்படிச் சித்திரத்தில் தீட்டுவது என்று குழம்பியபடியே ஓவியர் வீட்டை நோக்கி நடையைக் கட்டினார். வீட்டை அடைந்த போது குழந்தைகளின் கண்களில் நம்பிக்கை ஒளி விடுவதைக் கண்டார். மனைவியின் அன்பு ஒளி விடுவதைக் கண்டார். நம்பிக்கை, அன்பு இவற்றை ஒருங்கிணைத்துக் கட்டப்பட்ட சமாதானம் என்றகட்டடத்தை தம் வீட்டிலேயே அவர் கண்டார். உடனே அவர் உலகிலேயே மிக மிக அழகான ஓவியத்தைத் தீட்டினார். அச்சித்திரம் ''**வீடு**''

—பிரேமா வீரப்பன்

ஒரு வியாபார ரகசியம் அம்பலமாகிறது!

விடுமுறை நாட்களில் கிராமத்துக்குச் சென்றுவிட்டு வரும்போது, நல்ல புத்துருக்கு நெய் வாசனையில் மயங்கி, கூடுதலாக வாங்கி வந்து, சில நாட்கள் கழித்துக் கெட்டுப் போன மாதிரி வாசனை வருகிறதோ என்ற ஐயத்தில் ஸ்வீட்கள், பலகாரங்கள், செய்து காலி பண்ணும் சகோதரிகள், இனி அப்படிச் செய்ய வேண்டியதில்லை!

நெய் கெட்டுப்போவதற்குள்ள சாத்தியக் கூறுகள் தெரியும்போதே அதில் அரை ஸ்பூன் தயிரை உறை ஊற்றுவது போல் கலந்து மூடி வைக்கவும். மறுநாள், வாணலியில் அந்த உறை ஊற்றிய நெய்யைக் கொட்டி, 8, 10 முருங்கை இலைகளையும், ஒரு கல் உப்பும் போட்டு உருக்குங்கள். நெய் கொதித்து தயிர் வாசனை நீங்கி இனிய மணம் வரும்போது கீழே இறக்கி வடிகட்டி ஆறிய பின் பாட்டிலில் சேமித்து வைத்துக்கொள்ளவும். புதியதாகத் தயாரித்த நெய் போன்று வாசனையாக இருக்கும்.

மொத்த அளவில் நெய் தயாரித்து விற்பனை செய்யும் நபர் ஒருவர், இரகசியமாக வைத்துக்கொள்ளும்படி கூறிய குறிப்பை 'யான் பெற்ற இன்பம்....' என அம்பலப்படுத்தி விட்டேன்.

—பாத்திமுத்து சித்தீக்

ஐயோ வெய்யில் வந்தாச்சா?



உடம்பெல்லாம் அரிக்கும் இந்த வேர்க்குரு, படை யெடுக்க ஆரம்பித்து விட்டது. படைபடையாக அணி வகுத்து நிற்கும் இந்த வேர்க்குருவிற்கு என்ன செய்யலாம்?

ரொம்பவும் சுலபமான, செலவில்லாத வழி யொன்று இருக்கிறது. ஆயுர்வேதக் கடை களில் சைனுக் களிமண் என்று கேளுங்கள். எட்டணாவுக்கு இரண்டு கை நிறையத் திணிப் பார்கள்.

அதில் சிறு உருண்டையை எடுத்துக் கொண்டு கொஞ்சம் நீரில் போடுங்கள். தானே கரைந்துபோகும். வேர்க்குரு இருக்கும் இடங்களை முதலில் நீரால் சுத்தம் செய்து விட்டு ஈரம் போகத் துடைத்து விடுங்கள். பிறகு களிமண் கரைசலை அந்த இடங்களில் சீராகத் தடவிவிடுங்கள். ஒரு மணி நேரம் கழித்துத் தண்ணீரில் கழுவிப் பாருங்கள். இல்லையென்றால் இரவில் படுக்கப் போகு முன் தடவிக் கொண்டு மறுநாள் காலையில் முகம் கழுவிக் கண்ணாடியில் பாருங்கள்.

ஆமாம், வேர்க்குருவெல்லாம் எங்கே போச்சு?



வெயில் காலத்தின் ஆரம்பமான இப்பொழுது வெயில் கட்டடிக்க ஆரம்பித்து விட்டது. கொஞ்ச நேரம் வெளியில் தலை காட்டினாலே தலையைச் சுற்றிக்கொண்டு வருகிறது. வெயில் வேளையில் வெளி யில் போய் வேலை செய்துதான் ஆகவேண்டும். இந்தத் தலைச்சுற்றலிலிருந்து தப்பிக்க என்ன வழி?

எல்லார் வீட்டிலேயும் வெங்காயம் இருக் கிறது இல்லையா? அதுதான் வழி. வெளியில் போகும்போது ஒரு துண்டு வெங்காயத்தை பையில் போட்டுக் கொண்டு போங்கள். மயக்கமோ, தலை சுற்றலோ வந்தால் வெங் காயத்தைக் கசக்கி நன்றாக முகருங்கள். அதனுடைய கார நெடி உங்களுடைய தலை சுற்றலைச் சரிப்படுத்திவிடும்.

கடுமையான வெய்யிலை நம்மைவிட ராஜ ஸ்தான் மக்கள் அதிகமாக அனுபவிப்பவர்கள். வெயில் வேளையில் வெளியில் போகும் ஒவ்

வொருத்தரிடமும் வெங்காயம் இருக்கும். அதுதான் அவர்களுக்குக் கைகண்ட மருந்து.



ஐயோ வெய்யில் வந்தாச்சா?

வெய்யில் காலம் வந்துவிட்டால் தயிர், மோருக்கெல்லாம் கேடுகாலம்தான். முதல்நாள் இரவு உறை குத்தினாலும் மறுநாள் மோர் புளிப்புதான்! இதுவே இந்தக் கதியென்றால் இரண்டு மூன்று நாள் மோர் மீந்துவிட்டால் கேட்கவே வேண்டாம். இதற்கு ஏதேனும் வழியுண்டா?

கண்டிப்பாக உண்டு. வெய்யிலினால் சூடு ஏறிவிட்ட உச்சந்தலையில் இந்தப் புளித்த மோரைத் தேய்த்து அரை மணி நேரம் ஊறுங்கள். பின்னர் நிறையத் தண்ணீர் விட்டுத் தலையை அலசுங்கள். சோப்போ, சீயக்காயோ தேவையில்லை. முடி பளபளவென்று வெய்யிலில் மின்னும்.

சர்க்கரையும் உப்பும் தேவையான அளவு போட்டுக் குடித்தாலும் உடம்புக்கு நல்லதுதான்.

★ இந்தியாவில் முதன் முதலில் 1852-ல் வெளிடப்பட்ட வெண்ணிறமான தபால் தலை (அரை அணா) விக்டோரியா மகாராணியின் உருவத்தைக் கொண்டிருந்தது.


★ இந்தியத் துறவிகள் கவிஞர்கள் வரிசையில் 1952-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் முதல் நாள் வெளியிடப்பட்ட இரண்டு அணா மதிப்புள்ள மீராவின் உருவம் பொறிக்கப்பட்ட தபால் தலையே, சுதந்திர இந்தியாவில் ஒரு பெண்மணியின் உருவம் தாங்கி வந்த முதல் தபால் தலையாகும்.

★ பெண்ணுரிமை பற்றி அதிகமாகப் பேசப்படும் அமெரிக்காவில் இது வரையில் இரு பெண்மணிகளே காபினெட் அங்கத்தினராக நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் 1933முதல் 1945 வரை பணியாற்றிய திருமதி பிரான்சிஸ் பெர்க்கின்ஸும், 1953 முதல் 1955 வரை இருந்த திருமதி. ஒவடா ஹாபியும் ஆவர். சுதந்திரம் இடைந்து இரு நூற்றூண்டுகள் ஆனாலும் அமெரிக்காவில் பெண் அதிபராக இன்னும் யாரும் வரவில்லை.

★ செல்வி முத்தம்மா தான் இந்தியாவின் முதல் பெண் தூதுவர். (Ambassador)

★ முதலாவது பெண் முதல்வர் திருமதி. சுசேதா கிருபளானி ஆவார்.

★ திருமதி ஷானோ தேவிதான் முதலாவது சபாநாயகி.



இராம. குமாரசாமி



● கோடைக் காலம் துவங்கிவிட்டதென்று ஸ்வெட்டர் பாடத்தை நிறுத்தி குரோஷா வுக்குத் தாவிவிட்டீர்களே!

குமாரி ராதிகா

● மங்கையர் மலரைப் பார்த்து நான்கு நாள்களில் 16 ஊர் பெயர் எழுதி துண்டு துண்டாகக் கிழித்து வீட்டின் மூலை முடுக்கு களில் போட்டுப் பார்த்தேன். மூட்டைப் பூச்சியும் ஒழியவில்லை, ''எதற்கு இப்படி வீட்டை குப்பை கூளமாக்குகிறீர்கள், யார் பெருக்குவார்களாம்'' என எனது இல்லத் தரசி சண்டைக்கும் வந்து விட்டாள்.

எஸ்.எஸ். மணி, திருவனந்தபுரம்

● லட்சக் கணக்கான ரசிகர்களின் செவி களில் தேனிசை மழை பெய்து அவர்களது கவலைகளை மறக்கச் செய்யும் இசைக் குயில் லதா. அவரது கடந்த கால வாழ்க்கைச் சம்ப வங்களைப் படித்தபோது என்னுள்ளம் சோக கீத அலைகளால் உருகிவிட்டது.

கிரிஜா மணாளன், திருச்சி — 20

● ''எப்போதும் பெண்'' என்கிற சுஜாதா வின் புதுமையான கட்டுரை — கவிதை — பிலா ஸபி — கதை — செக்ஸ் கலந்த ''காக்டெயில்'' சாப்பிடுவதற்குக் கொடுத்து வைத்திருக்க- வேண்டும். அதிலும் முதல் அத்தியாயமே அடுத்த மாதம் வரையில் காத்திருக்க வேண் டுமா என்கிற ஏக்கத்தைக் கொடுக்கிறது!

ப. மூர்த்தி, பெங்களூர்-21

● ஏப்ரல் 81 மங்கையர் மலரில் திரு அசோக மித்திரனின் 'மாறுதல்' மென்மையான மன இயல் ஓட்டத்தை பங்கஜத்தின் மூலம் துல் லியமாகக் காட்டியுள்ளார். நிம்மியின் அபி லாஷை, ஆதங்கம், உத்வேகம், கோபம், ஏலாமையின் தீவிரத்தை இவ்வளவு நுண் ணிய முறையில் எழுத்தில் கொண்டுவந்துள்ள நேர்த்திக்குப் பாராட்டுக்கள். இக்கதையின் மூலம் சில பிரச்னைகளுக்கு (குடும்பத்தில்) வழிகாட்டிய மங்கையர் மலருக்கும் அசோக மித்திரனுக்கும் நன்றி.

''எப்போதும் பெண்!'' சுஜாதாவா...! இவ்வளவு நேர்த்தியாக எழுதுவது... திருஷ்டி சுற்றிப் போடுங்கள். ஐயோ வெய்யில் வந் தாச்சா! பயனுள்ள குறிப்பு. மொத்தத் தில் மங்கையர் மலர் பயனுள்ள மாத மலர்.

தீபப்ரியா, காட்பாடி

● யானைக்கும் அடி சறுக்கும். சுஜாதாவுக் கும் அடி சறுக்கியிருக்கிறது. ''எப்போதும் பெண்ணில்'' நிகழ்ச்சி நடந்து ஒரு மாதம் கழித்து ரெண்டு நாள் தள்ளிப் போனதாம்!' ''உட்காருவதாக இருந்தால் நிகழ்ச்சி நடந்த 10 முதல் 20 நாளைக்குள் உட்கார்ந்திருக்க வேண்டும். நிகழ்ச்சி நடந்த ஒரு மாதம் கழித்து என்றால் 40 முதல் 50 நாட்கள் ஆகி யிருக்க வேண்டுமே!

—ஜெயா சீனிவாசன், மன்னார்குடி




● ''எப்போதும் பெண்'' — சுஜாதாவின் தொடர் ஆரம்பமே விறுவிறுப்பாக இருக் கிறது. பாமர மக்களும் புரியத்தக்க மிக எளிய நடையில் விஞ்ஞானக் கருத்துக்கள்!

எந்தப் பகுதியை முதலில் படிப்பது, எதை விடுவது என்று போட்டி போட்டு மங்கையர் மலர் மணம் கமழ்ந்து நிற்கிறது என்றால் அது மிகையில்லை.

பாத்திமுத்து சித்திக், நியூடெல்லி

● நித்யா மூர்த்தியின் 'வேலைக்குச் செல் லுச் செல்லும் பெண்ணே!' எனும் கட்டுரை என்போன்ற வேலைக்குச் செல்லும் அனைத் துப் பெண்களுக்கும் அவசியம் தேவையாகும். இதில் கூறியிருப்பதுபடி நாங்கள் நடந்து கொண்டால் பிரச்னைதான் ஏது? தயவு செய்து இதுபோன்ற பயனுள்ள கட்டுரை களை அடிக்கடி வெளியிடுங்கள். இது குறித்து ஒரு விவாதத்துக்கு ஏற்பாடு செய்து, கலந் துரையாட விட்டால் என்ன?

ஏ. நூர்ஜஹான், விருத்தாசலம்



குழந்தைக்கு 3 மாதமாகும்போது, பால் மட்டும் போதாது

உங்கள் குழந்தைக்குத் தேவை ஃபாரெக்ஸ்

குழந்தையின் உன்னத திட உணவு

3-ஆம் மாதம்—திட உணவு துவங்கும் காலம்.

3 மாதம் ஆனபின், குழந்தையின் வளர்ச்சிக்குப் பால் மட்டும் போதாது. குழந்தை சுறுசுறுப்பாயும் விரைந்தும் வளரும் சமயம்—பாலில் கிடைப்பதை விட அதிக கலோரிகள் தேவை. குழந்தைக்கு திரவ உணவைக் குறைக்கும் வகையிலும் அதிக கலோரிகளை வழங்கவும் மென்றுத் தின்னப் பழகவும் திட உணவு தேவை.

3-ஆம் மாதம் அதிக இரும்புச் சத்து தேவை

பிறந்த 2-4 மாதங்கள்தான் குழந்தைக்குத் திட உணவு துவங்க சிறந்த சமயம். பால் நல்ல உணவாயிருப்பினும் இரும்புச் சத்துப் பற்றாக் குறையினால் அது முழுமையாவதில்லை. ஆகவே, குழந்தைக்கு இரும்புச்சத்து அடங்கிய திட உணவுத்தேவைப் படுகிறது.


—Dr. Subhash C. Arya, "Infant & Childcare for the Indian mother"

ஏன் டாக்டர்கள் ஃபாரெக்ஸ் சிபார்சு செய்கிறார்கள்?

குழந்தைக்கு திட உணவைத் துவங்குவதற்கு தனிப்படத் தயாரிக்கப்பட்டது—ஃபாரெக்ஸ். இதில் புரதம், கார்போஹைட்ரேட், கொழுப்பு, கால்ஷியம், பாஸ்பரஸ், மற்றும் வைட்டமின்கள் உள்ளன. இரும்புச் சத்தும் அதிகமுள்ளது—ஃபாரெக்ஸ். ஆகவே, குழந்தையின் விரைந்த முழு வளர்ச்சிக்கு உன்னதமான திட உணவாகிறது—ஃபாரெக்ஸ்.

இலவசம்! குழந்தையின் முதலாண்டு புத்தகத்திற்கு, தபால் தலையுடன் 50 பைசா எழுதுங்கள்.

த.பெ. எண் 19119,
பம்பாய்-400025.





டாக்டர்கள் சிபாரிசு செய்வது ஃபாரெக்ஸ்

குழந்தையின் விரைந்த முழுவளர்ச்சிக்கு உன்னதமான திட உணவு

CASGLF-10-203 TAM

Regd. No. TN MS (S) 231